32°C
தெளிவான வானிலை
காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h
ஈரப்பதம்: 48%
காற்றமுத்தம்: 1008 hPa
வெளிச்சத் தெளிவு: மிக நன்று
சூரியோதயம்: 05:23
சூரியஸ்தமனம்: 18:04

# உதயன்

பக்கங்கள்
யாழ். - 20/=
வன்னி - 20/=
கொழும்பு - 30/=

சுடர்: 29 கதிர்: 218 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 18, புதன் 02.07.2014

stay connected with: uthayan.print uthayanprint *Uthayan - A lively National Tamil Daily*

# பொதுபல சேனாவை அரசே பாதுகாக்கிறது

## பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டுகின்றார் ரணில்



விக்கிரமசிங்க.

கொழும்பு, ஜூலை 2
உத்தியோகப்பற்றற்ற ஊடகத் தணிக்கைகளை மேற்கொண்டு தமது குற்றங்களை மூடி மறைக்க அரசு முயற்சிக்கின்றது. அளுத்கம தாக்குதலின் உண்மையை மூடி மறைத்து பொதுபல சேனாவைப் பாதுகாப்பதே அரசின் நோக்கம்- இவ்வாறு பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

இலங்கையில் ஊடகவியலாளர் எதிர்நோக்கும் அச்சுறுத்தல் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தனது அறிக்கையில் எடுத்துக்காட்டி, இந்த

> “ அளுத்கம சம்பவத்தின் பின்னர் ஊடகங்களுக்கு அரசு கடிதம் அனுப்பியுள்ளது. அந்தக் கடிதத்துக்கு அமைய செயற்படாவிட்டால் வழக்குத் தொடரப்படும் என்றும் அதில் கூறப்பட்டிருந்தது. ”

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

### குற்றங்கள் செய்திருந்தால் உடன் கைது செய்யுங்கள் – பலசேனா



கொழும்பு, ஜூலை 2
தமது அமைப்பைச் சேர்ந்தவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுங்கள் என்று தெரிவித்துள்ள பொதுபலசேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் அளுத்கம வன்முறைகளுடன் தொடர்புடையவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.
ஆளும் கட்சி அமைச்சர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இந்த வன்முறைகளுக்கு பொதுபல சேனாவே காரணம் என்று குற்றஞ்சுமத்தி வருகின்றன என்றும் தெரிவித்துள்ள அவர், அளுத்கம சம்பவத்தின் அடிப்படைப் பிரச்சினைகளை கண்டறியாது இவ்வாறு குற்றஞ்சுமத்தப்பட்டு வருகின்றது என்றும் சுட்டிக்காட்டினார்.
அளுத்கம பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவம் துரதிஷ்டவசமானது. அளுத்கம சம்பவத்தால் ஏற்பட்ட பாதக விளைவுகள் எம்மை கைது செய்வதால் தீருமானால், எங்களை கைது செய்யுங்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற)

### புதிய கடற்படை தளபதி பதவியேற்றார்



கொழும்பு, ஜூலை 2
இலங்கை கடற்படையின் 19 ஆவது கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்ட வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா நேற்றுக் காலை தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.
அதற்கான விசேட நிகழ்வொன்று கடற்படைத் தலைமையகத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் கடற்படையின் புதிய

❖ 22 ஆம் பக்கம் பார்க்க



ஐந்து நாடுகளின் இலங்கைக்கான புதிய தூதுவர்கள் தமது நியமனக் கடிதங்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுக் காலை நேரில் சந்தித்து வழங்கினர். இந்த நிகழ்ச்சி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது. நியூஸிலாந்துத் தூதுவர் கிரஹாம் மோட்டன், ஜோர்தான் தூதுவர் ஹஸன் மஹ்முட் மொஹமட் அல் ஜவாமே, மாலைதீவுத் தூதுவர் ஸஹியா சரீர், பூட்டான் தூதுவர் பீமா சோடன், பொஸ்னியா மற்றும் ஹெர்ஸ்கோவினா தூதுவர் சபீட் சுபஸிக் ஆகியோரே தமது நியமனப் பத்திரங்களை ஒப்படைத்தனர். இந்தநிகழ்வில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் வீரதுங்க ஆகியோரும் பங்குபற்றினர். (ற)

## புலிகள் அழித்தவற்றை வடக்கில் உருவாக்கினோம்

### புதிய தூதுவர்களுக்கு ஜனாதிபதி விளக்கம்

கொழும்பு, ஜூலை 02
விடுதலைப் புலிகள் கடந்த 30 வருடங்களில் அழித்தொழித்த பாடசாலைகள், ரயில் பாதைகள், வீதிகள், வைத்தியசாலைகள் அனைத்தையும் போர் முடிவடைந்தவுடனேயே அரசு மீளக்கட்டியெழுப்பியுள்ளதாக தெரிவித்திருக்கிறார் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.
நேற்று ஜனாதிபதி முன்னிலையில் தமது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட வெளிநாட்டு தூதுவர்களிடமேயே அவர்கள் இவ்வாறு விளக்கம் அளித்துள்ளார்.
விடுதலைப் புலிகளின் கொடூரங்கள் குறித்தும் தூதுவர்களுக்கு விளக்கிய மஹிந்த ராஜபக்ஷ வடக்கில் அவர்கள் எவ்வாறு எல்லாவற்றையும் அழித்தொழித்தனர் என்று ஜனாதிபதி அவர்களுக்கு விளக்கமாக தெரிவித்தார்.
கடந்த 28 ஆண்டுகளில் முதல் தடவையாக வடக்கு மாகாண சபைக்கு தேர்தல் நடத்தியதாகவும் ஜனாதிபதி தூதுவர்களுக்கு எடுத்துக் கூறியிருக்கி

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண ஆளுநரின் பதவி நீடிக்கப்படுகிறது?

### நம்பகரமான வட்டாரங்களில் இருந்து கசிந்தது தகவல்



யாழ்ப்பாணம், ஜூலை 2
வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் பதவிக் காலம் எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ள நிலையில், அவரே தொடர்ந்தும் அந்தப் பதவியில் நீடிக்கவுள்ளார் என்று நம்பகரமாகத் தெரிய வருகின்றது.
வடக்கு மாகாண ஆளுநரின் பதவிக் காலம் முடிவடைந்த பின்னர் அவர் பதவி நீடிப்புச் செய்யப்படமாட்டார் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, வடக்கு முதலமைச்சரிடம் இந்த வருட ஆரம்பத்தில் உறுதிமொழி வழங்கியிருந்த போதும், மீண்டும் தற்போதைய ஆளுநரையே பதவியில் நீடிக்க ஜனாதிபதி தயாராகி வருகின்றார் என்று தெரியவருகின்றது.
வடக்கு மாகாண ஆளுநராக, யாழ்.மாவட்டத்தில் இராணுவத் தளபதியாக கடமையாற்றிய மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, 2009 ஆம் ஆண்டு

> “ வடக்கு மாகாண ஆளுநரின் பதவிக் காலம் முடிந்தவுடன் அது நீடிக்கப்பட மாட்டாது என்று வடக்கு முதலமைச்சரிடம் உறுதி வழங்கியிருந்தார் ஜனாதிபதி. ”

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

## கூட்டமைப்பின் நிலைப்பாடு சரியானது ஆனால் அது பிரச்சினையை தீர்க்காது

### தெரிவுக்குழு குறித்து அமைச்சர் வாசு கருத்து

> “ ஜனாதிபதியுடன் பிரச்சினை குறித்து அவர்களால் பேச முடியும் எனில், ஏன் தெரிவுக் குழுவில் பேசமுடியாது..? ”



கொழும்பு, ஜூலை 2
'இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்குத் தெரிவுக்குழுவின்றி நேரடியாக அரசுடனேயே பேச்சு நடத்த வேண்டும் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடானது சரியானதொன்றே" என்று தெரிவித்துள்ள தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, அவ்வாறு அரசுடன் பேசுவதன் மூலம் பிரச்சினைகள் மேலும் ஒரு படி உயருமே தவிர தீர்க்கப்படாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

### பன்றி இறைச்சியுடன் பள்ளிக்கு மிரட்டல்

கொழும்பு, ஜூலை 2
கொழும்பு கோட்டைப் பகுதியில் உள்ள பள்ளிவாசல் ஒன்றுக்கு பன்றி இறைச்சியுடன் கூடிய எச்சரிக்கைக் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. உயர் பாதுகாப்பு வலயத்தில் பள்ளி வாசல் அமைக்கப்பட்டுள்ளது என்றும், உடனடியாக புனர்நிர்மாணப் பணிகளை நிறுத்த வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
கடிதம் அனுப்பியவர் தொடர்பில் எந்தத் தகவலும் அதில் காணப்படவில்லை. இந்தச்

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

## நிபுணர் குழு நியமனத்துக்கு ஐரோப்பிய யூனியன் வரவேற்பு

கொழும்பு, ஜூலை 02
இலங்கை தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு மூன்றுநிபுணர்களைக்கொண்ட குழுவை ஐ.நா. மனித உரிமைகள் சபை நியமித்துள்ளதை வரவேற்றுள்ள ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா விசாரணைக் குழுவுக்கு இலங்கை முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.
ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையால், இலங்கை தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக மூன்று பேர் கொண்ட நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது. சமாதானத்துக்கான நோபல் பரிசை வென்றுள்ளவரும், பின்லாந்து அரசின் முன்னாள் ஜனாதிபதியுமான மார்ட்டி அத்திசாரி, நியூஸிலாந்தின் முன்னாள் ஆளுநர் ஜெனரல் சில்வியா கார்ட்ரைட் மற்

❖ 22 ஆம் பக்கம் பார்க்க

# தவ்ஹீத் ஜமாஅத்தின் கிளை காரியாலயம் மீது தாக்குதல்

## எதிராக சட்ட நடவடிக்கை என்கிறார் அமைப்பின் துணைச்செயலாளர்

கொழும்பு, ஜூலை 2

சாய்ந்தமருது கடற்கரை ஓரத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஅத்தின் கிளைக் காரியாலயம் நேற்றுமுன்தினம் தாக்கப்பட்டமைக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அந்த அமைப்பின் துணைச் செயலாளர் ரஸ்மின் மௌலவி நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சாய்ந்தமருது கடற்கரை ஓரத்தில் அமைந்துள்ள எமது கிளைக் காரியாலயம் தாக்கப்பட்டமை கவலைக் குரிய விடயம். இதற்கு எதிராக நாம் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம். பொலிஸிலும் முறைப்பாடு செய்துள்ளோம்.

முஸ்லிம்களுக்கு எதிராகப் பேரினவாதிகளின் அனைத்துத் தாக்குதல்களுக்குமான பொறுப்பை முஸ்லிம்களே சுமக்கவேண்டிய ஒரு மோசமான நிலைமையே இவ்வாறான சம்பவங்கள் தோற்றுவிக்கும் என்பது நிச்சயம்.

மாதம்பையில் எம் பள்ளிவாசல் மீது தாக்குதல் தொடுக்கப் பட்ட போது பேரினவாதிகள் அதை அவர்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தியதை நாம் அறிவோம். பள்ளிவாசல்கள் மீதான அனைத்துத் தாக்குதல்களுக்கும் முஸ்லிம் அமைப்புகளுக்கிடையிலான முரண்பாடுகளே காரணம் என்றும் இந்த அமைப்புகளைத் தடைசெய்ய வேண்டும் என்றும் பேரின வாதிகள் கூறியதை நாம் அறி வோம்.

பேரினவாதிகளின் தாக்குதல்கள் இப்போது உக்கிரமடைந்திருக்கும் நிலையில், நாம் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். எம் மீதான தாக்குதல்களிலிருந்து தப்புவதற்கு அவர்கள் காரணம் தேடிக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பற்றிச் சிந்திக்காமல் - சமூகத்தைப் பற்றிச் சிந்திக்காமல் செயற்படுவது இந்தச் சமூகத்துக்கே செய்கின்ற துரோகமாகும்.

பள்ளிவாசல்களுக்குப் பிரச்சினைகள் வருகின்றபோது அவற்றைக் காப்பாற்றுவதற்காக களத்தில் நின்று போராடுபவர்கள் நாம். அவை யாருடைய பள்ளிகள் என்று நாம் பார்ப்பதில்லை. அப்படிப்பட்ட எம் மீது சமூக அக்கறையற்ற விஷமிகள் தாக்குதல் நடத்துகின்றனர்.

குர்ஆன், சுன்னாவுக்கு எதிராகச் செயற்படுகின்ற கப்ரு வணங்கிகளே எம் மீது இத் தாக் குதலை நடத்தியுள்ளனர். சமூகத்தின் நலன் கருதி இத் தாக்குதலைப் பெரிதுபடுத்தி லாபம் தேட நாம் முற்படவில்லை. இருந்தாலும், இது தொடர்பில் நாம் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம் - என்றார். (சி)

## முஸ்லிம் பெண் மீது பத்தரமுல்லயில் தாக்கு



தாக்குதலுக்கு இலக்கான பாத்திமா

கொழும்பு, ஜூலை 2

பத்தரமுல்ல சந்தியில் வெற்றிலை வியாபாரத்தில் ஈடுபடும் முஸ்லிம் பெண் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணியளவில் இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தி உள்ளனர். இதில் அந்தப் பெண் காயமடைந்துள்ளார்.

குறித்த பெண் பேருவளையை பூர்வீகமாகக் கொண்டவர் என்றும் இவரது தந்தையார் பத்தரமுல்ல பகுதியில் கடந்த 65 வருடங்களாக வெற்றிலைக் கடை வைத்திருந்தார் என்றும் தந்தை இறந்த பின்னர் அந்தக் கடை அவரது மகளான பாத்திமா நடத்தி வருகிறார் என்றும் தெரிவிக்கப் பட்டது.

இந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 10 மணியளவில் தான் கடையை மூடிக் கொண்டிருந்த போது அந்த வழியாக வந்த சிலர் தன்மீது கற்களை வீசி விட்டு தப்பிச் சென்றனர் என்று பாத்திமா தெரிவித்தார்.

"அளுத்கம சம்பவத்துக்குப் பின்னர் எனது கடைக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. எனினும் சம்பவம் நடைபெற்ற அன்று அந்தப் பொலிஸ் அதிகாரி விடுமுறையில் சென்றுவிட்டார்."

இந்த சந்தர்ப்பத்திலேயே என் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. நானும் எனது தங்கைகளும் அவர்களது பிள்ளைகளும் 40 வருடங்களாக கடைக்குப் பின்புறத்திலேயே வசித்து வருகின்றோம். இதுவரை நாளும் எங்களுக்கு யாரும் எந்த இடையூறும் தரவில்லை - என்று பாத்திமா தெரிவித்தார். (ஐ)

## சனசமூக நிலையங்களுக்கு இலவசமாக பத்திரிகைகள்

முள்ளியவளை, ஜூலை 2

பொதுமக்களின் நன்மை கருதி கரைதுறைப்பற்று பிரதேச சபையினால் முதற்கட்டமாக 5 சனசமூக நிலையங்களிற்கு இரண்டு தமிழ் நாழிதள்கள் நேற்றுத் தொடக்கம் வழங்கப் படுகின்றன.

இதன் ஆரம்ப நிகழ்வுகள் நேற்று நண்பகல் முள்ளியவளை கிழக்கு சனசமூக நிலையத்திலும் சிலாவத்தை சன சமூக நிலையத்திலும் நடைபெற்றன.

நிகழ்வில் உரையாற்றிய பிரதேச சபை செயலாளர், ஏனைய பிரிவு சனசமூக நிலையங்களுக்கும் அவற்றை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும் - என்றார். (ஐ-102)



வவுனியா மணிக்கூட்டு கோபுரத்தின் மீது நேற்று காலை இராணுவ வாகனம் மோதியதில் மணிக்கூட்டு கோபுரத்தின் முற்பகுதி சேதமடைந்தது. அங்கு வைக்கப்பட்டிருந்த ஜனாதிபதியின் பதாகை கண்ணாடியும் இதன்போது உடைந்து நொருங்கியது. (ஐ-402)

## மாவிட்டபுரத்துக்கு பஸ் சேவை

வலி.வடக்கு, ஜூலை 2

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் இன்று புதன்கிழமை விசேட பூசைகளுடன் ஆரம்பமாகின்றது. பூசை வழிபாடுகளில் கலந்துகொள்ளச் செல்லும் அடியார்களின் நன்மை கருதி விசேட பஸ் சேவை யாழ். பஸ்நிலையத்தில் இருந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிது.

இதேவேளை, ஆலயச் சூழலில் அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்றும் திருவிழா நடைபெறும் 25 நாள்களும் மாகேஸ்வரபூசை இடம்பெறும் என்றும் ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-86)

# இரண்டு வாரங்களில் யாழ்ப்பாணத்தில் 38 ஆயிரம் கிலோ பாதீனியம் அழிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 02

கடந்த இரண்டு வாரங்களில் 37 ஆயிரத்து 700 கிலோ பாதீனியம் கொள்வனவு செய்யப்பட்டு அழிக்கப்பட்டிருப்பதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அமைச்சு விடுத்துள்ள ஊடகச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடமாகாண விவசாய அமைச்சு பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கைகளில் ஒன்றாகப் பொதுமக்களிடம் இருந்து அதனை ஒரு கிலோவுக்குப் 10 ரூபா கொடுத்துக் கொள்வனவு செய்து அழிக்கும் திட்டத்தை யாழ். மாவட்டத்தில் முன்னெடுத்து வருகிறது.

விவசாயத்துக்கும், மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும், உள்ளூர் தாவரங்களுக்கும் பெருங்கேடு விளைவிக்கும் அந்நிய ஊடுருவல் இனமான பாதீனியம் எமது சூழலில் வேகமாகப் பர விவருகிறது.

இந்தச் செடியை ஒழிப்பதற்குக் கடந்த காலங்களில் பல்வேறு தரப்பினராலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் தொடர்ச்சியான கண்காணிப்பு இல்லாத காரணத்தால் பெருக்கத்தைக் கட்டுப் படுத்த முடியவில்லை.

இந்த நிலையில் தற்போது வடக்கு மாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு பாதீனியத்தை முற்றாக இல்லாது ஒழிக்கும் நோக்கில் பல தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒருகட்டமாக பாதீனியத்தைப் பொதுமக்களிடம் இருந்து கிலோவுக்கு 10 ரூபா கொடுத்துக் கொள்வனவு செய்து, எரியூட்டி வருகிறது. இந்தத் திட்டம் ஆரம்பித்து முதல்வாரத்தில் 9,230 கிலோவும், இரண்டாவது வாரத்தில் 27,470 கிலோவும் ஆக இது வரையில் 37,700 கிலோ பாதீனியம் கொள்வனவு செய்யப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது.



பாதீனியசேகரிப்பின் போது

முதற்கட்ட நடவடிக்கையில் ஈடுபட்டவர்களுக்கான கொடுப்பனவு ஏற்கனவே வழங்கப் பட்டு விட்டநிலையில், இரண்டாவது வாரம் பாதீனியத்தை ஒப்படைத்தவர்களுக்கான பணக்கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு இன்று புதன் கிழமை சிறுப்பிட்டி மேற்கு ஜனசக்தி பொதுநோக்கு மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாதீனியத்தின் கொடுங் குணங்கள் காரணமாக, அதை அழிக்காதவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும் விதத்திலான சட்டமொன்றை இலங்கை அரசு இயற்றியுள்ளது. 1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கத் தாவரப் பாதுகாப்புச் சட்டத்தின்படி பாதீனியம் விளைநிலங்களில் அல்லது வீட்டு வளவுகளில் காணப்படின் அதனை அழிப்பது உரிமையாளர்களின் கடமையாகும். அழிக்கத் தவறுபவர்களுக்கு ஆறு மாதங்கள் வரை சிறைவாசம் விதிக்கவும் ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் அறவிடவும் முடியும்.

இந்தப் பாதீனியம் ஒழிப்புச் சட்டம் 2015ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்து வடக்கு மாகாணத்தில் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படவுள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு வடக்கு மாகாண விவசாய அமைச்சு முன்னெடுக்கும் பாதீனியம் ஒழிப்புத்திட்டங்களில் பொது மக்களை இணைந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

பாதீனியத்தைக் கொள்வனவு செய்யும் திட்டம் யூலை மாதம் 20 ஆம் திகதி வரை நீடிக்கப் பட்டுள்ளது. பாதீனியம் ஒழிப்பில் ஈடுபடும் பொதுமக்கள் இக்காலப்பகுதியில் சனி, ஞாயிறு தவிர்ந்த வார நாள்களில் பிற்பகல் 3 மணி தொடக்கம் 6 மணிவரை ஈவினைப்பிள்ளையார்கோவில், இணுவில் புகையிரத நிலையம், சுன்னாகம் மேற்கு முத்தமிழ் மன்றம், உரும்பிராய் மேற்கு மூன்று கோவில், ஊரெழு கிராம அபிவிருத்திச் சங்கம், தெல்லிப்பழை கமநலசேவைகள் நிலையம், தெல்லிப்பழை தந்தை செல்வாபுரம் வாசிகசாலை, கட்டுவன் முனியப்பர் கோவில், வயாவிளான் கூட்டுறவுச் சங்கம், நிலாவரைக் கிணறு, நீர்வேலிக் கண்ணாடித் தொழிற்சாலை, கோண்டாவில் இராமகிருஷ்ணா பாடசாலை ஆகிய இடங்களுக்கு அருகில் உள்ள பாதீனியம் சேகரிப்பு மையங்களில் ஒப்படைக்குமாறும், மேலதிக தகவல்கள் தேவைப்படின் விவசாயப் போதனாசிரியர்களிடம் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது. (ஐ-5)

# உதயன்

கிளாசிக்

சுடர்: 29 கதிர்: 218 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆனி 18, புதன் 02.07.2014




பிரான்ஸ் அதிரடி ஆட்டம் அடுத்த சுற்றுக்குள் நுழைவு

| பக். 18


நுளம்புகளின் தொல்லைக்கு ஒரே தீர்வு....

சொல்பெக் EW 050



ரூ.600/-

உயிர்கொல்லி டெங்கு நுளம்புகளை அழிக்க சொல்பெக் 8 மி.லீ. இனை ஒரு லீற்றர் நீரில் கலவை செய்து விசிறவும்.

Hayleys AGRICULTURE

ஹேலீஸ் அக்ரிகல்ச்சர் சென்ரர் 87, பலாலி வீதி, கோண்டாவில், யாழ்ப்பாணம் தொ.பே: 021 2053997/ 0777288337


# வடக்கு நிர்வாகத்தின் கீழே இனி அபிவிருத்தி வேலை

## மத்திய மீன்பிடி அமைச்சர் ராஜித நேற்று உறுதியளித்தார்



**யாழ்ப்பாணம், ஜூலை 02**

**வடமாகாணத்தில் மீன்பிடி துறைசார் அபிருத்தி அனைத்தும் இனிமேல் மாகாண மீன்பிடி அமைச்சினூடாகவே முன்னெடுக்கப்படும் என்று மத்திய மீன்பிடி அமைச்சர் ராஜித சேனாரத்ன உறுதியளித்தார் என்று வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.**

**இலங்கையின் 9 மாகாணங்களினதும் மீன்பிடி அமைச்சர்களுக்கும், மத்திய கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சருக்கும் இடையிலான கலந்துரையாடல் கொழும் பில் நேற்று இடம்பெற்றது.**

இந்தக்கலந்துரையாடலிலேயே மத்திய அமைச்சர் இவ்வாறு உறுதிமொழி வழங்கினார் என்று அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலின் ஆரம்பத்தில் உரையாற்றிய வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர், போரினால் வட மாகாணம் மிகவும் பாதிப்படைந்துள்ளது. சகல துறைகளிலும் பாதிக்கப்பட்டு பின்தள்ளப்பட்டுள்ளது. எனவே எமது மாகாணத்தை துரித கதியில் அபிவிருத்தி செய்ய அனைவரும் முன்வர வேண்டும்.

வடக்கு மாகாண மக்களில் பெரும்பாலானவர்கள் கடற்றொழில் மற்றும் விவசாயத்தை வாழ்வாதாரமாக கொண்டவர்கள். வடக்கிலுள்ள மீன்பிடி குடும்பங்களின் பிள்ளைகள் போரினால் கல்வியில் பின்தங்கியுள்ளனர். அது மட்டுமல்லாமல் உளவியல் ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உதவ வேண்டியது எம் அனைவரினதும் கடமையாகும்.

மேலும், வடக்கு மாகாணத்தில் பிரதானமாக எமது கடல் வளம் அழிக்கப்படுகின்றது. அதில் அந்நிய மீனவரின் வருகையும் அவர்களின் றோலர் முறையிலான மீன்பிடி முறையும் கடல்வளத்தை முற்றாக அழித்துவிடுகிறது.

குறிப்பாக இந்திய மீனவர்களது அத்துமீறிய நடவடிக்கைகள் இந்த நிலைமையை தோற்றுவித்துள்ளது. எனவே இவற்றை தடுக்க இரு நாடுகளும் இராஜதந்திர முறையில் பிரச்சினையை அணுகி தீர்க்க வேண்டும்.

இரண்டாவது விடயமாக, எமது மக்களின் தொழில் முறைகள் கூட சில பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. மக்கள் 18 வகையான தடைசெய்யப்பட்ட தொழில்களை செய்து வருகின்றனர். அதிலும் சில தொழில்களை பாரம்பரியமாக செய்து வருகின்றனர். உதாரணமாக கூடு வைத்தல், தங்கூசி வலை என்பன. இவர்களை இந்த தொழிலை செய்யக்கூடாது என்று உடனடியாக தடுக்க முடியாது.

இவர்களுக்கு உரிய பொருத்தமான தொழில் முறைகளை ஏற்படுத்திய பின்னரே அந்தகைய தொழில் முறைகளை தடைசெய்ய முடியும்.

மேலும் தென்னிலங்கை மீனவர்கள் வடபகுதிக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். அவர்களும் தடை செய்யப்பட்ட முறைகளைப் பயன்படுத்துகின்றனர். இதனை உடனடியாக தடுக்க வேண்டும்.

வடபகுதி மீனவர்களுக்கு ஆழ்கடல் மீன்பிடி, தங்கி நின்று தொழில்மேற்கொள்ளும்முறைகளையும் அறிமுகப்படுத்தி அதற்குரிய பயிற்சிகள், உபகரணங்கள் என்பன வழங்க வேண்டும்.

இதனை விட நாடளாவிய ரீதியில், மீன்கள் உற்பத்தியாகும் காலப்பகுதியில் மீனவர்களை கடலுக்குச் செலல விடாது நிறுத்தி ஏனைய நாடுகள் மேற்கொள்வது போன்று அந்தக் காலப் பகுதிகளுக்கு மாற்றீடாக மீனவர்களுககு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

இதன் பின்னர் பதிலளித்த மத்திய கடற்றொழில் அமைச்சர் ராஜித சேனாரத்தன, வடக்கில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் இரு வாரங்களுக்குள் எழுத்து மூலமாக தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொண்டார் எனவும், முக்கியமாக இந்திய மீனவர்களுடனான பேச்சில் எதிர்காலத்தில் மாகாண மீன்பிடி அமைச்சர் என்ற வகையில் என்னையும் இணைத்துக் கொள்வதாக தெரிவித்தாக மத்திய அமைச்சர் என்னிடம் உறுதியளித்தார் என்றும் அமைச்சர் டெனீஸ்வரன் குறிப்பிட்டார். (ஐ- 5)

# வகுப்பறைக்குள் குளவிகள் படையெடுத்ததால் விடுமுறை

## சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் நேற்று இந்த நிலை

யாழ்ப்பாணம், ஜூலை 2

வகுப்பறைகளுக்குள் குளவி பரவ ஆரம்பித்ததால் மாணவர்களின் பாதுகாப்புக்கருதி சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலைக்கு நேற்று விடுமுறை வழங்கப்பட்டது என்று பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாடசாலையின் வகுப்பறைக்குள் குளவிகள் கூடு கட்டியிருப்பது அவதானிக்கப்பட்டது. இதனால் நேற்று முன்தினம் இரவு குளவிக்கூடு பாடசாலை நிர்வாகத்தால் எரிக்கப்பட்டது. எனினும் நேற்றக் காலை திடீரென குளவிகள் பாடசாலை வளாகத்துக்குள்ளும் வகுப்பறைகளுக்குள்ளும் பரவ ஆரம்பித்தன. இதனால் மாணவர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு நேற்று விடுமுறை வழங்கப்பட்டது.

தற்போது குளவிகள் எரிக்கப்பட்டுள்ளன. நாளை (இன்று) வழமைபோன்று பாடசாலை இடம்பெறும் - என்றார். நேற்று முன்தினம் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு முன்பாக குளவிகள் கொட்டியதில் 11 பேர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-14)

# வடக்கு தபால் ரயில் சேவைகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 02

கொழும்பு - திருகோணமலை இடையே பயணித்த ரயிலின் இரண்டு பெட்டிகள் நேற்று அதிகாலை தடம்புரண்டதால் வட பகுதிக்கான தபால் ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன என்று ரயில்வே கட்டுப்பாட்டு நிலைய அதிகாரி அபேய ரத்ன தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டத்தின், பொத்துஹார - பொல்ஹாவெல இடையே நேற்று அதிகாலை 2.45 மணியளவில் குறித்த ரயில் தடம்புரண்டுள்ளது. இதன் காரணமாக, இந்த மார்க்கத்தின் வழியே சேவையில் ஈடுபடும் ரயில்கள் நிறுத்தப்பட்டுள்ளன. கொழும்பில் இருந்து பயணிக்கும் ரயில் பொல்ஹாவெல வரையிலும், கொழும்புக்கான ரயில் சேவைகள் குருநாகல் வரையும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன ரயில்வே கட்டுப்பாட்டு நிலைய அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக கொழும்பிலிருந்து பளைக்கு பயணிக்க வேண்டிய தபால் ரயில்கள் அதேபோன்று, பளையிலிருந்து கொழும்பு பயணிக்க வேண்டிய தபால் ரயில்கள் என 6 சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. திருத்த வேலைகள் பெட்டிகளை மீட்டுப் பொருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதும் வழமை போன்று சேவைகள் மீள இடம்பெறும் என்றும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார். (ஐ-5-14)


# துப்பாக்கி ரவைகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 2

மணற்காட்டு மகேவா நிலைய வளாகத்தில் இருந்து 82 மில்லிமீற்றர் துப்பாக்கி ரவைகள் 12 மற்றும் மீள்நிரப்பு கருவி ஆகியனவற்றை விடே அதிரடிப்படையினரும் பொலிஸார் இணைந்து மீட்டுள்ளனர் என்று பருத்தித்துறை பொலிஸார் தொவித்தனர்.

குறித்த மணற்காட்டு மகேவா நிலையம் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான கே.என். டக்ளஸ் தேவானந்தாவினுடையது என்று குறிப்பிடப்பட்டது. (ஐ- 106)

# வேலி தூண்களை அடித்து நொருக்கிய விஷமிகள்



பருத்தித்துறை பிரதேச சபைக்கு சொந்தமான கட்டடத்துக்கு பாதுகாப்பாக அமைக்கப்பட்டிருந்த வேலியின் தூண்கள் இனந்தெரியாத விஷமிகளால் நேற்றுமுன்தினம் இரவு உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறை பிரதான வீதியில் புலோலி, கிராமக் கோட்டுச் சந்தியிலுள்ள பிரதேச சபை வளாகத்தின் பாதுகாப்பு வேலி தூண்களே உடைத்துச் சேதமாக்கப்பட்டுள்ளன.

சுமார் 15 க்கும் மேற்பட்ட தூண்கள் இவ்வாறு உடைக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டு நிலத்தில் வீழ்த்தப்பட்டுள்ளன. (ஐ-108)

# தீவிரவாதிகள் இலங்கையை தளமாகப் பயன்படுத்தவில்லை

## உறுதியாகக் கூறுகிறார் பாதுகாப்பு அமைச்சர்

இந்தியாமீது தாக்குதல்களை நடத்துவதற்கு தீவிரவாதிகள் இலங்கையை ஒரு தளமாகப் பயன்படுத்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டை இலங்கை நேற்று அடியோடு மறுத்துள்ளது.

"இந்தியா மீதான தாக்குதல்களுக்கு இஸ்லாமிய தீவிரவாதிகள் இலங்கையை தளமாகப் பயன்படுத்தக்கூடும் என்று இந்திய உளவு அமைப்புக்கள் என்னிடம் தெரிவித்திருந்தன. அவர்களின் இந்தக் கவலை குறித்து நாம் விசாரணைகளை நடத்தினோம். ஆனால் இத்தகைய கவலைகளுக்கு இடமளிக்கக் கூடிய எந்த வொரு நடவடிக்கையும் இலங்கை மண்ணில் நடைபெறவில்லை." என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறார்.

கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையான டெயிலி மிரருக்கு அவர் வழங்கிய பேட்டியியேலே இதனைத் தெரிவித்திருக்கிறார்.

தென்னிந்தியாவின் குண்டுத்தாக்குதல்களை நடத்த திட்டமிட்டார் என்ற குற்றச் சாட்டில் இலங்கையைச் சேர்ந்த முஸ்லிம் ஒருவர் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இஸ்லாமிய தீவிரவாதிகள் இலங்கையை தளமாகப் பயன்படுத்தி இந்தியா மீது தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் எழுந்தது. சென்னையில் ரயில் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது தாக்குதலுக்கான சதித் திட்டம் இலங்கை , மலேசியா, மாலைதீவு ஆகிய நாடுகளில் திட்டமிடப்பட்டது என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்திருந்தினர். இதனைத் தொடர்ந்தே தீவிரவாதிகள் இலங்கையை ஒரு தளமாகப் பயன்படுத்துகின்றனர் என்ற அச்சம் இந்திய அதிகாரிகளுக்கு தோன்றியது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-ஐ)

# சிங்கள மொழி பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 02

தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் அனுசரணையுடன் வடக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகு அரச ஊழியர்களுக்கான சிங்கள மொழி மட்டம் I, II மற்றும் III பயிற்சி வகுப்புக்களை எதிர்வரும் ஜூலை 5 ஆம் திகதி சகல மாவட்டங்களிலும் ஆரம்பிக்கவுள்ளதாக முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி அலகின் பணிப்பாளர் பொ.வாகீசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள அறிவித்தலில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:-

சிங்கள மொழிப் பயிற்சி வகுப்புக்கள் வார இறுதி நாள்களில் காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரையும் நடைபெறும் என்றும் இதற்காக விண்ணப்பித்தவர்கள் பங்குபற்ற முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயம், மானிப்பாய் இந்துக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், சாவகச்சேரி நகரசபை, கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், வவுனியா தமிழ் மகா வித்தியாலயம், ஆங்கில துணைவள நிலையம், முல்லைத்தீவு மகா வித்தியாலயம் என்பவற்றில் மட்டம் III இற்கான பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும்.

வேம்படி மகளில் கல்லூரி, வவுனியா தமிழ் மகா வித்தியாலம், என்பவற்றி மட்டம் II இற்கான பயிற்சி வகுப்பும் ஆரம்ப மாக வுள்ளது. வேம்படி மகளிர் கல்லூரியில் சிங்கள மட்டம் I இற்கான பயிற்சி வகுப்பு கடந்த மாதம் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

# மாணிக்கவாசகர் குருபூசை

தென்மராட்சி, ஜூலை 2
மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலய இந்து மாமன்றம் நடத்தும் மாணிக்கவாசகர் குருபூசை இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை நூற்றாண்டு மண்டபத்தில் இடம்பெறும்.

வித்தியாலய இந்து மாமன்றத் தலைவர் செல்வி து.சம்திகா தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் சின்மய மிஷன் வதிவிட ஆசாரியார் பிரம்மச்சாரி சுவாமி ஜாக்ரத் சைதன்யாவும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய சைவ சமய பாட முதன்மை ஆசிரியர் செல்வி இ.இராமலிங்கமும், கௌரவ விருந்தினராக வித்தியாலயத்தின் பழைய மாணவி திருமதி சுஜித்தா லக்ஸ்மன் ஆகியோரும் கலந்து கொள்வர். (க-9)

♦♦♦

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயத்தில் மாணிக்க வாசக சுவாமிகள் குருபூசைத் தினம் இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு பாடசாலையின் பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகளை இந்து மாணவர் மன்றம் மேற்கொண்டுள்ளது.

இந்த நிகழ்வில் விசேட பூசை வழிபாடுகளும், மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (க)

## நாவலருக்கு சிலை

சுழிபுரம், ஜூலை 2
சுழிபுரம் நாவலர் சனசமூக நிலைய சிறுவர் பாடசாலைக்கு அருகில் நாவலர் சிலை புதிதாக நிறுவப்பட்டுள்ளது. புதிய சிலையை நாவலர் சனசமூக நிலையத்தினர் நிறுவியுள்ளனர். சிலை திறப்பு விழா வைபவம் சென்ற வாரம் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. இந்தவைபவம் நிலையத் தலைவர் புலவர் எஸ்.சுந்தரம்பிள்ளையின் தலைமையில் இடம்பெற்றது. (க-28)

சாவகச்சேரி, கல்வயல், பெருங்குளம்
ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
வருடாந்த திவ்வியமஹோற்சவம் - 2014

கிரியாகால நிகழ்வுகள்

ஆனித்திங்கள் 18ஆம் நாள் 02.07.2014 புதன்கிழமை மாலை 6.00 மணிக்கு விநாயகர் வழிபாடு, சாந்திகள்

ஆனித்திங்கள் 19ஆம் நாள் 03.07.2014 வியாழக்கிழமை மு.ப 11.00 மணிக்கு கொடியேற்றம்

ஆனித்திங்கள் 26ஆம் நாள் 10.07.2014 வியாழக்கிழமை மாலை 9.00 மணிக்கு சப்பறம்

ஆனித்திங்கள் 27ஆம் நாள் 11.07.2014 வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு இரதோற்சவம்

ஆனித்திங்கள் 28ஆம் நாள் 12.07.2014 சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு தீர்த்தோற்சவம்

ஆனித்திங்கள் 29ஆம் நாள் 13.07.2014 ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணிக்கு பூங்காவனம்

ஆனித்திங்கள் 30ஆம் நாள் 14.07.2014 திங்கட்கிழமை மு.ப.10.00 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம் மாலை 5.00 மணிக்கு வைரவர் மடை.

பரிபாலன சபை (சி14841) (12.3.6)

யாழ் நகரில் கல்வி உலகில் புதியதோர் திருப்பம்

Rashmi Shaw Kids' Future
BOOK MART & Education care

பிரமாண்டமான திறப்புவிழா

நாளை மறுதினம் (04.07.2014)
வெள்ளிக்கிழமை பி.ப 3.00 மணி

முற்று முழுதான காட்சிப்படுத்தலுடனான ஓர் புத்தகக் காட்சியறையின் உதயம்

எமது காட்சிகள்
- காகிதாதிகள்
- அப்பியாசக் கொப்பிகள்
- பயிற்சிப் புத்தகங்கள்
- அறிவுக் கதைகள்
- பாடசாலை மற்றும் அலுவலக உபகரணங்கள்

எமது சேவை
- மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்குகள் (Guidence Seminars to Exams)
- தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள் (Career guidence Seminars)
- சுய மதிப்பீட்டுப் பரீட்சை வசதிகள் (Self examination facilities)
- மாதாந்த கல்வி கருத்தரங்குகள் (Monthly Education Seminars)

(50944)(10.6)

No. 925/1, Thaddatheru Junction, K.K.S Rd, Jaffna.
E mail: rbm.jaf@gmail.com Website: www.rbm.lk
T.P: 021 222 5151

உ
இணுவில் கந்தசுவாமி கோயில்





புனராவர்த்தன அஷ்டபந்தன
உத்தமோ உத்தம (33 குண்டம்)
மகா கும்பாபிஷேகப் பெருவிழா
04.07.2014 வெள்ளிக்கிழமை

எண்ணெய்க்காப்பு: இன்றும் தொடர்ந்து எண்ணெய்க்காப்பு இடம்பெற்று மாலை 4.00 மணியுடன் நிறைவடையும்

★03.07.2014 வியாழக்கிழமை மாலை 4 மணிமுதல் 6 மணிவரை நாதஸ்வர தவில், பாட்டு, வயலின், புல்லாங்குழல், மிருதங்கம், கடம், கெஞ்சிரா, முகர்சிங், நிருத்தியம் ஆகிய இசைக் கலைஞர்களின் இசைநிகழ்ச்சி இடம்பெறும்.

கும்பாபிஷேக விழாவினை சிறப்பிப்பதற்காக கதிர்காமத்திலிருந்து இரண்டு யானைகளும், மஹா யாகத்தை சிறப்பிப்பதற்காக அனுராதபுரத்திலிருந்து இரண்டு வெள்ளைக் குதிரைகளும் கொண்டுவரப்படவுள்ளன.

தினமும் மதியம், இரவு விசேட மாகேஸ்வரபூசை இடம்பெறும்.

★ கும்பாபிஷேக நிகழ்வின்போது இந்திய இலங்கை பிரபல நாதஸ்வர தவில் கலைஞர்களின் மாபெரும் இசைக்கச்சேரி இடம்பெறும்.

(C/13864)(10.6.3)

விழா சிறப்புற வாழ்த்துபவர்கள்:

குமார் பந்தல் சேவை
இணுவிலில் முதல்தர பந்தல் சேவை வழங்குநர்
மஞ்சத்தடி, இணுவில்.

குறித்த தவணையில் நம்பிக்கை உத்தரவாதத்துடன் நகைகள் செய்துகொள்ள
நீபா ஜூவல்லறி

K.K.S. வீதி கோண்டாவில்.

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்
ஜெயபிரியா ஜூவலர்ஸ்

இல.275, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

02 JUL 2014

# பெற்றோர், மாணவர்கள் நேற்று சுன்னாகத்தில் நடைபவனி



சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 120 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி கல்லூரியின் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் கலந்து கொண்ட நடைபவனி ஒன்று நேற்றுக் காலை 8.15 மணியளவில் இடம்பெற்றது.

கல்லூரியின் 'எதிர்கால பசுமை' என்ற தொனிப் பொருளில் இடம்பெற்ற இந்த நடைபவனி சுன்னாகம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கி கட்டடத்தின் முன்பு ஆரம்பமாகி காங்கேசன்துறை வீதி, டாக்டர் சுப்பிரமணியம் வீதி வழியாக கல்லூரி வளாகத்தைச் சென்றடைந்தது.

இந்த ஊர்வலத்தின் முன்னால் பாடசாலை சின்னத்தை மாணவர்கள் தோளில் சுமந்து செல்ல அதனைத் தொடர்ந்து நூற்று இருபது அடி நீளமான கல்லூரிக் கொடியை மாணவத் தலைவர்கள் ஏந் திச் செல்ல அதனைத் தொடர்ந்து கல்லூரியின் பாண்ட் வாத்தியக் குழுவினர் இசை எழுப்பி வர இந்த நடைபயணம் இடம்பெற்று கல்லூரி வளாகத்தில் நிறைவு பெற்றது. (வ-86)

## விளையாட்டு மைதானங்களை அமைக்க நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜூலை 2

சிறுவர் அபிவிருத்தி, மகளிர் விவகார அமைச்சின் சிறுவர் செயலகத்தினால் பிரதேச செயலகப் பிரிவுகள் தோறும் விளையாட்டு மைதானங்களை அமைக்கவென நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

இதன் பிரகாரம் முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்கள், பாலர் பாடசாலைகள் ஆகியனவற்றில் இந்த மாதிரி விளையாட்டு மைதானங்களை அமைப்பதற்குத் தலா 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது. இது தொடர்பான பூரண விவரங்கள் பிரதேச செயலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (க-7)

# இந்திய வீட்டுத் திட்டத்துக்கான பயனாளி தெரிவு சரியானதா?

## பட்டியலில் தகுந்தவர்கள் இல்லையெனில் முறையிடலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 2

இந்திய வீட்டுத் திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் உண்மையில் தகுதியான பயனாளிகள் தானா என்பதை அந்தப் பகுதி மக்களும் தீர்மானிக்க முடியும். எனவே காட்சிப்படுத்தப்படும் பயனாளிகள் பட்டியலில் பொருத்தமில்லாதவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தால் உடனடியாக அதுதொடர்பில் பிரதேச செயலருக்கோ அல்லது மாவட்டச் செயலகத்துக்கோ தெரியப்படுத்துமாறு யாழ். மாவட்டச் செயலகவட்டாரங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்திய வீட்டுத் திட்டத்துக்குரிய மூன்றாம் கட்டப் பயனாளிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் 19 கிராம சேவையாளர்கள் பிரிவில் தற்போது இடம்பெற்று வருகின்றன. புள்ளிகள் அடிப்படையிலேயே பயனாளிகள் தெரிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் பெயர்கள் பகிரங்க இடங்களில் 14 நாள்கள் காட்சிப்படுத்தப்படும். அவ்வாறு காட்சிப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில், பொருத்தமில் லாதவர் பயனாளிகள் பட்டிய லில் உள்ளடகப்பட்டிருந்தால் அதுதொடர்பில் உடனடியாக அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

பயனாளி தெரிவு செய்யப்பட்டு வீடுகட்டிமுடிக்கப்பட்ட பின்னரே, தவறான பயனாளியை அந்தப் பகுதி மக்கள் இனங் காட்டித் தருகின்றனர். இதனால் எதுவும் செய்ய முடியாது. எனவே வீட்டுத் திட்டம் வழங்கப்பட முன்னர், யாருக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்பட இருக்கின்றதோ அவர்களில் பொருத்தமில்லாதவர்களை அந்தப் பகுதி மக்கள் தெரியப்படுத்தினால், குறித்த பயனாளிகளுக்கு வீட்டுத் திட்டம் வழங்கப்படுவது தொடர்பில் மீளவும் விசா ரணை நடத்தப்படும்.

இதன்மூலம் தவறானவர்கள் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்படுவது தடுக்கப்படும். இவ்வாறு தவறானவர்கள் பயனாளிகளாகத் தெரிவாகாமல் தடுப்பதற்கு பொதுமக்களும் உதவி செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-5)

# ஸ்கந்தாவின் முன்னாள் அதிபரின் திருவுருவச்சிலை திறப்பு



வலி. வடக்கு, ஜூலை 2

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஓறேற்றர் சி. சுப்பிரமணியத்தின் திருவுருவச் சிலை கல்லூரியின் பழைய மாணவனும் மலேசியா நாட்டு மருத்துவ பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளருமான பேராசிரியர் எஸ். காசிநாதனால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கல்லூரியின் முன்னாள் அதிபர்களான கே. சிவாஜி, கலாநிதி ஆறு. திருமுருகன் மற்றும் பழைய மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

திருவுருவச் சிலைக்கு அதிபர் மாலை அணிவிக்க, நினைவுத் திரையை பேராசிரியர் திரை நீக்கம் செய்து வைத்தார். (வ-86)


# கேஸ்ட்ரைடிஸ் எனும் இரைப்பை சவ்வு அழற்சி நோயை பூரணமாகக் குணப்படுத்தும்




### இரைப்பை சவ்வு அழற்சி நோய் ஏற்படுவதற்கான காரணங்கள்

01. உரிய வேளையில் உணவு உட்கொள்ளாமை.
02. எண்ணெய்த் தன்மையான உணவை தொடர்ந்து உட்கொள்ளல்.
03. சூடான உணவு வகைகளை தொடர்ந்து உட்கொள்ளல்.
04. சிலவகையான ஔடத வர்க்கங்களை நீண்ட நாட்களாக பாவித்தல்.
05. உரிய அளவு நீரை அருந்தாமை.
06. அதிகமாக உப்பு சேர்த்தல் மற்றும் சில உணவு வகைகளை அதிகமாக சேர்த்து உணவுகளை உட்கொள்ளுதல்.
07. புளிப்பு வகையான உணவுகளை தொடர்ந்து உட்கொள்ளுதல்.
08. மன உளைச்சல்.
09. செயற்கையான நுரை உள்ள குளிர்பானங்களை அடிக்கடி அருந்துதல்.

### இரைப்பை சவ்வு அழற்சி நோயின் அறிகுறிகள்

01. வயிறு மற்றும் நெஞ்சுப் பகுதிகளில் எரிவு.
02. வயிறு உப்புதல்.
03. அடிக்கடி ஏப்பம் போகுதல்.
04. காலையில் மஞ்சள் நிறத்தில் வாந்தி எடுத்தல்.
05. அடிக்கடி பசி வருதல்.
06. கடுமையான தலைவலி உண்டாகுதல்.
07. தலைவலியுடன் வாந்தி எடுத்தல்.
08. நெஞ்சு வலித்தல்.
09. காலப்போக்கில் இரைப்பையில் புண் உண்டாகுதல்.
10. மலம் கழிக்கும் போது இரத்தம் கலந்து வெளியேறுதல்.
11. உணவுகள் மீது வெறுப்பு உண்டாகுதல்.
12. உடல் மெலிதல்

இவ் அறிகுறிகளை விட வேறு அறிகுறிகளும் காணப்படுகின்றன....

### இரைப்பை சவ்வு அழற்சி நோயை பூரணமாக குணப்படுத்தும் பஞ்சபல அமிர்த பானம்.

தேசிய மருத்துவ நுட்ப முறைகளுக்கு அமைய ராஜபுர வைத்திய குடும்பத்திற்கு மட்டுமே உரித்தான பஞ்சபல அமிர்த பானத்திற்கு பயன்படுத்தப்படும் மூலிகைகள் நூறு வீதம் நம் நாட்டுக்குரியது. பச்சையாக மற்றும் காய்ந்த மூலிகைகளை அவித்து செய்துகொள்ளும் அமிர்த பானமாகும். இப் பானத்தை பாவிப்பதன் மூலம் பின் விளைவுகள் ஏற்படாது. மற்றும் இதில் சர்க்கரை அடங்காததால் சர்க்கரை நோயாளருக்கும் பாவிக்கத் தகுந்ததாகும்.

உடலிற்கு பாதிப்பை உண்டாக்கும் இரசாயன பொருட்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. இதனை இலங்கை செயன்முறை தொழில்நுட்ப திணைக்களத்தினால் இரசாயன பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தியுள்ளது.

ஆயுர்வேத மருத்துவ திணைக்களத்தின் மருத்துவ ஆலோசனை சபையின் அனுமதி பெற்ற ஔடதமாகும். பத்தாயிரம் நோயாளர்களுக்கு மேல் விநியோகிக்கப்பட்டுள்ள இம் மருந்து வேறு நோய்களுக்கு மருந்து உட்கொள்ளும்போதும் இதனை பயன்படுத்தலாம்.

### பஞ்சபல அமிர்த பானத்தை பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள்

இரைப்பை சவ்வு அழற்சி நோயான கேஸ்ட்ரைடிஸ் நோயை பரிபூரணமாக குணப்படுத்த பயன்படுத்தகூடிய ஔடதமாகும். இரைப்பையில் உள்ள காயம், வயிறெரிவு, நெஞ்சு எரிவு, ஏப்பம் போதல், பித்த வெடிப்பு, வயிறு காய்வு, சிறுநீர் கடுப்பு, வயிறு ஊதுதல், பித்தம், கடுமையான தலைவலி, குதத்தில் இரத்தம் வெளியேறுதல், கை கால்களில் அதிகமாக வியர்த்தல், உடல் வெப்பம் மற்றும் தோல் சம்பந்தப்பட்ட நோய்களுக்கு எவ்வித தடையும் இன்றி பாவிக்க கூடியதாகும்.

### பஞ்சபல அமிர்த பானத்தை பாவிக்கும்போது உட்கொள்ளக் கூடாத உணவு வகைகள்

சூடான உணவு வகைகள் புளிப்பு உணவு வகைகள், செயற்கையாக செய்யப்பட்ட உணவு சுவையூட்டிகள் நிறச்சொட்டுகள் சேர்க்கப்பட்ட உணவுகள் அதிக உப்பு சேர்க்கப்பட்ட உணவுவகைகள், நுரையுள்ள குளிர்பானங்கள், போதைப்பொருட்கள், விசேடமாக தக்காளி, அன்னாசி, முருங்கை, விளாம்பழம், அம்பரலங்காய், ஊறுக்காய், மாட்டிறைச்சி, பன்றியிறைச்சி, சுறா மீன்கள், இறால், கணவாய், கீரிமீன்கள், பாண் மற்றும் ஈஸ்ட் சேர்க்கப்பட்ட மாப்பொருட்கள், தேநீர், புளிவாழை, அதிக எண்ணெய் உள்ள உணவுகள், அதிகமாக மிளகாய் சேர்ந்த சோஸ் அடங்கிய உணவு வகைகள் உட்கொள்ளல் கூடாது.

### பஞ்சபல அமிர்த பானத்தை பாவிக்கும்போது

- காலை பகல் இரவு உணவுகளை நேரத்திற்கு உட்கொள்ளல் குணப்படுத்த உகந்த வழிமுறையாகும்.
- பிரதான உணவு வேளைகளில் மாவினால் செய்யப்பட்ட உணவுகளை தவிர்த்தல்.
- 03 நேரமும் அதிக நீர் அருந்துவதன் மூலம் நோயை குணப்படுத்த முடியும்.
- வில்வம் பழத்தின் சதை மற்றும் தேன் கலந்து உட்கொள்ளுதல் வில்வம் பழத்தின் சதையை குடிப்பானமாக தயாரித்து தேன் கலந்து தினத்திற்கு ஒருமுறை அருந்துதல் (இரண்டு சாப்பாட்டு வேளைக்கு இடையில் தேநீர் நேரத்தில் குடிப்பது சிறந்தது.)
- கசகசா விதையை நீரில் இட்டு தினமும் காலையில் வெறும் வயிற்றுடன் ஒரு கோப்பை அருந்துதல் (கசகசா விதையை வடித்து அகற்றிக்கொள்ளல் வேண்டும்)

### விலை கொடுத்து வாங்க வேண்டிய இடம்

01. இலங்கை முழுவதும் காணபடும் ஆயுர்வேத விற்பனை நிலையங்களில
02. கார்கிலிஸ் புட்சிடி மற்றும் மருத்துவ நிலையங்களில்
03. ஆர்பிக்கோ சுப்பர் சென்டர் மருத்துவ நிலையங்களில்
04. லாப் சுப்பர் மார்க்கெட் மருத்துவ நிலையங்களில்

ARPICO SUPERCENTRE LAUGFS SUPERMARKET

## பஞ்சபல அமிர்த பானம்

ஆயுர்வேத மருத்துவ நுட்பமுறையில் இரைப்பை சவ்வு அழற்சி என குறிப்பிடப்படும் கேஸ்ட்ரைடிஸ் குடலுடன் சம்பந்தப்பட்ட பிரதான நோயாகும். இந் நோயானது உணவு உட்கொள்ளுதல் மற்றும் சமிபாடடைதல் போன்றவற்றினால் ஏற்படும் மாறுதலினால் ஏற்படுகின்றது. இரைப்பை சவ்வு அழற்சி நோய் நாளடைவில் களம் இரைப்பை தொண்டை போன்ற உறுப்புகளை பாதிப்பிற்கு உள்ளாக்கும். தற்காலத்தில் அதிகமானோருக்கு ஏற்பட்டுள்ள இரைப்பை சவ்வு அழற்சி நோய் பாடசாலை மாணவர்களுக்கும் அநேகமான முதியோர்களுக்கும் பீடிக்கப்பட்டு பாதிப்பை உண்டாகின்றது.

**பஞ்சபல அமிர்த பானம்**

தயாரிப்பு மற்றும் விநியோகித்தல் ராஜபுர ஆயுர்வேத மருத்துவசாலை சிறிகல மொனறாகலை
தொலைபேசி 011 - 5727519, 0773 - 131070, 077 - 1777812
ஆயுர்வேத திணைக்களத்தின் தயாரிப்பு பதிவு இலக்கம்: 6/2/1/12/9
இலங்கை செயன்முறை தொழில்நுட்ப திணைக்களத்தின் பரீட்சித்த தரவு இலக்கம் சூ CTF 1106975
ஆயுர்வேத யோக சஙரா சபையின் அனுமதிக்கப்பட்ட ஔடதமாகும்.

# முன்னாள் புலிகளின் விளக்கமறியல் 22 வரை நீடிப்பு

## அன்ரனோவ் - 34 ரக விமானத்தைச் சுட்டு வீழ்த்திய குற்றச்சாட்டில்

**விமானத்தை அநுராதபுரம் காட்டுப் பகுதியில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்திய தாகத் தெரிவிக்கப் படுகின்றது. இதில் 4 ரஷ்யர்கள் உள்ளிட்ட 40 பேர் உயிரிழந்தனர்.**

கொழும்பு, ஜுலை 2
பலாலியிலிருந்து ரத்மலானைக்குச்சென்ற அன்ரனோவ் - 34 ரக விமானத்தைச் சுட்டு வீழ்த்தியதாக கைது செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் இருவரையும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க அநுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 1998 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி பலாலியிலிருந்து இரத்மலானைக்கு அன்ரனோவ் - 34 ரக விமானம் பயணமானது.


இந்த விமானத்தை அநுராதபுரம் காட்டுப் பகுதியில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகள் சுட்டு வீழ்த்திய தாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதில் 4 ரஷ்யர்கள் உள்ளிட்ட 40 பேர் உயிரிழந்தனர்.

அந்த விமானத்தைச் சுட்டு வீழ்த்தியவர்கள் என்ற சந்தேகத்தில், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் எறிகணைப் பிரிவில் பணியாற்றிய முன்னாள் போராளிகளான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெகன், சின்னத்திலகன் ஆகியோர் கடந்த 2012 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் மீது அநுராதபுரம் விசேட மேல் நீதிமன்றத்தில் விசாரணை முன்னெடுக்கப்பட்டு வந்தது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழக்கு விசாரணைக்கு வந்த போது நீதிபதி ஹேமா சுவாணபதி, சந்தேகநபர்கள் இருவரையும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை தடுத்து வைக்குமாறு உத்தரவிட்டார்.

விரைவில் இருவர் மீதான குற்றச்சாட்டுக்களையும் நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார். (ச-5)



முன்னாள் கடற்படைத் தளபதிக்கு நினைவுச் சின்னமாக வாள் கையளிக்கப்பட்டபோது...

# முன்னாள் தளபதிக்கு நேற்றுப் பிரியாவிடை

கொழும்பு,ஜூலை 2
இலங்கை கடற்படையின முன்னாள் தளபதியான வைஸ் அட்மிரல் ஜயனாத கொலம்பகேவுக்கு கொழும்பு கடற்படைத் தலைமையகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை கடற்படைப் பாரம்பரியங்களுடனான பிரியாவிடை நிகழ்வு இடம்பெற்றது.

கடற்படையினர் வழங்கிய பிரியாவிடை அணிவகுப்பு மரியாதையையும் அவர் ஏற்றார்.

புதிய கடற்படைத் தளபதியாக நேற்று செவ்வாய்க்கிழமை பதவியேற்ற ரியர் அட்மிரல் ஜயந்த பெரேரா, முன்னாள் தளபதிக்கு நினைவுச் சின்னமாக வாள் ஒன்றைப் பரிசளித்தார். (ச)

# தணிக்கை மூலம் நல்லிணக்கம் ஏற்படாது

## ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் அமைப்பு கூறுகிறது

**உண்மை தகவல்கள் மக்களை சென்றடைவதற்கு ஊடக கட்டுப் பாட்டை தவிர்ப்பது அவசியமாகும்.**

கொழும்பு,ஜூலை 2
இலங்கையில் ஊடக கட்டுப்பாடு நீக்கப்பட்டால் மாத்திரமே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்று சி.பி.ஜே என்ற ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் அண்மையில் இனக்கலவரம் ஏற்பட்டது. இதன்போது பல்வேறு சம்பவங்கள் குறித்து செய்திகள் வெளியாகின. எனினும் இலங்கை அரசு செய்திகள் வெளியாவதை தடுப்பதில் ஈடுபட்டிருந்தது.

அதனால் பல்வேறு உண்மைத் தகவல்கள் தடுக்கப்பட்டதுடன் இனங்களுக்கு இடையில் வதந்திகளும் பரப்பப்பட்டன.

இந்தநிலையில் உண்மைத் தகவல்கள் மக்களை சென்றடைவதற்கு ஊடக கட்டுப்பாட்டை தவிர்ப்பது அவசியமாகும் என்று சிபிஜே குறிப்பிட்டுள்ளது.

இறுதிப்போரின் போது ஊடகத்தணிக்கை இருந்ததன் காரணமாகவே இரண்டு தரப்பிலும் மனித உரிமைகள் மீறப்பட்டன.


ஊடகங்களுக்கு உரிய சுதந்திரம் வழங்கப்பட்டிருக் குமானால் இந்த மீறல்கள் இடம்பெற்றிருக்காது.

எனவே ஊடகக்கட்டுப்பாடு மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது.

கட்டுப்பாட்டை தவிர்ப்பதன் மூலமே அதனை மேற்கொள்ளலாம் என்று ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (ச)


Visalam Learnings
THE INTERNATIONAL SCHOOL FOR UK & SRI LANKAN CURRICULUM
ENGLISH MEDIUM MENTORING
from 3+ to A/L
London O/L, A/L (EDEXCEL)
(Provisions would be made for Local O/L, A/L exams as well)
Curriculum includes: Math, Science, ICT, English, Religion, Geography, Abacus, Tamil, Sinhala, History, Art & Craft, German/Norsk, Chess/Carom & Living etiquettes
Term starts From: 01/09/2014 (C/14842)
Admissions open for 3+, 4+, Gr-1 & Gr-2
Visalam 127/1, Temple Rd, Jaffna
021 221 9695, 075 979 9695







# வடக்குக்கும் வருவார் பாப்பரசர்



பாப்பரசர்

கொழும்பு,ஜூலை 2
இலங்கைக்கு அடுத்த வருடம் பயணம் மேற்கொள்ளவுள்ள பாப்பரசர் பிரான்ஸிஸ், வடக்குக்கும் வருகை தருவார் என்று மன்னார் ஆயர் இல்ல பேச்சாளர் தெரிவித்தார்.

மன்னாரிலுள்ள மடு தேவாலய அதிகாரிகளை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பாப்பரசரின் பாதுகாப்பு பணியாளர்கள் குழு சந்தித் துள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் மடு தேவாலய நிர்வாக உத்தியோகத்தர் அருட்தந்தை எமலியானுஸ் பிள்ளை கலந்து கொண்டார். பாப்பரசின் இலங்கைக்கான பயணத்தின் போது, மடு தேவாலயத்துக்கும் அவர் வருகைதருவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ச)


முதலாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 11 . 11 . 1952



விண்ணில் 13 . 07 . 2013

அமரர் மாரிமுத்து சிவபாதம்
(உரிமையாளர் - அனுஜா ஸ்ரோர்ஸ், கொழும்பு - 02)
திதி: 02.07.2014

மறைந்தும் மறையாமல் எம் உள்ளத்தில் உறைந்து நிற்கின்ற உத்தமரே!
அன்பின் சிகரமே, பாசத்தின் உறைவிடமே! எளிமையின் உருவமே,
பண்பில் உயர்ந்தவரே, எம் எல்லோர்க்கும் வழிகாட்டியாய் திகழ்பவரே!
ஓராண்டு அகன்றால் என்ன ஆண்டுகள் ஆயிரம் கடந்தாலும் ஆறிடுமோ
எங்கள் மனம் மாறிடுமோ உங்களின் மங்காத நினைவு!
துணை எமக்கு யாரென்று துவண்டிடும் வேளையில்
நீங்கள் என்றென்றும் எங்களை நல்வழியில் நடத்துவீர்கள்
என்கிற துணிவிலேயே வாழ்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக என்றென்றும்
இறைவனைப் பிரார்த்திக்கும்

பாசமிகு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், பெறாமக்கள், மைத்துனர்கள், மைத்துனிமார்,
உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும்
அனுஜா ஸ்ரோர்ஸ் ஊழியர்கள்.

118/4, கியூ வீதி, கொழும்பு - 02.
குடும்பத்தினர்
(45504)(4536)



உலகெங்கும் உள்ள முஸ்லிம் மக்களது றம்ழான் நோன்புப் பெருநாளை முன்னிட்டு துனியாவில் உள்ள சந்தைத் தொகுதி ஒன்றில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கும் பேரீச்சம்பழங்கள்.

# 200 இராணுவத்தினரை ஈராக் அனுப்புகிறது அமெ.

## ஒப்புதல் வழங்கினார் ஒபாமா



பாக்தாத், ஜூலை 2
ஈராக்கில் கிளர்ச்சியாளர்களின் கை ஓங்கி வரும் நிலையில் மேலும் 200 இராணுவத்தினரை அங்கு அனுப்புவதற்கு அமெரிக்கா தீர்மானித்துள்ளது.
அதற்கான அனுமதியை அந்த நாட்டு ஜனாதிபதி பராக் ஒபாமா வழங்கியுள்ளார். .
ஈராக்கில் ஷியா அரசுக்கு எதிராக சன்னி பிரிவைச் சேர்ந்த ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தினர் தாக்கு தல்களை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் ஈராக்கின் முக்கிய நகர்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.
கிளர்ச்சியாளர்கள் தரப்பில் 15 ஆயிரம் பேரே உள்ளனர் என்று கூறப்படுகின்றது. 15 லட்சம் துருப்புக்கள், 400 டாங்கிகள் மற்றும் 246 போர் விமானங்கள் கொண்ட ஈராக் இராணுவத்தால் அவர்களின் முன்னேற்றத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதையடுத்து அமெரிக்காவின் உதவியை நாடியது ஈராக்.
ஈராக்கில் முகாமிட்டிருந்த அமெரிக்கப் படைகள் 2011ஆம் ஆண்டே அங்கிருந்து வெளியேறின. அங்கு முகாமிட்டிருந்தபோது ஆயிரக்கணக்கான அமெரிக்க வீரர்கள் உயிரிழந்தனர். பலத்த சேதம் ஏற்பட்டது. முன்னர் ஏற்பட்ட கசப்பான அனுபவத்தால் அமெரிக்கா இப்போது உடனடியாகக் களத்தில் இறங்கவில்லை. பாக்தாத்தில் உள்ள அமெரிக்கத் தூதரகம் மற்றும் அங்கு முகாமிட்டுள்ள இராணுத்தினரைப் பாதுகாக்கவும், அவர்களுக்கு பயிற்சி அளிக்கவும் 300 ஆலோசகர்கள் அனுப்பப்படுவார்கள் என்று அமெரிக்க ஜனாதிபதி அறிவித்தார். அவர்கள் தற்போது ஈராக் இராணுவத்தினருக்குப் பயிற்சிகளை வழங்கி வருகின்றனர்.
இந்த நிலையில், ஈராக்குக்கு மேலும் 200 இராணுவத்தினரை அனுப்புவதற்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளார்.
அதன்படி, ஏற்கனவே ஈராக்கில் தங்கியிருந்த 275 சிப்பாய்கள், பின்னர் அறிவிக்கப்பட்ட 300 பேர், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள 200 பேர் என ஈராக்கில் உள்ள அமெரிக்கத் துருப்புகளின் எண்ணிக்கை 775 ஆக உயர்ந்துள்ளது.
'இவர்கள் அனைவரும் அங்குள்ள அமெரிக்க தூதரகங்கள் மற்றும் தலைநகர் பாக்தாத்தில் உள்ள சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்" என்று அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்ரகனின் செய்தித் தொடர்புத்துறை செயலாளர் ஜான் எஃப் கிர்பி தெரிவித்துள்ளார். (ந)

# அகதிகள் 500 பேர் இத்தாலி கடலில் மீட்பு



ரோம், ஜூலை 2
இத்தாலிக் கடற்பகுதியில் தத்தளித்த 500க்கும் அதிகமான அகதிகள் அந்த நாட்டுக் கடற்படையால் மீட்கப்பட்டு, சிசிலி தீவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். மீன்பிடிப் படகு மூலம் ஆபிரிக்காவில் இருந்து தப்பித்து இத்தாலி வந்த அகதிகளின் படகு கடலில் தத்தளிப்பதை சிசிலி தீவு அருகே கண்டறிந்த இத்தாலி கடற்படை வீரர்கள், அனைவரையும் மீட்டு வேறு கப்பலுக்கு மாற்றினர். அந்தப் படகில் ஏற்பட்ட மூச்சுத்திணறல் காரணமாக 30 பேர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டனர் என்று இத்தாலிக் கடற்படை தெரிவித்துள்ளது. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் இத்தாலி கடல்பகுதியில் இது போல சிக்கித் தவித்த 5 ஆயிரம் பேர் மீட்கப்பட்டு சிசிலி தீவு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். (ந)

# போர் நிறுத்தம் இனி நீடிக்கப்படமாட்டாது

## உக்ரேன் ஜனாதிபதி திட்டவட்டம்

கீவ், ஜூலை 2
தாம் அறிவித்திருந்த போர் நிறுத்தத்தைத் தொடர முடியாது என்று தெரிவித்துள்ளார் உக்ரைன் ஜனாதிபதி பெட்ரோ போரோஷெங்கோ.
உக்ரைனின் கிழக்குப் பகுதியான டன்ட்ஸ்க்கை சுயாட்சிப் பிரதேசமாக அறிவிக்க வேண்டும் அல்லது ரஷ்யாவுடன் இணைக்க வேண்டும் என்று தெரிவித்து ரஷ்ய ஆதரவுக் கிளர்ச்சியாளர்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் அரசுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடந்த பேச்சின் அடிப்படையில் கடந்த 27ஆம் திகதிவரை போர்நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
உக்ரைன் அரசு ஐரோப்பிய யூனியனுடன் கடந்த வெள்ளிக்கிழமை கூட்டாண்மை உடன்பாடு செய்துகொண்டது. அதைத் தொடர்ந்து இந்த போர் நிறுத்தத்தை உக்ரைன் அரசு மேலும் 3 நாள்கள் நீடித்திருந்தது. இந்தப் போர் நிறுத்த நீடிப்புக் காலம் நேற்றுமுன்தினம் இரவுடன் முடிவடைந்த நிலையில் மீண்டும் போர் நிறுத்தத்தை தொடர முடியாது என்று அறிவித்துள்ளார் உக்ரைன் ஜனாதிபதி.
ஆயினும் உக்ரைன் தனது சமாதானத் திட்டத்தை கைவிடவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந)



பெட்ரோ போரோஷெங்கோ

# மூடப்படுகிறது ஓர்க்குட்

நியூயோர்க், ஜூலை 2
கூகுள் நிறுவனத்தின் சமூக இணையத்தளமான ஓர்க்குட்டின் வர்த்தகப் பயன்பாடு மந்தமாக இருப்பதால் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதியுடன் அந்தத் தளத்தை மூடுவதற்கு அந்த நிறுவனம் தீர்மானித்துள்ளது. இந்தத் தகவலை ஓர்க்குட் சமூக இணையத்தளத்தின் பொறியியல் இயக்குநர் போலோ கோல்கர் தெரிவித்துள்ளார்.
ஓர்க்குட்டில் இணைந்திருக்கும் பயனாளர்கள் தமது தகவல் பக்கங்களை பரிமாறிக் கொள்ளும் வசதி காணப்படும் என்று தெரிவித்துள்ள அவர், புதிய பயனாளர்கள் இணைத்துக் கொள்ளப்படுவது ஜூன் 30 ஆம் திகதியுடன் முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.
கடந்த பத்து ஆண்டுகளில், ஓர்க்குட் தளத்தை விடவும் யூடியூப், பிளொக்கர், கூகுள் பிளஸ் என்பன மக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளதாலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ந)

# அமெரிக்கர்களை விடுவியுங்கள்

## வட கொரியாவிடம் வோஷிங்ரன் கோரிக்கை



வொஷிங்டன், ஜூலை 2
வடகொரியாவில் சிறை வைக்கப்பட்டுள்ள இரு அமெரிக்கர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று அந்த நாட்டிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது அமெரிக்கா.
வடகொரியாவுக்கு எதிராகச் செயற்பட்டனர் என்று தெரிவித்து மேத்யூ மில்லர் மற்றும் ஜெப்ரி போவ்லே ஆகிய இரு அமெரிக்கர்கள் அந்நாட்டின் பாதுகாப்புத் தரப்பினரால் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவர் மீதும் தேச விரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர் என்று தெரிவித்து வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இந்தநிலையிலேயே அமெரிக்கா இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.
அதேவேளை, கைது செய்யப்பட்ட இருவரையும் கடந்த 20ஆம் திகதி அமெரிக்க அதிகாரிகள் சந்தித்துப் பேசியிருந்தனர்.
இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அமெரிக்க அதிகாரி ஒருவர், "மனிதாபிமான அடிப்படையில் அவர்கள் இருவரையும் விடுவிப்பதற்கு வட கொரியா நடவடிக்கை எடுக்க வேண்டும். இவர்கள் இருவர் மட்டுமல்லாது, வடகொரியாவில் சிறை வைக்கப்பட்டுள்ள அனைத்து அமெரிக்கர்களையும் விடுவிக்க வேண்டும் என்று கோரியுள்ளோம். வெளிநாடுகளில் உள்ள அமெரிக்கர்களின் பாதுகாப்பைத் தவிர ஏனைய எதற்கும் நாம் முக்கியத்துவம் தரமாட்டோம்" என்று தெரிவித்துள்ளார். (ந)

# பிஸ்டோரியஸுக்கு மனநல பாதிப்பில்லை

## நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவ அறிக்கை கூறுகின்றது

கடந்த ஆண்டு பெப்ரவரி 14ஆம் திகதி தென்னாபிரிக்காவின் பிரிட்டோரியா நகரில் உள்ள பிஸ்டோரியஸ் வீட்டில் அவ ரது தோழி ரீவா ஸ்டீன்காம்ப் சுட்டுக் கொல்லப்பட்டார். அதையடுத்து பிஸ்டோரியஸ் கைது செய்யப்பட்டார்.

தனது தோழியைச் சுட்டுக் கொன்றபோது, மாற்றுத்திறனாளி ஓட்டப்பந்தய வீரர் ஒஸ்கர் பிஸ்டோரியஸுக்கு எந்த விதமான மனநல பாதிப்பும் இருக்கவில்லை என்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவ அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அதனால், தோழியின் கொலைக்கான முழுப் பொறுப்பையும் பிஸ்டோரியஸே ஏற்க வேண்டியநிலைஏற்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகளின் போது, தோழியை துப்பாக்கியால் சுட்ட சந்தர்ப்பத்தில் பதற்ற நோயால் பிஸ்டோரியஸ் பாதிக்கப்பட்டிருந்தார் என்று, அவரது வழக்கறிஞர்கள் வாதிட்டனர். தனது தோழியை தான் வேண்டுமென்றே சுட்டுக்கொல்லவில்லை என்றும் பிஸ்டோரியஸும் கூறியிருந்தார்.
ஆயினும் தற்போது சமர்ப்பிக்கப்பட்ட மருத்துவ அறிக்கையில், பிஸ்டோரிஸுக்கு எந்த விதமான மனநல பாதிப்பும் இருக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த ஆண்டு பெப்ரவரி 14ஆம் திகதி தென்னாபிரிக்காவின் பிரிட்டோரியா நகரில் உள்ள பிஸ்டோரியஸ் வீட்டில் அவரது தோழி ரீவா ஸ்டீன்காம்ப் சுட்டுக் கொல்லப்பட்டார். அதையடுத்து பிஸ்டோரியஸ் கைது செய்யப்பட்டார். (ந)



சரியான மருத்துவக் கவனிப்பு வழங்கப்படாத காரணத்தால் இந்தியாவிலுள்ள ஈழத்தமிழர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று அவரது உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளதுடன், மருத்துவமனை நிர்வாகத்துக்கு எதிராக போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர். விழுப்புரம் மாவட்டம் கீழ்ப்புதுப்பற்றில் உள்ள இலங்கை அகதிகள் முகாமைச் சேர்ந்த ஜீ. சந்திரசேகரன் (வயது - 29) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். வயிற்று வலி காரணமாக அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை பாண்டிச்சேரி மருத்துவ அறிவியல் கூடத்தில் சேர்க்கப்பட்டார். அவருக்கு அங்கு ஊசி மருந்து ஏற்றப்பட்டது என்றும் அதன்பின்னரே உடல் வலி அதிகரித்து அவர் உயிரிழந்தார் என்றும் உறவினர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். (ற)

## மக்களால் விரட்டப்பட்ட சிரஞ்சீவி

கோதாவரி, ஜூலை 2

ஆந்திராவில், எரிவாயு குழாய் கசிவால் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை நேரில் சந்திக்க வந்த முன்னாள்மத்திய அமைச்சரும், தெலுங்கு நடிகருமான சிரஞ்சீவியை, கிராம மக்கள் துரத்தியடித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திராவின் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில், கெயில் நிறுவனத்துக்குச் சொந்தமான எரிவாயு குழாயில் கசிவு ஏற்பட்டு, பெரும் தீ விபத்து நிகழ்ந்தது. அதில் 20 பேர் உடல் கருகி உயிரிழந்தனர்.

விபத்து நடந்து நான்கு நாள்கள் கழிந்த நிலையில், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த, முன்னாள் மத்திய அமைச்சரும், பிரபல தெலுங்கு நடிகருமான சிரஞ்சீவி, ஆந்திர மாநில காங். முன்னாள் தலைவர் போஸ்தா சத்யநாராயணா ஆகியோர், விபத்து நடந்த நாகாராம் கிராமத்துக்குச் சென்றனர். அவர்களுடன், காங்கிரஸ் நிர்வாகிகளும் சென்றனர். அப்போது, அங்கு திரண்ட கிராம மக்கள், உள்ளே வர வேண்டாம்; திரும்பிப் போ என, சிரஞ்சீவிக்கு எதிர்ப்பு தெரிவித்து, கடுமையாகக் கோஷமிட்டனர். அவர்களை, கிராமத்துக்குள் நுழைய விடாமல் தடுத்தனர். இதனால், இரு தரப்பினருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. இதையடுத்து, 10 நிமிடங்கள் மட்டுமே அங்கு இருந்த சிரஞ்சீவி, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டு, அங்கிருந்து வேகமாகக் கிளம்பினார். இந்தச் சம்பவம், அங்கு பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ற)

## போர் விமானங்கள் வாங்குகிறது இந்தியா



புதுடில்லி, ஜூலை 2

பிரான்ஸின் 'தாசல்ட் ஏவியேஷன்' நிறுவனத்தினரிடம் இருந்து, ரபாலே ரக, 126 நவீன போர் விமானங்களைக் கொள்வனவு செய்ய இந்திய மத்திய அரசு திட்ட மிட்டு வருகின்றது என்று கூறப்படுகின்றது. அதற்கென இந்திய நாணய மதிப்பின்படி ஒரு லட் சம் கோடி ரூபா நிதி ஒதுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றும் தெரிய வருகின்றது.

இதற்கான ஒப்பந்தம் தொடர்பாக, விமான உற்பத்தியாளர்களிடம் ஏற்கனவே, தொழில்நுட்ப ரீதியிலான பேச்சு நடைபெற்று உள்ளது. தற்போது இந்தப் போர் விமான ஒப்பந்தத்தை முடிவு செய்ய வேண்டிய இறுதிக் கட்டத்தில் மத்திய அரசு, உள்ளது. விமானங்களுக்கான நிதி 10 ஆண்டுகளுக்கு பிரித்து வழங்கப்படும்.

இந்திய விமானப் படையில் தற்போது 39 போர் விமான தொகுப்புகள் உள்ளன. ஆயினும் மேலும் 39 தேவை என்று அதிகாரிகள் விரும்புகின்றனர். அதனால், போர் விமானங்களின் தேவை குறித்து, இராணுவ அமைச்சர் அருண் ஜெட்லியிடம், ஏற்கனவே விமானப்படை அதிகாரிகள் விவரித்துள்ளனர். எனவே, பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் பேபியசின் தற்போதைய, இந்திய பயணத்தின்போது, ரபாலே விமானங்கள் வாங்குவது தொடர்பான ஒப்பந்தம் இறுதியாகலாம் என்று நம்பப்படுகிறது. (ற)

# கச்சதீவில் இந்திய மீனவர் மீன்பிடிக்க உரிமையில்லை

## இந்திய மத்திய அரசு நீதிமன்றில் தெரிவிப்பு

சென்னை, ஜூலை 2

கச்சதீவில் மீன்பிடிக்க இந்திய மீனவர்களுக்கு உரிமையில்லை என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கச்சதீவில் மீன்பிடிக்க இந்திய மீனவர்களுக்கு உரிமை உண்டு என்று மீனவர்கள் பாதுகாப்பு பேரவையின் தலைவர் பீட்டர் ராயப்பன் தாக்கல் செய்திருந்த வழக்கின் விசாரணைகளின்போது அப்போதையை, காங்கிரஸ் தலைமையிலான இந்திய மத்திய அரசு, சென்னை உயர் நீதிமன்றத்தில் பதில் மனு தாக்கல் செய்தது. அதில், 1974 ஒப்பந்தத்தின்படி கச்சதீவில் மீன்பிடிக்க உரிமையில்லை என்றும், 1976ஆம் ஆண்டிலேயே கப்பல் போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது என்று மத்திய அரசு தெரிவித்திருந்தது.

இந்தநிலையில், கச்சதீவு தொடர்பாக உண்மைக்கு மாறான தகவல்களை மத்திய அரசு கொடுத்துள்ளது என்று மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதில், 1974ஆம் ஆண்டு ஒப்பந்தம் குறித்து உண்மைக்கு மாறான தகவல்களை மத்திய அரசு கொடுத்துள்ளது. ஒப்பந்தத்தின்படி இரு நாட்டு மீனவர்களும் அந்தப் பகுதியில் மீன்பிடிக்க, அங்கு வழிபாடு நடத்த உரிமை உண்டு. இரு நாட்டு அரசுகளும் இதனை உறுதி செய்தன என்று தெரிவிக்கப்பட்டது.

மேலும், ஒப்பந்த விவகாரத்தை நாடாளுமன்றத்தில் அப்போதைய வெளியுறவுத் துறை அமைச்சர் ஸ்வரண் சிங் உறுதி செய்தார் என்றும் மனுதாரர் தரப்பில் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்நிலையில், இவ்வழக்கு விவகாரத்தில் மத்திய அரசு சார்பில் மீண்டும் கூடுதலாக பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது. கச்சதீவில் மீன்பிடிக்க இந்தியமீனவர்களுக்கு உரிமை இல்லை என்று வெளியுறவுத் துறை அமைச்சகம் தாக்கல் செய்துள்ள பதில் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்திய மீனவர்கள் மீதான தாக்குதலை இலங்கை அரசு நியாயப்படுத்தக் கூடாது என்றும், கச்சதீவில் வலைகளை உலர்த்த, கச்சதீவில் மீனவர்கள் ஓய்வெடுக்க உரிமை உள்ளது என்றும் இந்திய மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.



அதேவேளை, கச்சதீவு பிரச்சினையில் முந்தைய காங்கிரஸ் அரசு கடைப்பிடித்த அதே கொள்கையையே, நரேந்திர மோடி அரசும் பின்பற்றுவது தமிழக மீனவர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்னர், இராமேஸ்வரம் வந்த பா.ஜனதா தலைவர் சுஷ்மா ஸ்வராஜ், கச்சதீவில் மீன்பிடி உரிமையை மீட்டுத்தருவதாக வாக்குறுதி அளித்திருந்த நிலையில், தற்போது அதற்கு மாறானநிலைப்பாடை பா.ஜனதா தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக மீனவர்கள் குற்றஞ்சாட்டி உள்ளனர். (ற)

## தலைமைப் பண்பு நிறைந்தவராம் ராகுல்

புதுடில்லி, ஜூலை 2

காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுலுக்கு, கட்சியை வழிநடத்துவதற்கு தலைமைப் பண்புகள் இருக்கின்றன என்று தெரிவித்துள்ளார் அந்தக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஷகீல் அகமது.

ராகுலுக்கு ஆளும் திறன் கிடையாது என்று கட்சியின் பொதுச் செயலாளர்களில் ஒருவரான திக்விஜய் சிங் கூறியிருந்த போதும் பின்னர் அவர் அதிலிருந்து பல்டி அடித்த நிலையில், ராகுல் குறித்த ஷகீல் அகமதுவின் கருத்து முக்கியத்துவம் பெறுகிறது. (ற)

## பா.ஜ. கட்சியை உளவு பார்த்தது அமெரிக்கா

நியூயோர்க், ஜூலை 2





அமெரிக்க நீதிமன்றத்தின் அனுமதியுடன், அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு அமைப்பு 2010 ஆம் ஆண்டு பாரதீய ஜனதா கட்சி உள்ளிட்ட சர்வதேச அளவில் 5 முக்கிய அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளை உளவு பார்த்தது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. அமெரிக்காவிலிருந்து வெளிவரும் வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகை இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இந்தியாவில் பா.ஜ.க., லெபனானில் அமல், வெனிசுலாவில் உள்ள கட்சி எகிப்து முஸ்லிம் சகோதர கட்சி, பாகிஸ்தான் மக்கள் கட்சி உட்பட 5 கட்சிகள் உளவு பார்க்கப்பட்டுள்ளன என்று ஸ்நோடென் வெளியிட்டுள்ள ஆதாரங்களை குறிப்பிட்டுவொஷிங்டன்போஸ்ட தகவல்வெளியிட்டுள்ளது.(ற)

# மவுலிவாக்கம் கட்டட விபத்து உயிரிழப்பு 28 ஆக அதிகரிப்பு

சென்னை, ஜூலை 2

மவுலிவாக்கம் கட்டட விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 28 ஆக அதிகரித்துள்ளது. தரைதளம்மற்றும்3ஆவது தளத்தில் 29 பேர் சிக்கியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. அவர்களை மீட்கும் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன.



நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் காலை வரை 8 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் 3 பேர் நேற்றுக் காலை உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். நேற்றுக் காலை மீட்கப்பட்ட மகேஷ் என்பவர் கட்டட இடிபாடுகளுக்குள் தனது மனைவி உள்ளிட்ட பலர் உயிருடன் சிக்கிக் கொண்டிருப்பதாகக் கூறியதையடுத்து மீட்புப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்றும், மேலும் பலர் உயிருடன் மீட்கப்பட வாய்ப்பு இருக்கின்றது என்றும் மீட்புப் பணியாளர்கள் நம்பிக்கை தெரிவித்தனர்.

மீட்கப்பட்டவர்கள் அளித்த தகவலின்படி தரை மற்றும் இரண்டாம் தளம் முழுமையாக சேதமடையவில்லை எனத் தெரிகிறது. அதனால் அங்கு சிக்கிக் கொண்டிருப்பவர்கள் உயிருடன் மீட்கப்பட வாய்ப்பிருக்கிறது என்றும் கூறப்படுகின்றது. (ற)

# பொதுபல சேனாவுடன் தொடர்பா? நிரூபித்தால் பதவி விலகத் தயார்

## தவறான கருத்து நிலவுகிறது என்கிறார் கோத்தபாய

கொழும்பு.ஜூலை 2
பொது பல சேனா அல்லது வேறு அதுபோன்ற அமைப்புகளுடன் தனக்குத் தொடர்புகள் இருப்பதாக நிரூபித்தால், பதவி விலகுவேன் என்று பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.
கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**எதிர்காலத்தில் அரசியலில் நுழைவேன் என்று கூறப்படுவதை நிராகரிக்கமாட்டேன். ஜனாதிபதி அழைத்தால், நிச்சயமாக அரசியலில் பிர வேசிப்பேன்.**

எனக்கும் பொதுபல சேனாவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இவையெல்லாம் அடிப்படையற்ற குற்றச்சாட்டுகள்.
சில முஸ்லிம் அரசியல்வாதிகளும், எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும்தான் என்னை எப்போதும் குற்றம்சாட்டுகின்றனர். அவர்கள் எந்த அடிப்படையில் இவ்வாறு கூறுகின்றனர் என்று தெரியவில்லை.
அவர்கள் இதுபோன்ற ஆதாரமற்ற கட்டுரைகளை எழுதுவது மிகவும் தவறானது.
அனைத்துலக ஊடகங்கள் அவர்களை உண்மையானவர்கள் என்று நம்புகிறார்கள்.
எனக்கு பொது பல சேனா அமைப்புடன் தொடர்பு இருப்பதை அவர்களால் நிரூபிக்க முடிந்தால், நான் பதவியை விட்டு விலகுவேன்.
எதிர்காலத்தில் அரசியலில் நுழைவேன் என்று கூறப்படுவதை நிராகரிக்கமாட்டேன். ஜனாதிபதி அழைத்தால், நிச்சயமாக அரசியலில் .பிரவேசிப்பேன்.
தற்போது அதிகாரத்தில் உள்ள அரசியல்வாதிகள் பலரை விடவும், என்னால், மிகவும் திறமையாகச் செயற்பட முடியும்-என்றார். (ச)



கோப்புப்படம்

### றுஹூணு பல்கலைக்கழக மாணவர் மீது தாக்குதல்

கொழும்பு.ஜூலை 2
றுஹூணு பல்கலைக்கழக மாணவர்கள் மீது நேற்று முன்தினம் திங்கட்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்கச் செயலர் உட்பட எட்டு பேர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.
தாக்குதலில் காயமடைந்த பல்கலைக்கழக மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.
தாக்குதலுக்கு இலக்கான அனைவரும் மாணவத் தலைவர்கள் என்று அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அமைப்பாளர் நஜித் இந்திக்க தெரிவித்தார்.
மாணவர் அமைப்பு தலைவர்களை இலக்கு வைத்து மிகவும் திட்டமிட்ட அடிப்படையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (ச)

# இன முரண்பாட்டுக்கு அரசே முழு காரணம்

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு.ஜூலை 2
இன முரண்பாடுகள் தொடர்பில் எவ்வாறான நியாயங்களை முன்வைத்தாலும், சம்பவங்கள் இடம்பெறுவதற்கு அரசே காரணம்.
ஆளும் கட்சியினரே இனவாத முரண்பாடுகளை தூண்டுகின்றனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் அனுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பீ.ஹரிசன் குற்றம் சுமத்தியுள்ளார்.



பீ.ஹரிசன்

சிங்களப் பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு கூறினார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
பேருவளை, அளுத்கம சம்பவங்களுடன் ஐக்கிய தேசியக் கட்சிக்கோ அல்லது வேறு தரப்பினருக்கோ தொடர்பு இருந்திருந்தால், சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருப்பார்கள்.
வன்முறைச் சம்பவத்தில் ஆளும் கட்சியுடன் தொடர்புடையவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதால் தான் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை.
இன, மத வன்முறைகளுடன் அரசுக்கு தொடர்பு இருப்பதாக ஆளும் கட்சி அமைச்சர்கள் பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளனர். இதனை விடவும் வேறும் சாட்சிகள் அவசியமில்லை.
அரசுக்குள் உயர் பதவிகளை வகித்து வரும் முக்கிய தலைவர்களே இன, மதவாத அமைப்புக்களை வழி நடத்துகின்றனர்.
இன முரண்பாடுகள் தொடர்பில் எவ்வாறான நியாயங்களை முன்வைத்தாலும், சம்பவங்கள் இடம்பெறுவதற்கு அரசே காரணம்.-என்றார். (ச)



இலங்கையில் அங்கீகாரம் பெற்ற 23 ஆவது வணிக வங்கியான கார்கில்ஸ் வங்கி தனது உத்தியோகபூர்வ செயற்பாடுகளை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பித்திருந்தது.
இந்த வங்கியின் நினைவுக் கல்லை இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர். (ச)

### வீதித் தடை உபகரணங்களை விற்பனை செய்த அதிகாரி கைது

கொழும்பு.ஜூலை 2
பொலிஸ் வீதித் தடை உபகரணங்களை பழைய இரும்புக் கடைக்கு விற்பனை செய்த பொலிஸ் அதிகாரி ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.
ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களின் போதும், வேறு முக்கிய சந்தர்ப்பங்களின் போதும் வீதிகளை மறிப்பதற்கு இரும்பிலான பொலிஸ் வீதித் தடைகள் பயன்படுத்தப்படுகின்றன.
கொழும்பு மற்றும் புறநகர்ப் பகுதிகளில் பல்வேறு தேவைகளுக்காக இவ்வாறு வீதித் தடைகள் பயன்படுத்தப்படுகின்றன.
இவ்வாறான பொலிஸ் வீதித் தடை உபகரணங்களைத் திருடி, பழைய இரும்புகள் விற்பனை செய்யும் கடையொன்றுக்கு உயர் பொலிஸ் அதிகாரியொருவர் விற்பனை செய்துள்ளார்.
பொலிஸாருக்கு சொந்தமான இரும்பிலான பொலிஸ் வீதித் தடை உபகரணங்களை விற்பனை செய்து பணம் பெற்றுக் கொண்டதாக உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் மீது குற்றம் சுமத்தப் பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.
கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரை எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டே நீதிவான் உத்தரவிட்டுள்ளரர். (ச)

# வழமையான உடையுடன் பீரிஸ்

கொழும்பு, ஜூலை 2
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கலந்துரையாடலில் பங்கேற்ற அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஒரே மாதிரியான ஆடை அணிந்திருந்த போதும், வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மாத்திரம் தனது வழமையான ஆடையுடன் பங்கேற்றுள்ளார்.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் பெந்தோட்டையில் உள்ள நட்சத்திர விடுதியில் ஆரம்பமானது. இந்தக் கலந்துரையாடல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.
இந்தக் கலந்துரையாடலில், பங்கேற்ற பிரதமர், அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தனியாக அடையாளப்படுத்தும், மஹிந்த ராஜபக்ஷவின் படம் பொறிக்கப்பட்ட மேற்சட்டையை அணிந்திருந்தனர்.
எனினும், வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஷ் மட்டும், தனது வழக்கமான ஆடையுடன் பங்கேற்றுள்ளார்.
விரைவில் தேசிய அளவிலான தேர்தல்கள் நடக்கலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில் இந்தக் கருத்தரங்கு நடத்தப்படுகிறது. இதில் அபிவிருத்தி தொடர்பான திட்டங்கள் குறித்தும், ஐ.நாவின் விசாரணையை எதிர்கொள்வது குறித்தும் முக்கியமான கலந்துரையாடல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)



கலந்துரையாடலில் கலந்து கொள்ள வந்த மஹிந்தவை வரவேற்ற போது....

# பௌத்த சங்கத்தால் புறக்கணிக்கப்படும் பொது பல சேனா

கொழும்பு,ஜூலை 2
பொதுபல சேனா அமைப்பு சிங்கள மக்களால் மாத்திரமன்றி பௌத்த சங்கத்தாலும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றது என்று அந்தச் சங்கத்தின் தலைவர் கிரமஜோதி விமல தேரர் தெரிவித்தார்.






தான் பல வருடங்கள் வெளிநாட்டில் பணியாற்றி விட்டு வந்து இந்த அமைப்பில் இணைந்ததன் பின்னர் தன்னைப் பார்ப்பதையும் தான் பங்குபற்றும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதையும் கூட்ப் பலர் தவிர்த்து வருகின்றனர் என்று அவர் கூறினார். தன்னோடு நெருக்கமாக இருந்த பல துறவிகள் பலர் தன்னை ஒதுக்கி வைக்க ஆரம்பித்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.
பொது பலசேனா அமைப்பு இலகுவில் வன்முறையைத் தூண்டக்கூடிய சக்தியாக இருப்பதற்கு அந்த அமைப்புக்கு அரச ஆதரவும் அனுசரணையும் கிடைப்பதே காரணம் என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சர்வதேச மணல் சிற்ப போட்டியில் முதலாவது இடம் வென்ற இந்தியர்

50 இற்கும் மேற்பட்ட சர்வதேச மணல் சிற்பப் போட்டிகளில் பங்கேற்று பரிசுகள் பெற்றுள்ளார். 37 வயதான பட்நாயக்குக்கு இந்திய அரசின் உயரிய விருதான பத்மஸ்ரீ விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில், மணல் சிற்பங்கள் செய்பவர்களுக்கு ஆண்டுதோறும் சர்வதேச அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசில்கள் வழங்கப்படுவது வழக்கம். இந்த ஆண்டுக்கான சர்வதேச மணல் சிற்ப போட்டி-2014 சமீபத்தில் அட்லான்டிக் நகரில் நடத்தப்பட்டது. இதில் உலகம் முழுவதும் இருந்து ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர். கடந்த ஜூன் 19ஆம் திகதி ஆரம்பித்த இந்தப் போட்டியில் தனிநபர் மற்றும் இருவர் இணைந்து மணல் சிற்பம் செய்யும் போட்டி நடத்தப்பட்டது. இதில் இந்தியா சார்பில் ஒடிசாவைச் சேர்ந்த கலைஞர் சுதர்சன் பட்நாயக் கலந்துகொண்டு முதல் பரிசை வென்றார்.
அவர் 50 இற்கும் மேற்பட்ட சர்வதேச மணல் சிற்ப போட்டிகளில் பங்கேற்று பரிசுகள் பெற்றுள்ளார். 37 வயதான பட்நாயக்குக்கு இந்திய அரசின் உயரிய விருதான பத்மஸ்ரீ விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது. சமுதாய விழிப்புணர்வோடு, மக்களின் முக்கிய பிரச்சினைகளை மையமாக வைத்து அவர் செய்யும் மணல் சிற்பங்கள் மக்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றன.
இந்த போட்டியில் கலந்து கொள்பவர்கள், 10 தொன் மணல் கொண்டு, 30 மணி நேரத்தில் மணல் சிற்பம் செய்ய வேண்டும். இதில் தனிநபர் மணல் சிற்ப போட்டியில் 'மரங்களைக் காப்போம்: உலகைக் காப்போம்' என்ற தலைப்பில் சுதர்சன் பட்நாயக் வடித்த சிற்பத்துக்கு பரிசு தரப்பட்டது. இந்தப் பரிசை அட்லான்டிக் நகரின் மேயர் இவருக்கு அளித்தார். இரட்டையர் போட்டியில் சுதர்சன், மேத்யூ ராய் டிபர்ட் உடன் இணைந்து செய்த சிற்பத்துக்கு 5ஆவது பரிசு கிடைத்துள்ளது.



# அந்தாட்டிக்காவிலுள்ள மலைக்கு இந்திய விஞ்ஞானியின் பெயர்

## சூட்டியது அமெரிக்கா

அந்தாட்டிக்காவிலுள்ள ஒரு மலைக்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த விஞ்ஞானியின் பெயரைச் சூட்டியுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.
இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர் அஹௌரி சின்ஹா. உயிரியல் ஆராய்ச்சி நிபுணரான அவர் தற்போது அமெரிக்காவின் மின்னசோட்டா பல்கலைக்கழகத்தில் மரபியல், செல் உயிரியல் மற்றும் வளர்ச்சித்துறையில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார்.
இந்தப் பல்கலைக்கழகம் அமெரிக்க புவியியல் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்டதாகும்.
இந்த நிலையில், சின்ஹா கடந்த 1971-72 ஆம் ஆண்டுகளில் பல்வேறு புதிய அரிய வகை கடல் வாழ் உயிரினங்களைக் கண்டு பிடித்திருக்கிறார். குறிப்பாக, கடந்த 1972, 1974ஆம் ஆண்டுகளில் அமெரிக்க கடலோரப் பகுதியான பெலிங்சாசென் மற்றும் அமுன்ட்சென் கடலில் கடற்சிங்கங்கள், திமிங்கிலங்கள் மற்றும் பறவைகள் பலவற்றைக் கண்டுபிடித்துள்ளார்.




இந்த நிலையில், அவரது கண்டுபிடிப்பைப் பாராட்டும் வகையில், அந்தாட்டிக்காவிலுள்ள எரிக்சன் ப்ளப் அருகிலிருக்கும் 990 மீற்றர் உயரமுள்ள மலைக்கு 'மவுண்ட் சின்ஹா' என்று பெயரிடப்பட்டுள்ளது. அந்தாட்டிக் நேம்ஸ் அட்வைஸரி குழு மற்றும் அமெரிக்க புவியியல் ஆய்வு நிறுவனமும் இணைந்து இதற்கு ஒப்புதல் அளித்துள்ளன.
இந்திய விஞ்ஞானியான சின்ஹா 1954ஆம் ஆண்டு அலகாபாத் பல்கலைக்கழகத்தில் இருந்து பி.எஸ்.சி. பட்டத்தையும், 1956 இல் பாட்னா பல்கலைக்கழத்தில் இருந்து எம்.எஸ்.சி ஜுவாலஜி பட்டத்தையும் பெற்றவர். அதன்பின்னர், அந்தாட்டிக் பகுதியில் கடல்வாழ் உயிரினங்களை பல்லுயிர் பெருக்கம் செய்வது குறித்து ஆராய்ச்சி செய்ய அவரை அமெரிக்கா அழைத்தது. அங்கு சென்ற அவர் பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டு 100 இற்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளார். 25 ஆண்டுகளாக ஆராய்ச்சிப் பேராசிரியராகவும் உள்ளார்.

# எண்ணத்தின் சக்தியால் கையை அசைத்த உடல் செயலிழந்த நபர்

உலகில் முதல் முறையாக செயலிழந்த நபர் ஒருவர், தனது எண்ணத்தின் சக்தியால் தனது கையை அசைத்துள்ளார்.
அமெரிக்க ஒஹியோ மாநிலத்தில் டப்ளின் நகரைச் சேர்ந்தவர் அயன் புர்காா்ட் (வயது-23). 2010 ஆம் ஆண்டு வட கரோலினா கடற்கரைப் பகுதியில் ஏற்பட்ட கார் விபத்தில் முள்ளந்தண்டு சேத மடைந்ததால் அவர் உடல் செயலிழந்த நிலைக்கு உள்ளானது.
இந்த நிலையில் ஒஹியோ மாநில பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்களை உள்ளடக்கிய குழுவினர் புர்கார்ட்டின் மண்டையோட்டை அறுவைச்சிகிச்சை மூலம் திறந்து அதனுள் அவரது எண்ணங்களை வாசிப்பதற்கான 0.15 அங்குல அளவான சிப் உபகரணமொன்றைப் பொருத்தினர்.
மேற்படி சிப் உபகரணமானது, அவரது எண்ணங்கள் தொடர்பான தகவல்களை கணினியொன்றுக்கு அனுப்புகிறது. அந்தக் கணினியானது அந்தத் தகவல்களை முள்ளந்தண்டிலிருந்து வழங்கப்படுவதை ஒத்த கட்டளைகளாக மாற்றுகிறது.
நோயாளியின் கரத்துடன் இணைக்கப்பட்டுள்ள அந்தக் கணினி அவரது எண்ணத்துக்கு ஏற்ப அவர் கையை அசைப்பதற்குத் தூண்டுகிறது.
இந்தத் தொழில்நுட்பமானது, நோயாளி கையை அசைக்க வேண்டும் என்று நினைத்ததும் ஒரு செக்கனில் பத்திலொரு பகுதியிலும் குறைந்த நேரத்தில் கையை அசைக்க வழிவகை செய்கிறது.
இந்தத் தொழில்நுட்பமானது, தசைகள் தொடர்பான ஒழுங்கீனங்களுக்கு உள்ளாகி உடல் செயலிழந்த பல்லாயிரக்கணக்கான நோயாளர்களுக்கு உதவும் ஒன்றாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

நோயாளியின் கரத்துடன் இணைக்கப்பட்டுள்ள அந்தக் கணினி அவரது எண்ணத்துக்கு ஏற்ப அவர் கையை அசைப்பதற்குத் தூண்டுகிறது.





# உடல் சூட்டையும் தணிக்கும் மகத்துவம் மல்லிகைக்கு

மல்லிகை என்றாலே அதன் மணம்தான் அனைவருக்கும் ஞாபகத்துக்கு வரும். மல்லிகைப் பூவை பெண்கள் தலையில் சூடிக்கொள்வார்கள். அதற்குக்காரணம் மல்லிகைப்பூ, நறுமணத்தைக் கொடுப்பதுடன் உடல் சூட்டையும் தணித்து மன ஆறுதலையும் அளிக்கிறது. மல்லிகைப் பூவிலிருந்து எடுக்கப்படும் எண்ணெயைத் தேய்த்துக் குளித்து வந்தால் உடலுக்கு குளிர்ச்சி உண்டாகும். சரும எரிச்சல் நீங்கும். சருமப் பாதிப்புகளைப் போக்கும். கண்களுக்கு குளிர்ச்சியைக் கொடுக்கும். கண் பார்வை நரம்புகளில் வறட்சித் தன்மையைப் போக்கி பார்வையைத் தெளிவாக்கும். கண் எரிச்சல், பார்வைக் கோளாறுகள் நீங்கும். பித்தத்தை தணித்துச் சீராக்கும். தலை யில் நீர் கோர்த்தல், ஒற்றைத் தலைவலி போன்றவற்றுக்கு மல்லிகை எண்ணெய் சிறந்தது. ஆறாத புண்களை ஆற்றும் தன்மை மல்லிகை எண்ணெய்க்கு உண்டு. மல்லிகைப் பூவை நன்கு கையில் வைத்து கசக்கி நெற்றியில் தடவினால் தலைவலி நீங்கும். உடலில் வீக்கம் உள்ள பகுதிகளில் மல்லிகைப்பூவை அரைத்துப் பூசிவர வீக்கம் மறையும். தாய்ப்பால் கொடுக்கும் தாய்மார்கள் மார்பில் பால் கட்டிக்கொள்வதால் அவதிப்படுவார்கள். அவர்கள் மல்லிகைப்பூவை அரைத்து மார்பின்மீது பூசிவந்தால் பால் கட்டுதல் நீங்கி சீராகும்.
தேங்காய் எண்ணெய் - 100 மி.லீ.
உலர்ந்த மல்லிகைப்பூ - 5 கிராம், கறிவேப்பிலை -10 இலை எடுத்து காய்ச்சி வடிகட்டி வைத்துக்கொண்டு பயன்படுத்தலாம். மல்லிகை மணத்துக்கு மட்டுமல்ல, மருத்துவத்துக்கும் உகந்தது என்பதை புரிந்து அதனைப் பயன்படுத்தி ஆரோக்கியம் பெறுவோம்.

02 JUL 2014



நாம் குடியிருக்கும் வீட்டை அலங்கரிப்பது என்பது சிறந்த கலை. சிறிய வீடோ, பெரிய வீடோ இருக்கும் இடத்துக்கு ஏற்ப சின்னச் சின்னதாய் அலங்காரம் செய்தால் மனதுக்குப் பிடித்த மாதிரி வீடு அழகாகும்.

# வீட்டை அழகாக அலங்கரிக்க....



## மனம் கவர்ந்த இயற்கை காட்சிகள்

**சுவரில் படம் வரைவது என்றால் குழந்தைகளுக்கு அதிக விருப்பம்.**

சுவரில் படம் வரைவது என்றால் குழந்தைகளுக்கு மிக்க விருப்பம். அதைத் துடைத்தாலும் போகாது. மனதைக் கவரும் வர்ணங்களும், இயற்கைக் காட்சிகளும் நிறைந்த பேப்பர்களை சுவரில் ஒட்ட வேண்டும்.

வீட்டை அழகுபடுத்தும் இன்னொரு பொருள் செடிகள். என்னதான் செடியில் பூ இருந்து அழகு கொடுத்தாலும், பூக்காத செடியை வாங்கி வைத்தாலும் அது ஒரு அழகுதான்.



## செடிகள்

**பூக்காத செடியை வாங்கி வைத்தாலும் அது ஒரு அழகுதான்.**



## ஆன்மிக ஆலயம்

வீட்டை அழகுபடுத்துவதில் பிள்ளையாருக்கு அதிக பங்கு உள்ளது. பிள்ளையார் மட்டும் எந்த வடிவில் வேண்டுமென்றாலும் வருவார். அங்கங்கே பிள்ளையார் சிலை இருந்தால் மிக அழகாக இருக்கும்.

## கலைப் பொருள்களை வைத்தல்



**கைவினைப் பொருள்களை வீட்டில் ஒரு ஒழுங்கான விதத்தில் அடுக்கினால் பார்க்க அழகாக இருக்கும்.**

பாரம்பரியம் மிக்க கலைப் பொருள்கள் மற்றும் கைவினைப் பொருள்களை வீட்டில் அடுக்கும் விதத்தில் ஒரு ஒழுங்கில் அடுக்கினால் பார்க்க நேர்த்தியாகவும் அழகாகவும் இருக்கும்.


# நோய்களைத் தடுக்கும் காய்கறிகள்

காய்கறிகளில் உயிர்ச்சத்துகளும், ஊட்டச் சத்துகளும் அடங்கியுள்ளன. அவற்றில் உள்ள தாவர வேதிப்பொருள்கள், புற்றுநோய், இருதய நோய்கள் மற்றும் நீரிழிவு போன்றவற்றை தடுக்கும் திறன் கொண்டவை.

ஒரே தாவர வேதிப்பொருளைக் காட்டிலும், பல்வேறு பழங்கள் மற்றும் காய்கறிக் கலவையில் இருந்து கிடைக்கும் பலவகை வேதிப்பொருள்கள் உடலை நன்கு காத்துப் பராமரிக்கின்றன.

பொதுவாக நாம் காய்கறிகளை உணவில் சேர்த்து வருகிறோம். அதன் மூலம் உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்து நமக்குக் கிடைக்கிறது. ஆனால் அதே சமயம் நிலக்கீழ்க் காய்கறிகளை அதிக அளவில் உட்கொள்வதால் சாதாரண காய்கறிகளில் இருந்து கிடைக்கும் சத்துகளை விட அதிகமாக நம்மால் பெற முடிகிறது.

அவை ஊட்டசத்துக்கள் மட்டுமல்லாமல் நமது உடலில் ஏற்படும் பலவித பிரச்சினைகளையும் தீர்க்க வல்லவை.



## சருமம் காக்கும் கரட்



கரட் சாப்பிட்டால், கண்களுக்கு மிகவும் நல்லது. ஏனெனில் அதில் கண்களுக்கு ஆரோக்கியத்தைத் தரும் விற்றமின் 'ஏ' சத்துக்கள் அதிகம் உள்ளன.

இதனை தினமும் சாப்பிட்டால், சருமம் பொலிவாக இருக்கும்.

## நோய் எதிர்ப்புச் சக்தியுள்ள வெங்காயம்

வெங்காயத்தில் ஆன்டி-பாக்டீரியல் மற்றும் நோயெதிர்ப்பு அழற்சி பொருள் அதிகம் நிறைந்துள்ளதால், அவை நோய்த்தொற்றுகளை எதிர்த்துப் போராடும்.

## நீரிழிவு நோயைப் போக்கும் முள்ளங்கி



நீரிழிவு நோயாளிகளுக்கு முள்ளங்கி ஒரு சிறப்பான உணவுப் பொருள்.

ஏனென்றால் அதில் கிளைசீமிக் இன்டெக்ஸ் மிகவும் குறைவாக உள்ளது.

அவற்றில் பொட்டாசியம் அதிக அளவில் நிறைந்துள்ளதால், இரத்த அழுத்தத்தைச் சீராக வைத்திருக்கும்.

## இருமல் போக்கும் இஞ்சி

இஞ்சியில் நிறைய சமிபாட்டு நொதியங்கள் நிறைந்திருப்பால், அவை அசிடிட்டி பிரச்சினை உள்ளவர்களுக்கு மிகவும் சிறந்தது. குறிப்பாக இருமல், சளி மற்றும் தொண்டையில் தொற்று உள்ளவர்களுக்கு இஞ்சி நல்ல நிவாரணத்தைக் கொடுக்கும்.

## சளியைத் துரத்தும் பூண்டு

பூண்டில் அல்லிசின் என்னும் பொருள் நிறைந்துள்ளது.

இதனை உணவில் அதிகம் சேர்த்தால், இதயம் நன்கு ஆரோக்கியமாக இருக்கும்.

அதிலும் பச்சையாக பூண்டைச் சாப்பிட்டால், சளி மற்றும் இருமல் குணமாகிவிடும்.




## ஆற்றலை வழங்கும் உருளைக்கிழங்கு



உருளைக்கிழங்கில் ஸ்டார்ச் நிறைய உள்ளது.

மேலும் இது உடலுக்கு அதிகப்படியான ஆற்றலையும் கொடுக்கக்கூடியது.



## நரம்புப் பிரச்சினையைத் தீர்க்கும் சேனைக்கிழங்கு

சேனைக்கிழங்கில் கார்போஹைதரேட் அதிகம் நிறைந்துள்ளது.

அதில் விற்றமின் 'பி' சத்து அதிகம் இருப்பதால், அவை நரம்புகளை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவியாக இருக்கும்.




## இன்சுலின் சுரப்பை சீராக்கும் சர்க்கரைவள்ளிக் கிழங்கு

**சர்க்கரைவள்ளிக் கிழங்கில் விற்றமின் 'பி' சத்துக்கள் அதிகம் இருப்பதால், இன்சுலின் சுரப்பை சீராக வைத்திருக்கும்.**

சர்க்கரை வள்ளிக் கிழங்கில் உடலுக்கு வேண்டிய ஆற்றல் அதிகம் உள்ளது.

இதில் விற்றமின் 'பி' சத்துக்கள் அதிகம் இருப்பதால், இன்சுலின் சுரப்பை சீராக வைத்திருக்கும்.



# தொடர்கிறது போராட்டம்

வவுனியா, ஜூலை 2

வவுனியா நகரசபையில் நிரந்தர நியமனம் வழங்கப்படாத 7 தொழிலாளர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி நேற்றுமுன்தினம் ஆரம்பமாகிய போராட்டம் இரண்டாவது நாளாகவும் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் வவுனியா கிளைத்தலைவர் ஆர்.சித்திரன் தலைமையில் இரண்டாம்நாள் போராட்டம் நடைபெற்றது.

போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் வருகை தந்து அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் வவுனியா கிளைத் தலைவர் ஆர்.சித்திரன் ஊழியர்களுடன் கலந்துரையாடினார்.

இந்தப் போராட்டத்தை முடிவுறுத்திக்கொள்ளுங்கள்.7 தொழிலாளர்களுக்கும் அமைய அடிப்படையில் தொடர்ந்து நியமனம்வழங்க ஏற்பாடுசெய்கின்றேன் என்று வடமாகாண சுகாதார அமைச்சர் தெரிவித்தார்.

வடமாகாண முதலமைச்சரின் அழைப்பின் பெயரில் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டுள்ளேன். இந்தப் போராட்டம் முதலமைச்சரின் பணிப்பின் பெயரில் நிறுத்துமாறு கூறுகின்றேன்.

தற்போது தொடர்ந்து அவர்களுக்கு அமைய அடிப்படையில் நியமனம் வழங்கவும் பின்னர் உரிய ஆளணி வெற்றிடம் இடம்பெறும்போது நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்று அவர் உறுதியளித்தார்.

இது தொடர்பாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் சம்மதத்துடன் போராட்டம் நிறுத்துவது தொடர்பாக ஆலோசிக்கப்படும் என்று கிளைத் தலைவர் ஆர்.சித்திரன் தெரிவித்தார். (ச-402)

# தொழிற்பயிற்சி விரைவில் ஆரம்பம்

புதுக்குடியிருப்பு, ஜூலை 2

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளின் வாழ்வாதாரத்துக்கு உதவ முன்வந்துள்ள பல்வேறு தன்னார்வு தொழில் நிறுவனங்கள் குறுகிய காலத்தில் வருமானத்தை ஈட்டக்கூடிய வகையில் பல தரப்பட்ட தொழில் பயிற்சி நெறியை வழங்குவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்பும் ஆர்வமுடையவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் கைத்தொழில் அபிவிருத்தி உத்தியோகத்தரை நாளை வியாழக்கிழமைக்கு முன்பு நேரில் சந்தித்து தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

18 வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும் பயிற்சி நெறியில் கலந்துகொள்ள முடியும். இந்தப் பயிற்சியில் தச்சுத் தொழில், மேசன் தொழில் உட்பட விரும்பிய சகல தொழில்களுக்கும் பயிற்சி வழங்கப்படவுள்ளதால் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் கலந்துகொண்டு வாழ்வாதாரத்தை வளப்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-115)

# எமது அவலங்களை திரும்பிப் பாருங்கள்

## 20 வருடங்களாக முகாம்களில் வாழ்க்கை

வவுனியா,ஜூலை 2

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் வசித்து வரும் 63 குடும்பங்களின் அவலம் குறித்து அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் கவனம் செலுத்த வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1993 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் போரால் இடம்பெயர்ந்த நிலையில் தற்காலிகமாக முகாம் அமைத்து வாழ்ந்து வரும் 163 குடும்பங்களும் போக்குவரத்து வசதி, மின்சாரம், நிவாரண வசதிகள் மற்றும் வீட்டு வசதிகள் எதுவும் சீராக வழங்கப்படாததால் அந்தப் பகுதி மக்கள் தொடர்ச்சியாக பல்வேறு இடர்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அடிப்படைத் தேவைகளை வலியுறுத்தி விரைவில் போராட்டத்தில் ஈடுபடுவதற்குத் தீர்மானித்துள்ளோம்.

வவுனியாவில் பல்வேறு வீட்டுத்திட்டங்கள் ஏற்படுத்தப்பட்ட போதும் இதுவரை சிதம்பரபுரம் முகாம் மக்களுக்கு எந்த வீட்டுத் திட்டமும் வழங்கப்படவில்லை. 20 வருடங்களாக தற்காலிக முகாம்களில் பல்வேறு சிரமங்களுடன் வாழ்ந்து வருகின்றோம் என்று மக்கள் கூறினர்.

இந்தப் பகுதிக்கு தேர்தல் காலத்தில் வருகை தந்த அரசியல் வாதிகள் பல வாக்குறுதிகளை வழங்கிய போதிலும் தேர்தல் முடிந்த பின்பு எதுவித மான அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கமுடியவில்லை.

இதனால் அடிப்படைத் தேவைகளை முன் வைத்து போராட்டமொன்றை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம் என்று அந்தப் மக்கள் கூறினர். (ச-402)


குண்டும் குழியுமாகவுள்ள வீதி

# புனரமைப்பு இன்றி முள்ளியவளை வீதி

முள்ளியவளை,ஜூலை 2

முள்ளியவளை பிரதான வீதியிலிருந்து பாரதி சிறுவர் பராமரிப்பு இல்லத்துக்குச் செல்லும் சுமார் 750 மீற்றர் தூரமுடைய கிரவல் வீதி கடும் சேதமடைந்துள்ளது.

இதனால், இந்த வீதியால் பயணிக்கும் மக்கள் தினமும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வீதியைப் புனரமைத்துத்தர சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-102)

# 'சீல்' வைக்கப்படாத இறைச்சி விற்பனை

## நுகர்வோர் குற்றச்சாட்டு

வவுனியா, ஜூலை 2

வவுனியா, குருமன்காட்டுச் சந்தியில் உள்ள மாட்டிறைச்சிக் கடையில் சுகாதாரப் பகுதியினரால் சீல் வைக்கப்படாத இறைச்சி விற்பனை செய்யப்படுகிறது என்று நுகர்வோர் குற்றம் சுமத்தியுள்ளனர்.

வவுனியா நகர சபையின் கீழ் இயங்கும் குறித்த இறைச்சி விற்பனைநிலையத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் தரம் பரிசோதிக்கப்பட்டு சீலிடப்பட்ட மாட்டிறைச்சியே விற்பனை செய்யப்பட வேண்டும். எனினும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை விற்பனை செய்யப்பட்ட இறைச்சிக்கு சீல் வைக்கப்படவில்லை. இதனை அவதானித்த நுகர்வோர் அது குறித்து இறைச்சிக் கடை உரிமையாளரிடம் கேட்டபோது ஞாயிற்றுக்கிழமை சுகாதாரப் பரிசோதகர் மாட்டுத் தொழுவத்துக்கு வந்து சீல் இட்டனர். நேற்றுமுன்தினம் காலை அவசரத்தில் அதனைக் கவனியாது கொண்டு வந்து விட்டோம் என்றார்.

குறித்த மாட்டிறைச்சிக் கடையில் விற்பனை செய்யப்பட்ட இறைச்சியில் சுகாதாரப் பரிசோதகரின் சீல் இல்லாததை அவதானித்த பலர் இறைச்சி வாங்காது திரும்பிச் சென்றனர். இந்தச் சம்பவம் குறித்து சுகாதாரப் பரிசோதகருக்கும் நகர சபைக்கும் தாம் அறிவித்ததாக நுகர்வோர் தெரிவித்தனர். (ச-108)


வற்றி வரும் கிணறு

# கடுமையான வறட்சியால் வற்றி வரும் கிணறுகள்

கிளிநொச்சி,ஜூலை 2

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் கிணறுகளில் தண்ணீர் மட்டம் அடிமட்டத்தை எட்டியுள்ளது. அதனால் மக்கள் குடி தண்ணீர் பெறுவதற்கு நீண்ட தூரம் அலையும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த மாவட்டத்தில் உள்ள குளங்களும் முற்றாக வற்றியுள்ளன.

அதனால் கால்நடைகள் தண்ணீர் தேடி அலைந்து திரிகின்றன.

தண்ணீர் இன்றி கால்நடைகள் உயிரிழக்கும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது என்று பண்ணையாளர்கள் தெரிவித்தனர். (ச-18)

# விளையாட்டுத் தடாகம் மன்னாரில் விரைவில்

## ரூ.260 மில்லியன் ஒதுக்கீடு

மன்னார்,ஜூலை 2


ஜேசுதாசன்

சகல விளையாட்டுக்களையும் உள்ளடக்கி விளையாட்டுத் தடாகம் ஒன்று மன்னார், எமிழ் நகர் பகுதியில் 260 மில்லியன் ரூபா செலவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மன்னார் நகர சபையின் உப தலைவர் எஸ்.ஜேம்ஸ் ஜேசுதாசன் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து விளையாட்டுத்துறை அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கமனி சூரிய ஆராச்சியுடன் ஆராயப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

மன்னார் நகர சபை பிரிவுக்குட்பட்ட எமிழ் நகர் பகுதியில் சகல விளையாட்டுக்களையும் உள்ளடக்கிய விளையாட்டுத் தடாகம் அமைப்பதற்கு 260 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதாக விளையாட்டுத்துறை அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் உறுதியளித்துள்ளார்என்று அவர் தெரிவித்தார். (ச-56)

# மதுபானசாலையை அகற்ற வேண்டும்

## பாரதிநகர் மக்கள் கோரிக்கை

துணுக்காய்,ஜூலை 2

துணுக்காய், பாரதிநகரிலுள்ள விடுதியுடன் கூடிய மதுபான சாலையை அகற்றுமாறு மக்கள் பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

துணுக்காய்ப் பிரதேச செயலகத்தில் கடந்த 26 ஆம் திகதி நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த வேண்டுகோளை மக்கள் பிரதிநிதிகள் விடுத்தனர்.

மக்கள் செறிந்து வாழும் பகுதியில் இந்த மதுபான நிலையம் அமைந்திருப்பதன் காரணமாக நெருக்கடிகள் தோன்றியுள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஐயன்கன்குளம் மருத்துவமனை, பொலிஸ் நிலையம், பாடசாலை ஆகியவற்றுக்கு அருகில் அமைந்துள்ள கள் விற்பனை நிலையத்தையும் அகற்றுமாறு ஐயன்கன்குளம் மக்கள் பிரதிநிதிகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்தால் இதனை அகற்றுவதென முடிவு எடுக்கப்பட்டது. (க-18)

# தளபாடங்கள் இன்மையால் கற்றல் செயற்பாடு பாதிப்பு

## முல்லைத்தீவு கல்வி வலயத்தில்

முல்லைத்தீவு,ஜூலை 2

முல்லைத்தீவு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் மாணவர்களுக்கான தளபாடங்கள் இன்மையால் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிப்படைந்து வருகிறது என்று கூறப்படுகிறது.

வன்னிப் பகுதியில் இடம்பெற்ற போர் இடர்களால் முல்லைத்தீவு கல்வி வலயத்தைச் சேர்ந்த பல பாடசாலைகள் முற்றாகவும், பகுதியாகவும் சேதமடைந்துள்ளன. மாணவர்களின் கதிரைகள், மேசைகள் ஆகியனவும் முற்றாகச் சேதமடைந்துள்ளன.

மீளக்குடியமர்வின் பின்னர் பல பாடசாலைகளில் தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு அங்கு மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

எனினும் மாணவர் தொகைகளுக்கேற்ப போதியளவு தளபாடம் கல்வித் திணைக்களத்தால் வழங்கப்படவில்லை.

இதனால் மாணவர்கள் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர். உயர்தர வகுப்புக்களை கொண்ட பாடசாலைகளுக்கு மாணவர்களுக்கான கதிரைகள், மேசைகள் போதியளவு வழங்கப்படவில்லை.

இதனால் பாடசாலைகளில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான புதிய கல்வி ஆண்டுக்கான கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதுள்ளது.

இதனால் மாணவர்களின் அனுமதி தாமதப்படுத்தப்படுகிறது என்று கூறப்படுகிறது.

புதுக்குடியிருப்பு பகுதியிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான போதிய தளபாடங்கள் இல்லாததால் புதிய மாணவர்களை இணைப்பதில் அந்தக் கல்லூரியின் அதிபர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகக் கூறப்படுகின்றது.

எனவே போரால் பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கிய பிள்ளைகள் கற்றல் செயற்பாடுகளில் ஆர்வத்துடன் ஈடுபட அவர்களுக்குத் தேவையான தளபாட மற்றும் கற்றல் உபகரண வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-108)

## மருத்துவமனை சிற்றுண்டிச்சாலை இரு தினங்களாக இயங்கவில்லை

தென்மராட்சி, ஜூலை 2
சாவகச்சேரி மருத்துவமனை வளாகத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலை முன்னறிவித்தலின்றி இரு தினங்களாக மூடப்பட்டுக் காணப்படுவதால் விடுதி நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.
மருத்துவமனை விடுதிகளில் தங்கியிருப்போர், வெளிநோயாளர் பிரிவுக்கு வருவோர், மருத்துவமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் தமது உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய குறித்த சிற்றுண்டிச்சாலையைப் பயன்படுத்தி வந்ததாகவும் முன்னறிவித்தல் எதுவுமின்றி திடீரென இரு தினங்களாக அது மூடப்பட்டிருப்பதால் நோயாளர்கள் வெளிக் கடைகளுக்குச் செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (வ)




யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தின் அழகியல் கண்காட்சி நேற்று கல்லூரி மண்டபத்தில் அதிபர் சு.திருநாவுக்கரசு தலைமையில் இடம்பெற்றது. இந்தக் கண்காட்சியை ஆர்வத்துடன் பார்வையிடும் மாணவர்கள். (வ-20)

# யாழ். மாவட்டத்துக்கான நிதியில் ரூ.153 மில். இன்னமும் இருப்பில்

### 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டதில்

யாழ்ப்பாணம், ஜூலை 2
'நெல்சிப்' திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட ஆயிரத்து 652 மில்லியன் ரூபா நிதியில் 153 மில்லியன் ரூபா நிதி இன்னமும் செலவு செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.
போரால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்குப் பிரதேசங்களின் உள்ளூர் அபிவிருத்திக்காக உலக வங்கியின் நிதியுதவியில் நெல்சிப் திட்டம் 2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதில் யாழ். மாவட்டத்திலுள்ள 16 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஆயிரத்து 652 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.
சாவகச்சேரி நகரசபைக்கு 94 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதில் 85 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ள நிலையில் எஞ்சிய 9 மில்லியன் ரூபாவுக்கு, கல்வயல் 4-6 எல்லை வீதி புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.
பருத்தித்துறை நகர சபைக்கு ஒதுக்கப்பட்ட 98 மில்லியன் ரூபாவும் முற்று முழுதாகச் செலவிடப்பட்டுள்ளது. வல்வெட்டித் துறை நகர சபைக்கு ஒதுக்கப்பட்ட 98 மில்லியன் ரூபாவில் 89 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ள நிலையில் எஞ்சிய 9 மில்லியனுக்கும் வல்வெட்டித்துறை பொதுச் சந்தையின் இரண்டாம் கட்ட புனரமைப்புப் பணிகள் இடம்பெறவுள்ளன.
சாவகச்சேரி பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட 121 மில்லியன் ரூபாவில் 112 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளதுடன், எஞ்சிய 9 மில்லியன் ரூபாவுக்கு கைதடி நவபுரம் - மட்டுவில் சிவன் கோயில் வீதியின் இரண்டாம் கட்டப் புனரமைப்புப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நெடுந்தீவுப் பிரதேச சபைக்கு 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் 50 மில்லியன் ரூபா மாத் திரமே செலவிடப்பட்டுள்ளது.
காரைநகர் பிரதேச சபைக்கு 94 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் 84 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. எஞ்சிய 10 மில்லியன் ரூபாவில் சுந்தரமூர்த்தி வீதியின் இரண்டாம் கட்டம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது. ஊர்காவற்றுறை பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட 95 மில்லியன் ரூபாவும் செலவிடப்பட்டுள்ளது. நல்லூர் பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட 96 மில்லியன் ரூபாவில் 86 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ள நிலையில் எஞ்சிய 10 மில்லியன் ரூபாவுக்கு சிறுவர் விளையாட்டரங்க மற்றும் கலாசார மண்டப இரண்டாம் கட்டப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
பருத்தித்துறை பிரதேச சபைக்கு 128 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு அந்த நிதி முழுமையா கப் பயன்படுத்தி முடிக்கப்பட்டுள்ளது. கரவெட்டி பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட 101 மில்லியன் ரூபா நிதி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட 111 மில்லியன் ரூபாவில் 12 மில்லியன் ரூபா செலவிடப் படவில்லை. வலி. வடக்கு பிரதே சபைக்கு ஒதுக்கப்பட்ட 104 மில்லியன் ரூபா நிதி முழுமையாகச் செலவிடப்பட் டுள்ளது.
வலி.தெற்குப் பிரதேச் சபைக்கு ஒதுக்கப்பட்ட 101 மில்லியன் ரூபாவில் 7 மில்லியன் ரூபா நிதி இன்னமும் செலவிடப்படவில்லை. அந்த நிதியில் அன்னமார் வீதியின் இரண்டாம் கட்டம் புனர்மைப்புச் செய்யப்படவுள்ளது. மானிப்பாய் பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட 108 மில்லியன் ரூபா நிதியில் 103 மில்லியன் ரூபா செலவிடப் பட்டுள்ளது. எஞ்சிய 5 மில்லியன் ரூபா நிதியில் நல்லுண்ணி வீதியின் இரண்டாம் கட்டப் புனரமைப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.
வலி.மேற்குப் பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட 100 மில்லியன் ரூபாவில் 32 மில்லியன் ரூபா செலவிடப் படவில்லை. வேலணைப் பிரதேச சபைக்கு ஒதுக்கப்பட்ட 103 மில்லியன் ரூபா நிதியும் முழுமையாகப் பயன்படுத்தி முடிக்கப்பட்டுள்ளது. (வ-5)

## குடிதண்ணீர்த் திட்டம் ஆரம்பம்

தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கு நாவலர் நற்பணி மன்றத்தினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டம் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. மருத்துவர் மு.உமாசங்கர் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் நற்பணி மன்றத்தின் தலைவரும் வரு மானவரி ஆலோசகருமான ந.கருணை ஆனந்தன் திட்டத்தை ஆரம்பித்து வைப்பார். (க-36-86)

## கண்காட்சி

கரணவாய், ஜூலை 2
வல்வை மகளிர் மகா வித்தியாலய கண்காட்சி இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணி முதல் இடம்பெறவுள்ளது.
வித்தியாலய அதிபர் செல்வி இ.சுப்பிரமணியக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்தக் கண்காட்சி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் க.ம. ஈஸ்வரதேவன் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார். (ஒ-108)

## கேரளா கஞ்சா விற்பனை செய்ய முயன்றவர் கைது



யாழ்ப்பாணம், ஜூலை 2
ஹெரோயின் மற்றும் கேரளா கஞ்சாவை விற்பனை செய்ய முயன்ற 22 வயதுடைய இளைஞரைக் கைது செய்துள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.
கொக்குவில், குளப்பிட்டி பகுதியைச் சேர்ந்த இளைஞர் அதே இடத்தில் 4 கிராம் ஹெரோயின் மற்றும் பொதி செய்யப்பட்ட நிலையில் சிறு தொகை கேரளா கஞ்சாவையும் விற்பனை செய்ய முயன்றுள்ளார்.
அதன்போது யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் உள்ள புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் கைது செய்யப்பட்டுள்ளார்.
கைதுசெய்யப்பட்ட குறித்த இளைஞர் யாழ்.பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். பொலிஸ் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கவுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். (வ-106)

# அறநெறிபேணி தொழில் நுட்ப ரீதியாக முன்னேற்றத்தைக் காண முற்படுவோம்

### வடக்கு முதலமைச்சர் மாணவருக்கு அறிவுரை

யாழ்ப்பாணம், ஜூலை 2
போர்க் காலத்தில் தொழில் நுட்பத் திறனோடு எமது இளைஞர், யுவதிகளால் கட்டி எழுப்பப்பட்டிருந்த பலத்தை இன்று நாம் அழித்து விட்டுள்ளோம். அத்தனை தொழிற்திறனும், தொழில் வல்லமையும், பொறுமையும் சேர்ந்து உருவாக்கிய இந்த இயல்பியல் அதிசயங்கள் கண் காணாமற் போயுள்ளன.
மனிதனின் ஆற்றலானது ஆக்கபூர்வமாகவும், அறிவு பூர்வமாகவும் செயற்படுவதாலேயே இவையெல்லாம் நடக்கின்றன. ஆகவே எமது அறநெறியில் ஸ்திரமாக இருந்து கொண்டு ஆன்மிக அறிவுரைகளுக்கமைந்து தொழிற்றுறைகளில், தொழில்நுட்பங்களில் மேம்பாட்டைக் காண வேண்டும் என்று வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் மஹிந்தோதய தொழில் நுட்ப ஆய்வுகூடத் துக்கான அடிக்கல் நடும் விழா நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறிய தாவது:-
"வருங்காலம் எத்தகையதாக அமையும் என்பதைக் கூற முடியாது. அதனால் நாம் எமது மத ரீதியான, அறரீதியான, மனிதாபிமான ரீதியான பின்னணியைப் பேணிக்கொண்டு தொழில்நுட்ப ரீதியாக முன்னேறுவதே உசிதம் என்று நினைக்கின்றேன்.
இந்தக் கல்லூரி 1834 இல் ஆங்கிலேய மெதடிஸ்ட் சமயப் பரப்பாளர்களால் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வருடம் 180 வருடங்கள் பூர்த்தியாகின்றன. எனினும் வேம்படி உயர்தரப் பாடசாலை என்ற பெயர் 1897இலேயே வந்தது என்று அறிகிறேன். தொழில்நுட்பக் கல்வியானது சகல தொழில்கள் பற்றிய அல்லது குறிப்பிட்ட தொழில்கள் பற்றிய வழிமுறைகளை, அவை சார்ந்த கல்வியைப் பெறுவதாகும்.
எமக்கு வெளியில் இருக்கும் இந்த உலகத்தை மாற்றி அமைக்க கிடைக்கும் பொருள்களை வைத்து, கருவிகளை வைத்து ஒரு மாற்றத்தை ஏற்படுத்த இவ்வாறான கல்வி எம்க்கு உதவியளிக்கின்றது.
மேற்கத்தைய நாடுகள் இதுவரையில் இதையே மேற்கொண்டு வந்துள்ளன. பெரிய தெருக்கள், கட்டடங்கள், ரயில்கள், ஆகாய விமானங்கள், நீர்மூழ்கிக்கப்பல்கள் என்று பலவாறாகத் தொழில் நுட்ப அதிசயங்களைக் கண்டு பிடித்து அவற்றைப் பயன் படுத்தியும் வந்துள்ளனர். அவர்களின் வாழ்க்கையின் குறிக்கோள்கள் கூட பொருளாதார விருத்தியிலும், தொழில் நுட்ப விருத்தியிலுமே அடங்கியிருந்தன. அறநெறிகள், சமய நோக்குகள், ஆத்மிக மேம்பாடு போன்றவை அவர்கள் உலகாயத்த வாழ்க்கைக்கு அப்பாற்பட்டவை. ஆனால் மிக விரைவில் பொருளாதார ரீதியாகப் பல பின்னடைவுகளை உலகத்தின் உயர்நிலை நாடுகள், வல்லரசுகள் ஆகியன எதிர்நோக்கவுள்ளன என்று எதிர்வுகள் கூறப்படுகிறது" என்றார். (வ-4)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உண்மையான அபிவிருத்தி எப்போதுதான் வரும்?

இலங்கையில் வாழும் ஒரு தனி நபர் தனது வாழ்வுக்கான அடிப்படைத் தேவைகளைப் பெற்றுக்கொள்ள மிக அதிகமாகச் செலவழிக்க வேண்டியிருக்கும் இடமாக யாழ்ப்பாணம் இருக்கிறது. இதற்கு முன்னால் கொழும்பு மாவட்டம் மட்டுமே உள்ளது என்கிறது புள்ளிவிவரத் திணைக்களம்.

கடந்த மே மாதத்தின் கணிப்பீடுகளின்படி கொழும்பில் ஒரு தனிநபர் தனது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஆகக் குறைந்தது 4118 ரூபா தேவைப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் 4113 ரூபா தேவைப்படுகிறது.

யாழ்ப்பாணம் மட்டுமல்ல வடக்கு – கிழக்கில் உள்ள பல மாவட்டங்களிலும் இதுவே நிலைமை. வவுனியாவில் 3968 ரூபாவையும், மட்டக்களப்பில் 4095 ரூபாவையும், அம்பாறையில் 3922 ரூபாவையும், திருகோணமலையில் 4045 ரூபாவையும் ஒருவர் செலவிடவேண்டியுள்ளது. 3845 ரூபா என்கிற நாட்டின் சாராசரியைவிட வடக்கு கிழக்கு மாவட்டங்கள் அனைத்திலுமே செலவு வீதம் மிக அதிகமாக இருக்கின்றது.

மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி பற்றிய விவரங்கள் அந்தப் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்படாதபோதும் ஏனைய மாவட்டங்களின் நிலைமை சராசரிக்கு நெருக்கமாகவே இருக்கின்றது.

இவ்வாறு வாழ்க்கைச் செலவு வடக்கு – கிழக்கு மாகாணங்களில் மிக உயர்வாக இருக்கின்றபோது, புறநடையாக இந்த மாவட்டங்களிலேயே தொழில் வாய்ப்பின்மையும் மிக அதிகமாக இருக்கின்றது. கொழும்பு மாவட்டத்துடன் ஒப்பிடும்போது அங்குள்ளவர்கள் சம்பாதிப்பதற்குக் காணப்படும் வாய்ப்புகளில் இருபதில் ஒரு மடங்குகூட வடக்கு – கிழக்கில் உள்ள மாவட்டங்களில் உள்ளவர்களுக்குக் கிடையாது.

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு – கிழக்கு மாவட்டங்களில் கடந்த ஐந்து வருடங்களில் தான் பெரும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டதாக அரசு பறைசாற்றி வரும் நிலையில், மிகப் பிந்தி வந்திருக்கும் இந்தப் புள்ளி விவரங்கள் உண்மையைத் தெளிவுபடுத்துகின்றன. அரசு மேற்கொண்ட அபிவிருத்திப் பணிகளால் வடக்கு – கிழக்கு மாவட்டங்களில் பெரும் பொருளாதார மாற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை என்பதை அந்தப் புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இதன் விளைவாக வறுமையில் உச்ச நிலையில் உள்ள மாவட்டங்களாக வடக்கு – கிழக்கு மாவட்டங்களே உள்ளன. இலங்கையிலேயே ஆகக் கூடுதலான வறுமை வீதம் முல்லைத்தீவு மாவட்டத்திலேயே (28.8%) காணப்படுகின்றது. மன்னாரில் 20.1%, மட்டக்களப்பில் 19.4%, கிளி நொச்சியில் 12.7%, திருகோணமலையில் 9%, யாழ்ப்பாணத்தில் 8% என்று சராசரியான 6.7 வீதத்திலும் பார்க்க மிக அதிகமாகவே வறுமை இந்த மாவட்டங்களில் காணப்படுகிறது. அம்பாறை (5.4%), வவுனியா (3.4%) ஆகிய மாவட்டங்கள் மட்டுமே சர்ராசரியிலும் குறைவான அளவைக் கொண்டுள்ளன.

போருக்குப் பின்னரான கடந்த 5 வருடங்களில் வடக்கு – கிழக்கில் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தத் தவறி இருப்பதன் காரணமாகவே வறுமை வீதம் இங்கு அதிகமாக இருக்கிறது. இப்போதுகூட அதில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை. புதிய தொழிற்சாலைகளோ புதிய தொழிற்பேட்டைகளோ உருவாவதற்கான காத்திரமான அறிகுறிகளைக் காணவில்லை.

5 வருடங்கள் என்பது ஓர் அரசு தனது பொருளாதார அபிவிருத்தியை நிரூபிப்பதற்குப் போதுமான காலம் ஆகும். வடக்கு கிழக்கு மாகாணங்கள் போரால் பாதிக்கப்பட்டவை என்ற அடிப்படையில் இந்த 5 வருடங்கள் அபிவிருத்தியை நிரூபிப்பதற்குப் போதுமானவையாக இல்லை என்று கூறினாலும்கூட இந்தக் காலப்பகுதிக்குள் அதற்கான அறிகுறிகளாவது தென்பட்டிருக்க வேண்டும். ஆனால் இன்னமும் அதையும் காணவில்லை.

இவற்றைச் செய்வதற்கான அதிகாரங்கள் தன்னிடம் இல்லை என்று வடக்கு மாகாண சபையும் கைவிரித்து வரும் நிலையில், மாற்றான் பிள்ளையாக வடக்கு – கிழக்கு மாவட்டங்களின் நிலைமை இப்படியேதான் தொடரப்போகின்றதா?

# விசாரணைக் குழுவில் பணியாற்ற முன்வந்துள்ள கௌரவ நிபுணர்கள்

## நவிப்பிள்ளை பெரும் மகிழ்ச்சி



சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
கோகுலன்

இலங்கை போர்க் குற்றங்கள் தொடர்பான சர்வதேச விசாரணைகளை நடத்துவதற்கான குழு உறுப்பினர்களின் நியமனம் பூர்த்தியாகிவிட்டதாக ஐ.நா. அதிகாரிகள் கடந்த புதன்கிழமை அறிவித்தார்கள்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகம் விடுத்த ஓர் அறிக்கையில் இந்த விசாரணையில் பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும், அது உண்மையைக் கண்டுபிடிக்க உதவும். அத்துடன் இலங்கையில் பொறுப்புக் கூறலையும், நல்லிணக்கத்தையும் முன்னேற்ற உதவும் என்றும் இலங்கை அரசுக்கும் இலங்கை மக்களுக்கும் அறிவித்திருந்தது. அது மட்டுமன்றி அவ்வாறான ஒத்துழைப்பு வழங்கப்படாது போனாலும் தடையேதுமின்றி விசாரணை நடைபெற்றே தீரும் என்றும் எச்சரிக்கை செய்திருந்தது. அந்த அறிக்கைச் சுருக்கம் வருமாறு:-

கடந்த மார்ச் மாதம் மனித உரிமை சபையினால் வழங்கப்பட்ட கட்டளைக்கு அமைவாக இலங்கையில் மனித உரிமைகள் மீறப்பட்டதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரிக்க நியமிக்கப்பட்டுள்ள குழுவினருக்கு ஆலோசனைகளும் ஆதரவும் அளிக்க கௌரவமிக்க மூன்று நிபுணர்கள் சம்மதம் தெரிவித்திருக்கிறார்கள் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளை கடந்த புதன்கிழமை அறிவித்தார்.

இலங்கையில் நடந்தேறிய போரின் இறுதிக் கட்டத்தில் இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டதான மனித உரிமை மற்றும் அதனுடன் தொடர்புடைய பாரதூரமான சகல குற்றங்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் பற்றி விரிவான விசாரணைகளை இந்தக் குழு நடத்தும் என்று குறிப்பிட்டிருந்தார். மிகக் கௌரவமான மூன்று நிபுணர்கள் இந்த முக்கியமானதும், சவாலுக்குரியதுமான விசாரணையில் உதவி புரிய ஒப்புதல் தந்துள்ளமை குறித்துத் தாம் பெருமைப்படுவதாகவும் நவிப்பிள்ளை தெரிவித்திருந்தார்.

விசாரணைகள் இடம்பெறும் காலம் முழுவதுமாக இந்த நிபுணர்கள் ஆலோசனைகள், வழிகாட்டல்கள் மற்றும் சுயாதீனமான சரிபார்த்தல் என்பவற்றை வழங்கி ஆதரவான ஆலோசனைப் பணிகளை மேற்கொள்வார்கள். அவர்கள் பணி வழங்கும் குழுவில் 12 பேர் இருப்பார்கள். இவர்களில் புலனாய்வாளர்கள், நீதித்துறை நிபுணர்கள், பால்நிலை சிறப்பியலாளர்கள், சட்ட பகுப்பாய்வாளர்கள் மற்றும் பல்வேறு விசேட தகைமையுள்ள அலுவலர்கள் இருப்பார்கள். இந்தக் குழு 10 மாதங்கள் (2015 ஏப்ரல் மாத நடுப்பகுதி வரை) செயற் படுவதாய் இருக்கும்.

மனித உரிமைகள் சபை தீர்மானத்தின் பிரகாரம் சபையின் 27 ஆவது மாநாட்டில் (2014 செப்ரெம்பர்) ஆணையாளர் பணியகம் வாய் மூலமான அறிக்கையொன்றையும் 28 ஆவது மாநாட்டில், 2015 மார்ச்சில் எழுத்து மூலமான அறிக்கையும் சமர்ப்பிக்க வேண்டும்.

மனித உரிமைகள் சபையில் விசாரணைக் குழுவினர் இலங்கைக்கு வருவதை அனுமதிப்பதோ அதனுடன் ஒத்துழைப்பதோ இல்லையென்று இலங்கை அரசு தீர்க்கமான முடிவெடுத்துள்ளது.

லண்டனில் நிலை கொண்டுள்ள உலகத் தமிழர் பேரவையைச் சேர்ந்த சுரேன் சுரேந்திரன் கடந்த வாரம் பத்திரிகைகளுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்; விசாரணைக் குழுவினர் தமது செயற்பாடுகள் தொடர்பான நடைமுறைகளை அறிவிக்கும்வரை காத்திருக்கிறோம். அறிவித்ததன் பின்னர் குழுவின் முன் தோன்றி சாட்சியமளிப்போம் என்று கூறியுள்ளார்.

2009ஆம் ஆண்டு முடிவடைந்த போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கையில் அந்த வகையில் பல்வேறு முறையிலும் தொடர்பு கொண்டிருந்த நபர் அனைவரிடமிருந்தும் சாட்சியங்களைக் குழுவினர் எதிர்பார்ப்பர் என்று ஜெனிவாவிலுள்ள ராஜதந்திரிகள் கூறுகின்றனர். அந்தக் காலத்தில் நோர்வேயின் உள்நாட்டு அபிவிருத்தி அமைச்சராக இருந்தவரும் அமைதிக்கான அனுசரணையாளராக இருந்தவருமான எரிக் சொல்ஹெய்மும் அப்படியான ஒருவராவார். குழுவினர் கேட்கும்போது தாம் அவர்கள் முன்தோன்றி சாட்சியமளிப்பார் என்று தெரிவித்துள்ள சொல்ஹெய்ம் விசாரணை நடத்தவிருக்கும் குழுவினர் உயர் அந்தஸ்தும் அனுபவமும் நேர்மையும் உள்ளவர்கள் என்று தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தனிடம் தங்கள் கட்சி குழுவின் முன் சாட்சியமளிக்குமா என்று கேட்டபோது ஒன்றும் கூற மறுத்துவிட்டார். நாடாளுமன்றத்தில் சம்பவங்கள் மற்றும் அவைகள் எப்போது நிகழ்ந்தன என்பது போன்ற விடயங்களை நாங்கள் ஏற்கெனவே பதிவு செய்துள்ளோம் என்றார்.

இந்த நிலைமையை அரசும் தனக்குத் தானே தேடிக் கொண்டது. 2009 மே மாதம் ஐ.நா. செயலாளர் நாயகம் இங்கு வந்தபோது அரசு பொறுப்புக் கூறும் செயற்பாட்டை மேற்கொள்வதாக ஒப்புக் கொண்டது. ஆனால் அதனைச் செயற்படுத்தவில்லை. நம்பகமான உள்ளக விசாரணைப் பொறிமுறையொன்றையும் அது ஏற்படுத்தவில்லை. உண்மை நிலைநாட்டப்படாதவரை உண்மையான நல்லிணக்கம் ஏற்படுவது சாத்தியம் இல்லை என்று விவரித்தார் சம்பந்தன்.

### தென்னாபிரிக்க குழு வருகிறது

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் மேலும் ஒன்றான தென்னாபிரிக்க செயற்பாட்டின்படி அந்த நாட்டின் பதில் அதிபர் சிரில் ரமபோஷ ஜூலை 7 ஆம் திகதியிலி ருந்து 9 ஆம் திகதிவரை இலங்கையில் இருப்பார் என்று தெரியவருகின்றது. இது இலங்கையின் கோரிக்கையின் பேரிலேயே முன்னெடுக்கப்படுவதாக அந்த நாட்டின் அதிபர் ஜேக்கொப் சூமா அங்குள்ள நாடாளுமன்றில் கடந்த பெப்ரவரியில் அறிவித்திருந்தார். தென்னாபிரிக்க அதிபர் சுகவீன முற்றிருப்பதால் ரமபோஷ பதில் அதிபராக பணியாற்றி வருகிறார். இலங்கையின் நல்லிணக்க செயற்பாட்டில் ஒரு நாட்டின் பதில் தலைவர் கலந்துகொள்வது இதுவே முதல் தடவையாகும்.

தென்னாபிரிக்க குழுவில் அங்கம் வகிக்கும் தென்னாபிரிக்க அதிபரின் தேசிய சபை ஆலோசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏப்ராஹிம் இஸ்மாயில் ஏப்ராஹிம், நிற ஒதுக்கலுக்கு எதிராகப் போராடிய முக்கிய தலைவர்களில் ஒருவராவார். கண்காணிப்புச் செயற்பாடுகளின் பிரதி அமைச்சர் ஒபீட் பொபீலா மற் றும் நிற ஒதுக்கல் ஆட்சியின்போது பாது காப்பு அமைச் சராகவிருந்த றொயெல்ம் மெயர் மற்றும் மறுசீரமைப்பு ஆலோசகரும் பணிப்பாளருமான ஐவர் ஜெங்கின்ஸ் முதலியவர்களும் குழுவில் அங்கம் வகிக்கிறார்கள்.

இந்தக் குழு ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இலங்கையின் அமைதி மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக முயற்சியில் ஈடுபடவிருக்கின்றது. இலங்கையில் நல்லிணக்கச் செயற்பாட்டில் வெளிநாட்டவர் ஈடுபடுவதற்கு எதிராக ஏற்கெனவே ஜாதிக ஹெல உறுமய மற்றும் தேசிய சுதந்திர முன்னணி ஆகியவை பகிரங்க மாகவே கருத்துக் களை வெளியிட்டுள்ளன.

ரமபோஷவின் குழுவினர், அரசுத் தலைவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் ஆகிய தரப்புக்களைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இங்கு தமது பணிகளை முடித்ததன் பின்னர் தென்னாபிரிக்க குழுவினர் புதுடில்லிக்கு பயணமாவார்கள் என்று தெரிகின்றது. தென்னாபிரிக்க நல்லிணக்க முயற்சியானது மெதுவாக முன்னேறும் செயற்பாட்டைக் கொண்டதாக இருக்கும் என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முதலில் பேச்சு வார்த்தைகள் தொடர்பாக கலந்துரையாடல்கள். அதன்பின்னர் ஒரு கட்டமைப்பு நிகழ்ச்சி நிரலுக்கான திட்டம் தீட்டப்படும். அதில் விவாதிக்கப்பட வேண்டிய பிரச்சினைகள் மற்றும் அதைத் தொடர்ந்து வரக்கூடிய அரசமைப்புத் திருத்தங்கள் தொடர்பான அம்சங்கள் இடம்பெறும் என்கிறார்கள் அவர்கள்.

அரசின் பிரகடனப்படுத்தப்பட்ட நிலைப்பாடு என்னவென்றால், தேசியப் பிரச்சினைக்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாகவே தீர்வு பெறப்பட வேண்டும் என்பதாகும். அப்படியிருக்க தென்னாபிரிக்க நல்லிணக்க முயற்சி மற்றும் அரசின் பங்காளிக் கட்சிகளின் எதிர்ப்பு என்பவற்றை எவ்வாறு அரசு எதிர்கொள்ளும் என்பது விளங்காமல் இருக்கின்றது.

பிரிட்டோரியாவின் உதவி நாடப்பட்ட சமயத்தில் உண்மை மற்றும் மீள் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக் குழு அமைப்பது மற்றும் அதன் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு மன்னிப்பு வழங்குவது தொடர்பாக மட்டுமே யோசிக்கப்பட்டது. ஆனால் பதவியில் இருந்து விலகிச் செல்லும் மனித உரிமைகள் ஆணையாளர் நவிப்பிள்ளை கடந்த மார்ச்சில் அளித்த அறிக்கையில் தவறு செய்தவர்கள் எவருக்கும் மன்னிப்பு அளிக்கலாகாதென்று பரிந்துரை செய்திருந்தார்.

### வெளிநாட்டு பயணங்களுக்கு கட்டுப்பாடு

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வது தொடர்பாக சில கட்டுப்பாடுகள் கொண்ட நடத்தை ஒழுங்குகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விவரித்துள்ளார்.

வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கு இருந்து வந்துள்ள அதிகாரங்கள் இப்பொழுது பிரதமர், அமைச்சர்கள் மற்றும் ஆளுநர்களுக்கு வழங்கப்படுகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், அரச அதிகாரங்கள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் அதிகாரிகள் வெளிநாடு செல்கையில் அனுசரிக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பாக ஜனாதிபதியின் செயலகம் சகல செயலாளர்களுக்கும் சுற்றறிக்கைகளை அனுப்பியுள்ளது.

தவிர்க்க முடியாத அரச பணிகளைத் தவிர்ந்த ஏனைய வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்ள வேண்டாம் என்று அமைச்சர்களுக்கு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

## ஆளுமையை விருத்தி செய்யத் தூண்டிய
# ஆக்கி மகிழ்வோம் கண்காட்சி

தி. அபராஜிதன்,
ஆசிரியர்

இலங்கை அரசின் இலவசக் கல்விக் கலைத்திட்டத்தின் கற்றல் மாதிரிகளில் முறைசார்ந்த கற்கைகள், முறைசாராக் கற்கைகள், களப்பயணங்கள், நேரடித் தரிசிப்புக்கள், கற்றல் கண்காட்சிகள் எனப் பல்வேறு பரிமாணங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் மாணவரது அறிவுத்திறன், மனப்பாங்கு விருத்தியில் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்தும் முக்கியமான கற்றல் மாதிரிகளில் கற்றல் கண்காட்சிகளும் கணிசமான இடத்தைப் பெறுகின்றன. மாணவன் ஒருவன் விடயம் ஒன்றினை வாசித்தறிவதனாலோ அல்லது கேட்டறிவதனாலோ அல்லது உய்த்தறிவதனாலோ அடைகின்ற அடைவுமட்ட விருத்தி வீதத்தைவிட செயற்பாட்டில் ஈடுபட்டு அதற்கான துலங்கலைச் செய்வதனூடாக பெறப்படுகின்ற அனுபவ அடைவு காலத்தால் அழியாது என கல்வியியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். அதற்காகவே பாடசாலைகள் வருடந்தோறும் தங்களது நாள்காட்டி செயலொழுங்கில் இணைப்பாடவிதான செயற்பாட்டு அங்கமாக கல்விக் கண்காட்சிக்கு முக்கியத்துவம் வழங்குகின்றன. அத்துடன் பாடசாலைச் சமூகத்தின் பங்குபற்றுதலோடு ஆக்கி மகிழ்ந்து அனுபவிக்கின்றன. மற்றவர்களும் அனுபவிப்பதற்குக் களம் அமைத் துக் கொடுக்கின்றன.



அந்த வகையில் தென்மராட்சி கல்வி வலயத்தில் 1சி தரப் பாடசாலையாக மிளிர்ந்துவரும் நாவற்குழி மகாவித்தியாலயம் கடந்தவாரம் இரண்டு நாள்களாக மிகவும் சிறப்பாகக் காட்சிப்படுத்திய 'ஆக்கிமகிழ்வோம்' என்ற கல்விக் கண்காட்சி பற்றிய நினைவுகளைப் பகிர்ந்து கொள்வதே இந்தக் கட்டுரையின் நோக்காகும். நாவற்குழிப் பிரதேசத்தில் சுமார் 700 மாணவர்களுடன் நிமிர்ந்து வளரும் மேற்படி பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களது கடின உழைப்பின் அறுவடையாக இந்தக் கண்காட்சி அமைந்திருந்தது. கலைத்திட்டத்தில் அனைத்துப் பாடங்களும் உள்ளடக்கிய வகையில், ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வி, உயர்நிலைக் கல்வி பாடங்களை உள்ளடக்கிய வகையில் சுமார் 19 உப தலைப்புக்களில் தொகுதி ரீதியாக வகுக்கப்பட்டு அந்தத் தொகுதிகளுக்குப் பொருத்தமான தலைப்பிடல் வழங்கப்பட்டு நேர்த்தியாக் கப்பட்டிருந்தமை சிறப்பம்சமாகும். மலரும் மொட்டுக்களின் மகிழ்புலம் என்ற காட்சிப் படிமம், காட்டுவிலங்குகளின் வனாந்தர வசந்த வாழ்வு பற்றி ஆடல் பாடலோடு அலங்கரிக்க ஆரம்பப் பிரிவு மாணவர்களின், கச்சான் கோதிலிருந்தும், கடதாசிப் பையிலிருந்தும் பென்சில் கழிவிலிருந்தும், தீப்பெட்டிக் குச்சியிலிருந்தும் பிளாஸ்ரிக் போத்தல்களிலிருந்தும் பைகளில் இருந்தும் பலவகையான கழிவுப் பொருள்களைக் கொண்டு 'கழிவெல்லாம் கருவாக' என்ற தலைப்பிடலில் காணப்பட்ட காட்சிகளில் கற்றலுக்கு உதவுவதோடு கழிவுப் பொருள்களின் கனதியான செய்தியையும் சொல்லி நின்றது. கழிவுப் பொருள்களைக் காத்திரமாக்க முடியும் என்பதற்கு நல்ல சான்றாதாரமாக மேற்படி காட்சியறை அமைந்திருந்தது.

உடற்கல்விப் பாடத்துக்கான மெய்வன்மையை உய்வோம், வணிக பாடத்துக்கான பரிமாற்றத்தின் பரிமாணம், நூலக பாடத்துக் கான நடமாட்டத்தில் கற்போம், விஞ்ஞான பாடத் துக்கான அறிவியலை அறிவோம். வாசிப்பு விருத் திக்கான கற்றல் வளநிலையம், வரலாற்றை மீட்பதற்கான வாழ்வியல் கூடம், உடல் நலத்தைப் பேணுவதற்கான ஊட்டத்தில் நாட்டம், சமைத்து சுவைத்து உண்பதற்கான மனையியலின் மாட்சி, ஆற்றலை வெளிப்படுத்துவதற்கான புதியவை புனைவோம், கணிதத்தை இலகு வழியில் கற்பதற்கான கணிதத்தின் அற்புதங்கள், அறிவியல் வளர்ச்சிக்கான பொறிகளின் பொறி, வாழ்வாதாரத்தின் வாழி ஊடகமான வான் வழி வாழ்வோம், அரசியல் உரிமைகளில் வாக்களிப்போம் வாரீர் என்ற தலைப்புக்களைச் சுமந்த வண்ணம் வரிவடிவங்களுக்கு செயல் வடிவம் கொடுக்கின்ற வகையில் துறை சார்ந்த ஆசிரியர்களின் துணைகொண்டு மாணவர்களின் செயல் கொண்டு காட்சிப்படுத்தப்பட்டிருந்த காட்சிகள் கற்றலுக்கு வலுச் சேர்ப்பனவாக அமைந்திருந்தன.

மேலும் பொறிகளின் பொறி எனும் தொகுதியினுள் மாணவன் ஒருவரின் அறிவும் தந்திரமும் ஒருங்கே இணைந்து மேற்கொண்ட மாயா வித்தை முறையிலான பல்வேறு முறையிலான பரவச மூட்டும் காட்சிகள் பார்ப்போரை வியக்க வைத்தன. மேலும் எமது மாணவரிடையே குளங்களையும் மலைகளையும் வயல்வெளிகளையும் நீர்ப்பாசன முறைகளையும் ஒருங்கே கண்டு கொள்வதற்கான சூழ்நிலை இல்லாத போது வான்வெளி வாழ்வோம். என்ற தலைப்பில் புவியியல், வரலாற்றுப் பாடத்தில் ஆசிரிய மாணவரது கடுமையான உடல், உள உழைப்பின் வெளிப்பாடாக மலை வீழ்ச்சியில் நீர் ஊற்றெடுத்து குளத்தை வந்தடைந்து குளத்தின் மாதிரி அமைப்புடன் வான் கதவுகள் ஊடாக வாய்க்கால் வழியே வயலுக்கு நீர் பாய்ந் தோடும் நிரந்தரமான செயல்முறை சார்ந்த அமைப்பு மிகவும் பிரமாதமாய் அமைந்திருந் தது. இந்தச் செயற்பாடு நிரந்தரமாகவே கற்றலுக்கு உகந்த வகையில் அமைக்கப்பட்டிருந் தமை பாராட்டுக் குரியது. அது போலவே கணி தத்தை இலகுவாகக் கற்றுக்கொள்வதற்கான செயல்முறைகளும் கணித கற்பித்தல் சாத



னங்களும் சில நிலை யாகவே உருவாக்கப்பட்டு நாளும் பொழுதும் மாணவர் மனதில் மனம் கொள்ளத்தக்க வகையில் உருவாக்கப்பட்டிருந்தமை முக்கியமாகின்றது.

தொடர்ந்து அரசியல் உரிமைகளின் ஓர் அங்கமாகிய வாக்கெடுப்பு முறைமை பற்றி அல்லது வாக்களிப்பு முறை பற்றி எம்மவரிடையே போதிய அறிவின்மையை கடந்த காலத் தேர்தல்களில் செல்லுபடியற்ற வாக்குகள் என்கின்ற எண்ணிக்கை அதிகரிப்பதனூடாக நாம் காணுகின்ற சூழ்நிலையில் மாணவர் மத்தியிலும் சமூகத்தின் மத்தியிலும் வாக்கெடுப்பு முறைமை பற்றிய விடய அறிவை ஊட்டுவதற்காக ஆக்கி மகிழ்வோம் தேர்தல் என்ற தலைப்பிலான மாதிரி வாக்குச் சீட்டு தயாரிக்கப்பட்டு, வாக்களிப்பு நிலையம், வாக்களிப்பு உத்தி யோகத்தர்கள் உருவாக்கப்பட்டு தேர்தல் வாக்குச் சீட்டில் 19 தலைப்புக்களின் பெயர்களும் அவற்றின் சின்னங்களும் பொறிக்கப்பட்டு பார்வையிட்ட ஒவ்வொருவரிடமும் வாக்குச் சீட்டுக்கள் வழங்கப்பட்டு மேற்குறித்த தலைப்புக்களில் பார்வையாளரைக் கவர்ந்த விடயத்துக்கான வாக்கினை வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு இரகசிய வாக்களிப்பு நடைபெற்றமை மிகவும் பயனுறுதி கொண்ட செயற்பாடாக அமைந்திருந்தது. அத்துடன் 'ஆக்கி மகிழ்வோம்' கண்காட்சியின் கருத்துக் கணிப்பாகவும் அது அமைந்திருந்தது.

மேற்குறித்த செயற்பாட்டினை வெற்றிகரமாக முன்னெடுக்க பாடசாலைச் சமூகம் நீண்ட முன்னாயத்தத்தினை மேற்கொண்டிருந்ததை நோக்கக் கூடியதாக இருந்தது. மேலும் இந்தக் கண்காட்சிக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கலந்துகொண்டமையும் காத்திரமாக அமைந்திருந்தது. அந்த வகையில் 'ஆக்கிமகிழ்வோம் கண்காட்சி' மாணவரது ஆளுமை விருத்தியிலும் அறிவுவிருத்தியிலும் அனுபவ வெளிப்பாட்டிலும் செல்வாக்குச் செலுத்தும் என்பதில் மாற்றுக் கருத்திருக்க முடியாது. இவ்வாறான கண்காட்சிகள் கல்விச் சமூகத்தில் தோற்றம் பெறுவதன் ஊடாக மாணவ சமூகத்தை ஏற்றம் காணச் செய்ய முடியும் என்பது நிதர்சனமாகின்றது.

---

# வாள்வெட்டுச் சம்பவங்களைக் குறைக்கும் வழிவகைகள்



மருத்துவர் பி. யமுனாநந்தா.

இன்று சிறு தகராறுக்ளுக்கு எல்லாம் வாள் எடுத்து வெட்டும் வன்முறைச் செயற்பாடு குழுவாகச் செய்யும் இயல்பு கிராமங்கள் தோறும் உருவாகிவிட்டது. இந்தச் சம்பவங்களில் ஈடுபடும் இளைஞர்கள் 1990 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரை இந்தப் பகுதியில் பிறந்தவர்களாகக் காணப்படுகின்றனர். இவர்களது இளமைக் காலம் மிகவும் கொடூரமான அழிவுகளைச் சந்தித்த காலமாகும். இவர்களின் மனம் மிகவும் பாதிக்கப்பட்ட மனமாக அமைந்து இருக்கலாம்.

ஆனால் இதனை அவர்கள் உளவியல் ரீதியில் உணராது போதைப்பொருள்கள், மது, குழு நடவடிக்கை, வேகமான வாகன ஓட்டம் என மன சமூக இடைவெளியில் பிறழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். பாய்ந்து வரும் வெள்ளத்துக்கு அணையிடுவது கடினம். அது போலவே இன்று எம்மத்தியில் சில இளைஞர் குழுக் கும்பல்களின் செயற்பாடுகளை வழமையான உளவளத்துணை மூலமோ, சமூக அணுகுமுறைகள் மூலமோ கட்டுப்படுத்துவது கடினம்.


இவர்களைக் கடுமையான நீதியின் மூலமும் காவல் துறையின் கண்காணிப்பிலுமே தடுக்க முடியும்.

சமூக ஒழுக்கத்தினைப் பேணுவதற்கு ஒவ்வொரு கிராமத்தில் இருந்தும் சிலராவது காவல்துறையில் இணைக்கப்படல் வேண்டும். இதன் மூலமே அந்தக் கிராமத்தில் சமூகப் பிறழ்வு ஏற்படாது பாதுகாக் கப்படலாம்.

வடக்கு மாகாண சபை காவல்துறை அதிகாரங்களை உதட்டளவில் உச்சரிக்காது நடைமுறைச் சமூகப் பிரச்சினைகளில் ஒன்றான நமது வாளேந்திய சிங்கங்களின் இரத்த வெறியை இல்லாது செய்வதற்குச் சாத்தியமான வழிமுறைகளை ஆராய்தல் வேண்டும். மேலும் வடக்கு மாகாண முதலமைச்சர் முன் னாள் உயர்நீதிமன்ற நீதியரசராக உள்ள மையினால் சட்டத்தின் ஆட்சியை கிராமிய மட்டத்துக்கு எவ்வாறு பிணக்குகளுக்கு உள் ளான சமூகத்தில் இலாவகமாக இட்டுச் செல்லலாம் என்பதனை முதன்மைப்படுத்தலாம். எம்மால் எதனையும் பூரணமாகச் செய்து விடமுடியாது. ஆனால் எமது முயற்சிகள் எமது சமூகத்தில் நிகழும் அழிவுகளில் பெரும் தாக் கத்தைச் செலுத்தும்.

ஒரு சமூகத்துக்கென காவல்துறை அமையும் பட்சத்திலே சமூக விரோதச் செயல்களாக வாள் வெட்டு வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வன்முறைகள் என்பவற்றைக் கட்டுப்படுத்தலாம். எனவே மாகாண சபை, காவல் துறையை மத்திய அரசின் உதவியுடன் கூடிய அளவு தமிழர்களை உள்வாங்கி செயற்பட வைத்தல் வேண்டும். மேலும் வன்முறையாளர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்குவதன்மூலம் ஏனைய வர்கள் இவ்வாறான செயல்களில் ஈடுபடாது ஒதுங்கும் சந்தர்ப்பம் ஏற்படும். இவற்றுக்குப் பின்பே எமது சமூகத்தில் உளவளத்துணை மூலமோ, அறநெறிக் கல்வி மூலமோ, மதப் பிரசங்கங்கள் மூலமோ, சமூக மேன்பாட்டுச் செயற்பாடுகள் மூலமோ, விழிப்பை ஏற்படுத்த முடியும்.

# மரண அறிவித்தல்



# அருள்சாகரன் நமசிவாயம்

## (ஓய்வுபெற்ற நீதிபதி, இலங்கை)

கொழும்பு, வெள்ளவத்தையைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் மற்றும் California வை வசிப்பிடமாகவும் கொண்ட அருள்சாகரன் நமசிவாயம் 30.06.2014 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம் மற்றும் ராஜநாயகி தம்பதியரின் அன்பு மகனும், திருமதி ரூபராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பிருந்தன் மற்றும் சஞ்சயன், பிரசாந்த் ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr.குணரட்டினம், திருமதி ஜெயஸ்வரி ஆகியோரின் பாசமுள்ள மருமகனும் காலஞ்சென்ற திருமதி தயாநிதி, அமுதசாகரன், ஆனந்தசாகரன், ஞானசாகரன், Dr.யோகசாகரன் காலஞ்சென்ற திருமதி கலாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், Dr.நரபாலசிங்கம், திருமதி நீட்டா, காலஞ்சென்ற திருமதி ரதிதேவி, திருமதி பிரபாலினி, Dr.சிவகுமாரி, ஸ்ரீகாந்தா, திருமதி சந்திரவதனி, திருமதி அனுஷா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (02.07.2014) புதன்கிழமை காலை 8.30 மணிக்கு Twin Chapels Mortuary, 1100Tennessee Street, Vallejo,CA 94590 என்ற முகவரியில் வைக்கப்பட்டு, பின்னர் 10.30 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
மகன் -சஞ்சயன்/மகன்- பிரசாந்த் - 1 707 297 0785

(C/14852)(5.6.3)

## மன்னார் சென்.லூட்சியஸ் வென்றது

யாழ்ப்பாணம்,ஜூலை 2
இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் பிறிமியர்லீக் பிரிவு II க்கான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலநறுவை தேசிய விளையாட்டு ஸ்மைதானத்தில் இடம் பெற்றது.
இதில் மன்னார் சென்.லூட்சியஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொலநறுவை நீந்தமித்த விளையாட்டுக்கழக அணி மோதியது.
இதில் மன்னார் சென்.லூட்சியஸ் விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)



# விதியை மீறிய கழகத்துக்கு இரு ஆண்டுகளுக்குத் தடை

## பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் விதித்தது

கரணவாய், ஜூலை 2
எதிரணி வீரர்களைக் தாக்கி, விதிகளுக்கு முரணாகச் செயற்பட்ட வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்துக்கு 2 ஆண்டுகள் போட்டிகளில் பங்கேற்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக் கழகம், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி குறித்த கழகத்தின் மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.
அதில் கடந்த 26ஆம் திகதி இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும், வல்வை ஆதிபராசக்தி விளையாட்டுக் கழகமும் மோதின.
ஆட்டத்தின்போது வல்வை ஆதிபராசக்தி விளையாட்டுக் கழக ஆதரவாளர்கள் டயமன்ஸ் விளையாட்டுக் கழக வீரர் மீது தாக்குதல் நடத்தினர். அது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், ஆதிபராசக்தி விளையாட்டுக் கழகத்துக்கு இரு ஆண்டுகள் ஆட்டங்களில் பங்குகொள்ளத் தடை விதித்துள்ளது. அத்துடன் குற்றப் பணமாக 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. அது தொடர்பில் குறித்த கழகத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.
அதேவேளை, குறித்த ஆட்டத்தில் ஆதிபராசக்தி விளையாட்டுக் கழக வீரர்களைத் தாக்கிய குற்றத்துக்காக டயமன்ஸ் கழக வீரர்கள் இருவருக்கு 5 மாதங்கள் ஆட்டங்களில் பங்குபற்றுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.
தடை விதிக்கப்பட்டுள்ள கழக வீரர்கள் எந்தவொரு ஆட்டங்களிலும் பங்குபற்ற முடியாது என்றும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அறிவுறுத்தியுள்ளது.
(ற-108)



*பாடசாலை அணிகளுக்கு இடையிலான மாகாண மட்ட கூடைப்பந்தாட்டத் தொடரில் இரண்டாம் இடத்தைப் பெற்ற இராமநாதன் கல்லூரி அணியினர்.*

## இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம்,ஜூலை 2
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 95 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தப்படும் தாச்சி சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.
இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வெஸ்றோம் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மடத்தடி வைகறை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
(ற-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 2
குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு வடமாகாண ரீதியாக நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக மைதானத் தில் இடம்பெற்று வருகின்றன.
இன்று புதன்கிழமை பி.ப. 3.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ரெட்றேஞ்சஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உரும் பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்ககழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை 2
மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் நடத்தும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.
அவற்றில் இன்று புதன் கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மீசாலை சீமா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் கலைவாணி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 2
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகத்துடன் இணைந்து யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல், இரவு ஆட்டங்களாக இடம்பெற்று வருகின்றன.
அவற்றில் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஞானகலா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை சென்.ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 5மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக் கோட்டை யூனியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வட்டுக் கோட்டை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நெடியகாடு விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.
இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரவைச்சுடர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ற-23)

பாடும்மீன் உதைபந்து தொடர்

## வெற்றி பெற்றது ஞானமுருகன்

யாழ்ப்பாணம், ஜூலை 2
குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தின் பொன் விழாவை முன்னிட்டு வடக்கு மாகாண ரீதியாக நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.
ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து இளவாலை யங் ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.
ஆட்டநேர முடிவில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.
அதையடுத்து வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. அதில் ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ற-23)

## கரவெட்டி ஞானம்ஸ் கிண்ணம் சுவீகரித்தது

யாழ்ப்பாணம்,ஜூலை 2
பூநகரி முக்கொம்பன் சின்னப் பல்லவராயன்கட்டு செவ்வானம் விளையாட்டுக் கழகம் கழகத்தின் முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்திய மென்பந்துச் சுற்றுத் தொடரின் இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
நேற்று முன்தினம் திங்கட் கிழமை சின்னப்பல்லவராயன்கட்டு விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணி 10 பந்து மாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 84 ஓட்டங்களைப் பெற்றது.
அதிகபட்சமாக ஜொனி 16 ஓட்டங்களையும், சசி 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்துவீச்சில் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி, சார்பில் சுயந்தன் 3 இலக்குகளையும், தாசன், அஜந்தன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
85 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குப் துடுப்பெடுத்தடிய யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி 10 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 34 ஓட்டங்களைப் மட்டும் பெற்றது.
தர்சன் 8 ஓட்டங்களையும், சசி 6 ஓட்டங்களையும் தமது அணி சார்பாக அதிகபட்சமாகப் பெற்றனர்.
பந்து வீச்சில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் அனுரதன் 4 இலக்குகளையும், கோகுலன் 3 இலக்குகளையும் பிரசாந் 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.
சிறந்த பந்து வீச்சாளராக கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழக வீரன் அனுரதன் தெரிவானார்.
சிறந்த துடுப்பாட்ட வீரனாக கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழக அணி வீரன் ஜொனி தெரிவானார்.
(ற-23)

## இளவாலை யங்ஹென்றிஸ் உதைபந்தாட்டத் தொடர்

## கலைமகள், கரவைச்சு_ர் அடுத்த சுற்றில்

யாழ்ப்பாணம்,ஜூலை 2
இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் 107 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பிரான்ஸ் பழைய மாணவர் சங்கம் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகத்துடன் இணைந்து யாழ்.மாவட்ட ரீதியாக உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் ஒன்றை நடத்தி வருகின்றன.
அந்தத் தொடரின் ஆட்டங்கள் இளவாலை பனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் பகல், இரவு ஆட்டங்க்ளாக இடம்பெற்று வருகின்றன.
அவற்றில் இதுவரை நடைபெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-
உதயசூரியன் விளையாட்டுக்கழக அணிக்கும் கலைமகள் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கலைமகள் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
முதற்பாதி ஆட்டம் ஆரம்பமானது முதல் கலைமகள் விளையாட்டுக் கழக அணி சிறப் பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. 16 ஆவது நிமிடத்திலும், 20 ஆவது நிமிடத்திலும் கலைமகள் விளையாட்டுக் கழக அணி வீரன் விதுசன் அடுத்தடுத்து தனது அணிக்கான கோலை அடித்தார்.
அதனால் முதற்பாதி ஆட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்டபோது கலைமகள் விளையாட்டுக் கழக அணி முன்னிலையில் இருந்தது.
இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பாமானதும் இரண்டு அணியினரும் தத்தமது அணிக்கான கோலைப் பெறும் முயற்சியில் கடுமையாகப் போராடினர். உதயசூரியன் விளையாட்டுக்கழக அணியினர் சிறப்பான ஆட்டத்தை வெளிப் படுத்தினர். இதனால் இரண்டாம் பாதி ஆட்டத்தில் கலை மகள் விளையாட்டுக் கழக அணியினர் மேலும் கோல்லைப் பெற முடியவில்லை. ஆட்டநேர முடிவில் கலை மகள் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.


*விறுவிறுப்பான ஆட்டத்தின் ஒரு காட்சி*

கரவைச் சுடர் விளையாட்டுக் கழக அணிக்கும் ஊரெழு பாரதி விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கரவைச்சுடர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றது.
முதற் பாதி ஆட்டத்தின் 24 ஆவது நிமிடத்தில்கரவைச்சுடர் விளை யாட்டுக்கழக அணி வீரன் தவசீலனும் 38 ஆவது நிமி டத்தில் குபேந்திரனும் கோல் அடிக்க 2:0 என்ற கோல் கணக் கில் கரவைச் சுடர் விளையாட் டுக்கழக அணி முன்னிலை பெற்றது.
இரண்டாம் பாதி ஆட்டத்தில் தனது ஆட்டத்தினை விரைவு படுத்திய ஊரெழு பாரதி விளையாட்டுக்கழக அணி வீரன் சதீஸ் 47 ஆவது நிமி டத்தில் தனது அணிக்கான கோலை அடித்தார் ஆட்ட நேர முடிவில் கரவைச் சுடர் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.
(ற-23)

# 90 நிமிடங்களுக்குப் பிறகு 2 கோல்கள் அல்ஜீரியாவை வெளியேற்றிய ஜேர்மனி





உலகக் கோப்பைக் கால்பந்து போட்டியின் அல்ஜீரியாவை 2:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி ஜேர்மனி காலிறுதிக்குத் தகுதி பெற்றது. 92ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் ஆந்த்ரே ஸ்கர்லி முதல் கோலை ஜேர்மனிக்காக அடிக்க, பிறகு கூடுதல் நேரத்தில் 119ஆவது நிமிடத்தில் ஜேர்மனியின் மெசூட் ஓசில் வெற்றிக் கோலை அடித்தார். 120ஆவது நிமிடத்தில் அல்ஜீரியா வீரர் அப்டெல்மௌமீனி ஓர் ஆறுதல் கோலை அடித்தார். அன்று மெக்சிக்கோ கோல் காப்பாளர் ஒச்சாவை நம்பியே களமிறங்கியது போல், அல்ஜீரியாவும் கோல் காப்பாளரை நம்பியே களமிறங்கியது. அவர் தடுத்து வெளியேற்றுவார் உடனே மூலை உதை. இப்படியே சென்று கொண்டிருந்தால் எவ்வளவு நேரம் ஜேர்மனியின் வீரர்களைத் தடுத்து நிறுத்திக் கொண்டே இருக்க முடியும்? போர்த்துக்கல் அணிக்கு எதிராக 4:0 என்ற கோல் கணக்கில் என்று வெடித்துக் கிளம்பிய ஜேர்மனி, கானாவின் சவாலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் போராடி சமநிலை செய்தது. அமெரிக்க அணியுடன் திருப்தி தராத வெற்றி பெற்றது. அல்ஜீரியாவை நிச்சயம் எளிதில் வெல்லும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் முடியவில்லை. இடைவேளைக்கு முன்பாக நிச்சயமாக அல்ஜீரியா ஜேர்மனியைக் காட்டிலும் சிறப்பாக ஆடியது என்றே கூறவேண்டும்.

அல்ஜீரியா ஒரு கோலையும் அடித்திருக்கும். கவ்லம் அடித்த அபாரமான கிராஸை ஸ்லிமானி தலையால் முட்டினார். ஆனால் மிகச்சரியாக அது ஓப் சைட் என்று நடுவரால் மறுக்கப்பட்டது. பிறகு கவ்லம் ஓர் உதையை உதைக்க அது வெளியே சென்றது. மீண்டும் மெஹ்தி மொஸ்தபா அடித்த உதையை ஜெரோம் போடெங் திசை திருப்பிவிட்டார். இவ்வாறு அல்ஜீரியா ஜேர்மனியை கதிகலங்க அடித்தது.

இடைவேளைக்குச் சற்று முன்னரே, ஜேர்மனி தன் ஆட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது. 41ஆவது நிமிடத்தில் ஜேர்மனி தாக்குதல் ஒன்றில் டோனி குரூஸ் கோலுக்காக அடித்த பந்தை அல்ஜீரிய கோல் காப்பாளர் ரைஸ் மபோல்ஹி தாழ்வாகத் தடுத்தார். ஆனால் பந்து ரீபவுண்ட் ஆகி ஜேர்மனி வீரர் மரியோ கூட்ஸியிடம் செல்ல அவர் அதனை கோலாக்க முயன்றார். ஆனால் இம்முறையும் அல்ஜீரிய கோல் காப்பாளர் அற்புதமாகத் தடுத்தார்.

இடைவேளைக்குப் பிறகு ஜேர்மனி கள அமைப்பில் சிறு மாற்றம் செய்தது. வலது புறம் கூட்ஸிக்குப் பதிலாக ஸ்கர்லி வந்தார். இதனால் ஓசில் இடமும் மாறியது. இது ஏறக்குறைய கோலைப் பெற்றுக் கொடுத்திருக்கும் ஆனால் ஷாட் வைடாகச் சென்றது.

அல்ஜீரியாவும் எதிர்த்தாக்குதல் தொடுத்தது. அந்த அணியின் ஸ்லிமானி அபார மாக ஆடினார். திடீரென எழுச்சி யுற்று பந்தை ஜேர்மனிப் பகுதிக்குள் இவர் கொண்டு சென்றது அருமை யான காட்சியாகும். ஆனால் பந்தை அருமையாக அடித்தும் ஜேர்மனி வீரர் நியூயரைக் கடக்க முடியவில்லை.

தோமஸ் முல்லருக்கு தன் கோல் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ள ஒரு வாய்ப்பு வந்தது. ஆனால் அல்ஜீரிய கோல் கீப்பர் மீண்டும் தடுத்து நிறுத்தினார்.

90 நிமிடங்கள் முடியும் தறுவாயில், மீண்டும் முல்லர் உள் நுழைந்தார் ஆனால் கோல் விழவில்லை. பிறகு ஜேர்மனி வீரர் லாம் அடித்த பந்தை ஷ்வெய்ன்ஸ்டெய்ஜர் தலையால் அடிக்கும் வாய்ப்பைக் கோட்டை விட்டார்.

கூடுதல் நேரத்தில் முதலில் ஜேர்மனி கோல் அடித்தது. தாமஸ் முல்லர் கோல் அடிக்காவிட்டாலும் இந்த கோலுக்கு இவர்தான் பிரதான காரணம். தோமஸ் முல்லர் அடித்த ஷாட் பெனால்டி பகுதிக்குள் சென்றது. அங்கு ஆந்த்ரே ஸ்கர்லி 6 யார்டுகளுக்கு முன்னால் நின்று கொண்டு அல்ஜீரிய கோல் கீப்பரின் கண்ணை கட்டி கோலாக மாற்றினார். ஜேர்மனி 1:0. 118ஆவது நிமிடத்தில் ஸ்லிமானிக்கு ஓர் அருமையான வாய்ப்பு கிடைத்தது. ஆனால் ஜேர் மனியின் தடுப்பாட்ட வீரர் கெரோமி போடெங் அவரிடமிருந்து பந்தைப் பிடுங்கிச் சென்றார். ஆட்டத்தின் 119ஆவது நிமிடம், ஜேர்மனி எதிர்த் தாக்குதல் நடத்தியது. ஜேர்மனி வீரர் ஓசில் இடதுபுறம் பந்தை எடுத்து சென்று பக்கவாட்டில் வந்து கொண்டிருந்த ஸ்கர்லிக்குப் பந்தை பாஸ் செய்தார், அவர் கோல் கீப்பரைக் கடைந்து எடுத்து கோலுக்காக அடிக்க அது லைனில் தடுக்கப்படுகிறது. ஆனால் பந்து மீண்டும் ஓசிலிடம் வர அவர் அதனை 2ஆவது கோலாக மாற்றினார்.

அல்ஜீரியாவிடமிருந்து ஆட்டத்தை 2 ஆவது கோல் அடித்து ஓசில் ஜேர்மனிப் பக்கம் கைப்பற்ற, கடைசியில் அல்ஜீரியாவின் ஃபெகவ்லி வலது புறத்திலிருந்து ஓர் அரு மையான பாஸை அடிக்க, அதனை டிஜாபு அருமையான கோ[illegible] மாற்றினார். ஆனால் பயன் இல்லை. அல்ஜீரியா வெளியேறியது.

## பிரான்ஸ் அதிரடி ஆட்டம் அடுத்த சுற்றுக்குள் நுழைவு

உலகக் கிண்ணத் தொடரில் பிரான்ஸ் அணி, நைஜீரிய அணியை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியது.

நேற்று முன்தினம் இரவு நடந்த போட்டியில் முன்னாள் சாம்பியன் பிரான்ஸ் அணி, நைஜீரியாவை எதிர்கொண்டது. ஆரம்பத்தில் நைஜீரியாவின் ஆதிக்கமே அதிகம் காணப்பட்டது. பிரான்ஸ் வீரர்கள் முரட்டு ஆட்டம் ஆடி அதிர்ச்சி அளித்தனர். 19ஆவது நிமிடத்தில் நைஜீரியாவின் அடித்த கோல், ஒப் சைட் என நிராகரிக்கப்பட்டது. 23ஆவது நிமிடத்தில் பிரான்ஸின் போக்பா அடித்த பந்தை நைஜீரிய கோல்கீப்பர் எனியாமா துடிப்பாகத் தடுத்தார். தொடர்ந்து இரு அணிகளும் தாக்குதல் நடத்தியபோதும், பினிஷிங் இல்லாதால் முதல் பாதி கோல் எதுவும் அடிக்கப்படாமல் முடிந்தது.

இரண்டாவது பாதியிலும் பிரான்ஸின் தாக்குதல் ஆட்டம் தொடர்ந்தது. நைஜீரியாவின் ஒனாசியை வீணாக மடக்கிய பிரான்ஸின் பிளேய்சி மெட்டியுடி மஞ்சள் அட்டை எச்சரிக்கை பெற்றார்.

ஆட்டத்தின் 70ஆவது நிமிடத்தில் பிரான்ஸின் பென்சிமா அருமையாகப் பந்தை அடித்தார். இதனை உதைத்து வெளியே அனுப்பினார் நைஜீரிய தற்காப்பு பகுதி வீரர் விக்டர் மோசஸ்.



இது குறித்து சந்தேகம் எழ, கோல்- லைன் தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டது. இதில், பந்து கோல்-லைனை கடக்கவில்லை என்பது தெரிய வர, பிரான்ஸ் வாய்ப்பு நழுவியது. இதற்கு பின் பிரான்ஸ் வீரர்கள் நைஜீரிய பெனால்டி பகுதியில் அலை அலையாக தாக்குதல் நடத்தினர்.

போட்டியின் 79ஆவது நிமிடத்தில் மூலை உதை வாய்ப்பில் பந்தை அடித்தார் வெல்பியுனா. இதனை நைஜீரிய கோல்கீப்பர் எனியாமா கையால் குத்தித் தடுத்தார். இவரது துரதிருஷ்டம் பந்து, பிரான்ஸின் போக்பா இருக்கும் திசையில் பறந்து வர, அதை அவர் அப்படியே தலையால் முட்டி கோலாக மாற்ற, பிரான்ஸ் 1:0 என்ற முன்னிலை பெற்றது. ஸ்டாபேஜ்' நேரத்தில் தற்காப்பு பகுதியில் மாபெரும் தவறு செய்த நைஜீரிய வீரர் ஜோசப் யோபோ சேம் சைடு கோல் (90+1) அடிக்க, பிரான்ஸ் 2:0 என்ற கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது.

## மெஸ்ஸிக்கு சவால்




ஆர்ஜென்ரீனா மொடல் அழகி யோரில்லா காஸ்டிலோ ஆர்ஜென்ரீனா அணியின் நட்சத்திர வீரர் மெஸ்ஸிக்கு வித்தியாசமான சவால் ஒன்று விடுத்துள்ளார்.

உலகக் கிண்ணத் தொடரில் ஆர்ஜென்ரீனா அணி கிண்ணத்தை நோக்கி முன்னேறி வருகிறது. அந்த அணியின் அணித் தலைவர் மெஸ்ஸி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார்.

இந்த நிலையில் ஆர்ஜென்ரீனா மொடல் அழகி காஸ்டிலோ மெஸ்ஸிக்கு சவால் விடுத்துள்ளார். பிரி ஸ்டைலிங் மூலம் அதாவது பந்தை காலால் வீழாமல் அடிக்கும் முறை மூலம் இதுவரை 800 ஆண்களை வீழ்த்தியதாகக் கூறிய காஸ்டிலோ உலகின் சிறந்த வீரரான மெஸ்ஸியை வீழ்த்த முடியுமா என்று பார்த்தால் கண்டிப்பாக முடியும் என்று தெரிவித்துள்ளார். மேலும் பிரேஸிலில் உள்ள இந்த இப்பானேமா கடற்கரை அழகாக உள்ளது. 800 ஆண்களில் இன்னும் 3 ஆண்கள் மட்டுமே மீதி உள்ளனர். அவர்களையும் வீழ்த்தி விடுவேன் என்று கிண்டலாகக் கூறினார்.

# இலங்கையில் அதிரடியாக ஆடுவோம்




இலங்கை அணியுடன் மோதப் போகும் தொடரானது சவால் நிறைந்ததாக அமையும் என்று தென்னாபிரிக்க அணியின் அணித் தலைவராக தெரிவு செய்யப்பட்ட அம்லா கூறியுள்ளார்.

தென்னாபிரிக்க அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து 3 ஒருநாள் போட்டி, இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாட இருக்கிறது. இந்த முதல் ஒருநாள் போட்டி எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெற இருக்கிறது.

இந்தத் தொடரில் தென்னாபிரிக்க டெஸ்ட் கிரிக்கெட் அணியின் புதிய அணித்தலைவராக அம்லா நியமிக்கப்பட்டுள்ளார்.

அம்லா இது பற்றி கூறுகையில்;

"கடந்த காலங்களில் தென்னாபிரிக்க அணி இலங்கையில் சிறப்பாக விளையாட வில்லை. எங்களுக்கு இலங்கை தொடர் சவால் வாய்ந்ததாகும். டெஸ்ட் போட்டிக்கு முன்பான ஒருநாள் போட்டியில் நன்றாக விளையாடுவதே என்னுடைய எண்ணம். அதற்காகவே முழுக்கவனம் செலுத்தி வருகிறேன்.

தரவரிசையில் தற்போது நாங்கள் 2ஆவது இடத்தில் உள்ளோம். இத்தொடரில் வெற்றி பெற்று முதல் இடத்தை பிடிப்போம். தற்போது இலங்கைத் தொடரில் சாதிக்கும் வகையில் இங்கிலாந்து கவுண்டி கிரிக்கெட்டில் விளையாடி வருகிறேன்.


அணித்தலைவர் பொறுப்பை ஏற்றவுடன் நான் அதிகமாக சிந்தித்தபோதும் பெரிதாக எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இத்தொடர் தொடங்கிய உடன் மிகப்பெரிய மாற்றம் ஏற்படும் என்று நினைக்கிறேன்" என்று கூறியுள்ளார்.

## வேலை வாய்ப்பு

கொழும்பை அண்மித்த பகுதிகளிலுள்ள ரீ, கோழி இறைச்சி, ரின, பெயின்ட் போன்ற தொழிற்சாலைகளில் உற்பத்தி /பொதியிடல்/லேபல் போன்ற பிரிவுகளில் 18000/=, 26000/= வரையிலான சம்பளத்துடனான உணவு, தங்குமிட வசதிகளுடன் 18-50 வயது வரையான ஆண், பெண் இருபாலாருக்கும் நிரந்தர வேலை வாய்ப்பு.

(13367) (10) தொடர்புகளுக்கு: 076 699 1993

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
19.03.1967

விண்ணில்
17.06.2010

### அமரர் கணேசமூர்த்தி சசிதரன் (சசி)

திதி: ஸ்கந்த பஞ்சமி [02.07.2014] புதன்கிழமை

கண்ணீரில் கரைந்ததையா ஆண்டுகள் நான்கு
கண்முன்னே நீங்களில்லை உறவாட எம்மோடு
உங்களை எண்ணாத நாளில்லை இதயத்தில் எப்போதும்
உங்கள் நினைவுகளே எம்மையிங்கு ஆளுதப்பா!
இறுதிவரை எம்மோடு சேர்ந்திருப்பீர்கள் என்றிருந்தோம்
இடைநடுவே தவிக்கவிட்டு எங்கே அப்பா சென்றீர்கள்
பணத்திற்காக அல்லாடும் உறவுகள் மத்தியில்
எம்மைத் தவிக்க விட்டுச் சென்றதேனோ?
எம் அப்பாவின் ஆத்மா சாந்தியடைய இறைவனடி வேண்டுகின்றோம்.

போக்கறி லேன்,
சண்டிலிப்பாய்.

என்றும் உங்கள் நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஓய்வுபெற போவதாக அறிவிப்பு

உதைபந்தாட்டப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக கிரீஸ் அணியின் தலைவர் ஜியார் கோஸ் கரகவனிஸ் அறிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கொஸ்டரிக்கா அணியிடம் தோல்வியடைந்ததை அடுத்தே இவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

தமது அணியின் இளம் வீரர்கள் இந்த உலகக் கிண்ண ஆட்டங்களில் பெற்ற அனுபவத்தை கொண்டு எதிர் காலத்தில் கிரீஸ் அணியை சிறந்த அணியாக மிளிரச் செய்வார்கள் என 37 வயதான ஜியார் கோஸ் குறிப்பிட்டுள்ளார்.

உலகக்கிண்ண நொக் அவுட் சுற்றுப் போட்டியில் கொஸ்டரிக்க அணியுடன் இடம்பெற்ற போட்டியில் கிரீஸ் அணி பெனால்டி முறையில் 5-3 என்ற கோல்கள் கணக்கில் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

உ
சிவமயம்

## கரைச்சி புளியம் பொக்கனை நாகதம்பிரான் ஆலயம்



### ஆனி உத்தர தரிசனம்

04.07.2014 வெள்ளிக்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி காலைப் பூஜை நடைபெறும்.

கற்பக விநாயகர் பெருமானுக்குஅஷ்டோத்தர (108) சங்காபிஷேகம் 04.07.2014 காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி பூஜை நடைபெறும்.

அனைத்து அடியார்களையும் இக் கைங்கரியத்தில் கலந்து எம் பெருமானின் அருளைப் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகின்றோம். நன்றி!

(41307) (10) ஆலய பரிபாலன சபையினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தங்கம்மா கந்தையா



புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கைப் (கல்வியங்காடு) பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா கந்தையா நேற்று (01.07.2014) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி -சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லம், வல்லிபுரம், இராசையா, இரத்தினம், சிவராமலிங்கம் ஆகியோரின் சகோதரியும், C.V.K. சிவஞானம், பரமேஸ்வரி, இராசதுரை, அன்னலட்சுமி ஆகியோரின் தாயும், சறோஜினிதேவி, திருநாவுக்கரசு, புஸ்பராணி, காலஞ்சென்ற தியாகராஜா ஆகி யோரின் மாமியும், ஞானசுரபி, ஞானசொரூபன், சிவப்பிரியா, திருக்குமார், சசிகலா, செந்தில்குமார், கோகுலன், ரேவதி ஆகியோரின் பேர்த்தியும், மேகவர்ஷினி, சர்வலக்ஷன், அபிசாலினி, திவ்வியன், யதுஷன், யதுஷா, பிரியங்கா, டிலக்ஷிகா, பவிதன், றோகிந்சண், மனஸ்வினி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2014) புதன்கிழமை பிற் பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

(49451)(10)

தகவல்:
குடும்பத்தினர்.

## வேலைவாய்ப்பு

### சினேறு என்ரர்பிறைசஸ்

கிளை:-
பெரியகுளம், கனகராயன்குளம், வவுனியா

அனுபவம் உள்ளவர்கள் மட்டும்

பண வசூலிப்பாளர்கள் 〉
- மோட்டார் சைக்கிள் - புத்தகத்துடன்
- சாரதி அனுமதிப் பத்திரம்
- பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்
- தேசிய அடையாள அட்டை
- கிராம அலுவலரது உறுதிப்படுத்தல் கடிதம் என்பன வேண்டும்.

பெண் பணியாளர்கள் 〉
- சிங்களம், தமிழ் எழுத வாசிக்கத் தெரிய வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு:- 077 721 8055
072 228 9375

(41306)(10.6.3) சினேறு என்ரர்பிறைசஸ்

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## கனடா ஜெயசாயி சூப்பர் சென்ரர்




இடம் மாற்றுவதை
முன்னிட்டு
15.06.2014 முதல்
இருப்பகற்றல்.
கொள்வனவு செய்யும்
அனைத்து விதமான
ஆடைகளையும் அதன்
விலையில் இருந்து
1/2 வாசி விலைக்கு
பெற்றுக் கொள்ளலாம்.
இல. 114, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 221 9393



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்**: உங்கள் வளர்ச்சியினால் உங்கள் தந்தை சந்தோஷம் அடைவார். மருத்துவத் தொழிலில் இருப்பவர்களுக்கு ஆதாயம் கிடைக்கும். கலைஞர்கள் ரசிகர்களால் போற்றப்படுவார்கள். அரசியலில் உள்ளவர்களுக்கு பெரிய பொறுப்புகள் வந்து சேரும்.



**இடபம்**: அரசியல்வாதிகள் தங்கள் நிலையைக் கருத்தில் கொள்வதோடு வாழ்க்கைத் துணையின் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தவும். வழக்குகள் வெற்றியைத் தரும். புதிய வீடு கட்டும் முயற்சி நிறைவேறும். முயற்சிகள் அனைத்தும் வெற்றியாகும்.



**மிதுனம்**: பல பிரச்சினைகள் ஒரே நேரத்தில் சிரமம் தந்தாலும் ஏற்றுக் கொண்டு முயற்சியால் வெற்றிகளை ஈட்டுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களுடன் ஒத்துப்போக வேண்டியது அவசியம். சகோதர சகோதரிகளுடன் உறவு சிறக்கும்.



**கடகம்**: மன உறுதி அதிகரிக்கும். பயணத்தில் ஆர்வம் அதிகரிக்கும். பாராட்டுகளும் விருகளும் கிடைக்கும். ஆன்மிக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பிள்ளைகளால் சந்தோஷம் அதிகரிக்கும். அவர்களுக்கு புதிய வாகனம் வாங்கிக் கொடுப்பீர்கள்.



**சிங்கம்**: உத்தியோகம் சிறக்கும். உங்கள் தொழில் மூலம் பணவரவு அதிகரிக்கும். எதிரிகள் உங்கள் முன் அடங்குவர். செம்பு, தங்க வியாபாரிகள் பெருத்த இலாபம் அடைவர். மாண வர்களுக்கு பரிசுகளும் பாராட்டுதல்களும் கிடைக்கும்.



**கன்னி**: கலைத்துறையில் உள்ளவர்களுக்கு வெளிநாடு பயணங்களால் பணவரவு அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் கவனத்தை செலுத்த வேண்டியது அவசியம். எதிலும் உணர்ச்சிவசப்பட வேண்டாம். கிடைக்கப்பெற்ற பணத்தைத் தவறான வழிகளில் முதலீடு செய்ய நேரும்.



**துலாம்**: வாழ்நாள் முழுவதும் ஏற்படவிருக்கும் கஷ்டங்களை அறியாமல் தவறான முடிவுகளில் இறங்க வேண்டாம். புதைபொருள் ஆராய்ச்சியில் உள்ளவர்கள் அரிய முயற்சிகளில் வெற்றி பெறுவர். அரச துறையில் பணி இடை நீக்கம் பெற்றவர்கள் மீட்சி பெறுவர்.



**விருச்சிகம்**:குடும்பத்தில் உங்களுக்குப் பெரிய பொறுப்புத் தேடி வரும். நாவன்மையால் உங்கள் வேலைகளைச் சாதித்துக் கொள்வீர்கள். சிறிய அளவிலான குழப்பத்தைத் தரலாம். ஆன்மிக சொற்பொழிவுகள், உபன்யாசங்கள் செய்வோருக்கு உகந்த காலமாகும்.



**தனுசு**: உடன்பிறந்த ஒருவருக்கு உங்களால் யோகம் கிடைக்கும். உங்களால் உங்களுக்குப் பெருமையும் செல்வமும் கிடைக்கும். வாகன வழிகளில் விரையம் ஏற்படலாம். முதலீடுகள் செய்யும் போதும் கவனத்துடன் செய்யவும்.



**மகரம்**: தந்தையாருடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எதிரிகளின் தொல்லைகள், கடன்சுமைகள் குறையும். தாய் மாமனால் அனுகூலம் கிடைக்கும். வேலை செய்யும் இடத்தில் உயரதிகாரிகளின் பாராட்டுதல்கள் கிடைக்கும்.



**கும்பம்**: கலைத்துறையினருக்கு பொருளும் புகழும் கூடும். பொதுவாகத் தொல்லைகளும் பிரிவினையும் நீங்கி ஒற்றுமையும் உயர்வும் ஏற்படும். தைரியம் கூடும். மிகவும் எச்சரிக்கையுடன் படித்தால் சாதனைகள் புரிய வாய்ப்புண்டு.



**மீனம்**: உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கணவன் மனைவி கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு மறையும். கவனம் தேவை. வீண் வாக்குவாதத்தைத் தவிருங்கள். நண்பர்கள் மூலம் அனுகூலம் ஏற்படும். தேவையற்ற வீண் விவாதங்களில் ஈடுபட வேண்டாம்.

## நாளை

**ஆனி-19 வியாழக்கிழமை | 03.07.2014**

திதி: ஷஷ்டி பி.இ.12.19 வரை
நட்சத்திரம்: பூரம் மா.06.50 வரை
சுபநேரம்: 07.27-08.57 வரை
இராகுகாலம்: 01.27-02.57 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### யேசு மீண்டும் எப்போது வருவார்?

கடவுள்மீண்டும் மீண்டும்அவதரித்துக்கொண்டேயிருக்கிறார். கண்ணனாகவும், இராமனாகவும், புத்தராகவும் அவர் அவதரித்திருக்கிறார்; மீண்டும் அவதரிப்பார். உலகம் ஐநூறு ஆண்டுகளுக்கு ஒரு முறை சீரழிந்து தாழ்கிறது எனவும், அதன் பிறகு ஆற்றல் மிகுந்த ஆன்மிகஅலைஒன்றுதோன்றுகிறது எனவும், அந்த ஆன் மிக அலையின் மீது ஒரு யேசு வீற்றிருக்கிறார் எனவும் எளிதில் நிரூபிக்கமுடியும்.

இப்போது உலகம் எங்கும் ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. சக்கரம் போல முறையாகச் சுழன்று சுழன்று ஏற்பட்டுவரும் மாற்றங்களுள் இது ஒன்று. வாழ்விலுள்ள பற்றுக் கோட்டையே தாங்கள் இழந்து வருவதாக மனிதர்கள் உணரத் தொடங்கிஉள்ளனர். அவர்கள் எந்தப் பக்கம் திரும்புவார்கள்? கீழ் நோக்கியா? மேல் நோக்கியா? மேல் நோக்கியே திரும்புவார்கள். இது உறுதி. எவ்வாறு அது கீழ் நோக்கி இருக்க முடியும்? உடைப்பிலே குதியுங்கள்; உங்கள் உடலாலும், ஆன்மாவாலும் அந்த உடைப்பை நிரப்புங்கள்.

உயிருடன் இருக்கும் போது உலகம் சீரழிவதை நீங்கள் எவ்வாறு ஒப்புக் கொள்ள முடியும்.

## நாய்களுக்கும் ஹோட்டல்



மனிதர்கள் மட்டும் தான் ஹோட்டலில் அமர்ந்து சாப்பிடுவார்களா? ஏன் நாங்களும் ஹோட்டலுக்கு செல்வோம் என்று சொல்வது போல் எம்மைப் பார்க்கின்றன நாய்கள்.

நாய்களுக்கும் ஹோட்டல்கள் செயற்பட்டு வருகின்றன. செக் குடியரசு நாட்டில், நாய்களுக்கென்று பிரத்தியேகமாக ஒரு ஹோட்டலை நடத்தி வருகிறார்கள். அங்கு நாய்கள், வாலை ஆட்டியபடி, உணவைச் சாப்பிடும் அழகே தனி. இறைச்சி உள்ளிட்ட பல்வேறு உணவு வகைகள், நாய்களுக்கு அளிக்கப்படுகின்றன.

உணவுத் தட்டை வைக்கும் போதே அதன் அருகில் ஒரு கோப்பையில் தண்ணீரும் வைக்கப்படுகிறது. நாய் கூட வெளியில் சென்று சாப்பிடலாம் என்பது நல்ல ஐடியா என்று நாய் வளர்ப்பவர்கள் சந்தோஷம் அடைகிறரார்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | 7 | | 3 |
| 9 | | | 2 | | | 5 | 8 | |
| 3 | 7 | 5 | 8 | 1 | 9 | | 6 | |
| | | | 3 | 6 | | | | |
| | 1 | 2 | 9 | | 8 | 3 | 5 | |
| | | | | 7 | 1 | | | |
| | 5 | | 4 | 9 | 6 | 1 | 3 | 8 |
| | 3 | 6 | | | 5 | | | 4 |
| 4 | | 1 | | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 3 | 6 | 5 | 7 | 9 | 8 | 1 |
| 1 | 8 | 9 | 4 | 3 | 2 | 6 | 5 | 7 |
| 6 | 5 | 7 | 1 | 9 | 8 | 4 | 3 | 2 |
| 7 | 1 | 4 | 2 | 8 | 6 | 3 | 9 | 5 |
| 2 | 9 | 8 | 3 | 1 | 5 | 7 | 6 | 4 |
| 5 | 3 | 6 | 7 | 4 | 9 | 1 | 2 | 8 |
| 9 | 4 | 2 | 8 | 6 | 1 | 5 | 7 | 3 |
| 8 | 6 | 1 | 5 | 7 | 3 | 2 | 4 | 9 |
| 3 | 7 | 5 | 9 | 2 | 4 | 8 | 1 | 6 |

**உதயன்**
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

## காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டை, கூழாவடி
மானிப்பாய் பிரதான வீதியில் உள்ள
வலி.தென் மேற்கு உப அலுவலகம்
(ஆனைக்கோட்டை)
வடக்குப்பக்கமாக உள்ள 8 பரப்பு
4குழி காணி விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.

(50908) (12.3.6) **தொடர்பு: 072 946 9988**

## வீடு வாடகைக்குண்டு

மானிப்பாய் வீதியிலிருந்து ஆரம்பமாகும் வெள்ளாந்தெருவில் இருக்கும் மேல்மாடி 3அறைகள் மற்றும் சகல வசதிகளுடனும் வாடகைக்குண்டு. தொழில் புரியும் (கணவன், மனைவி)குடும்பம் விரும்பத்தக்கது.

(50937) (12.3.6) **தொடர்பு: 077 789 3125**

## தவறிவிட்டது

உரும்பிராய் கிழக்கு, செல்லப்பா வீதியைச் சேர்ந்த திருமதி அதிரூபா சிவராசா ஆகிய எனது (இலக்கம் 785942841X) தேசிய அடையாள அட்டை உரும்பிராயில் தவறவிடப்பட்டுவிட்டது. கண்டெடுத்தோர் மேற்குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைத்து உதவவும்.

(சி14853)(12.3.6)

# சமய சந்நிதிகளில்

சுழிபுரம், ஜூலை 2
தொல்புரம் முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த கொடியேற்ற உற்சவம் இன்று புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது. தொடர்ந்து பதினொரு தினங்கள் திருவிழா நடைபெறும். 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (க-28)

◆ ◆ ◆

யாழ்ப்பாணம், ஜூலை 2
யாழ்ப்பாணம் வண்ணை மேற்கு ஸ்ரீ விசுவேச விநாயகர் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நாளை வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
எதிர்வரும் 7 ஆம் திகதி தண்டிகைத் திருவிழாவும், 10ஆம் திகதி சப்பைரதமும், மறுநாள் வெள்ளிக்கிழமை இரதோற்சவமும், 12 ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளன. (க)

◆ ◆ ◆

சுழிபுரம், ஜூலை 2
சுழிபுரம் - பறாளை ஈஸ்வர விநாயகர் ஆலய தேர்த் திருவிழா நாளை வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் தீர்த்தத்திருவிழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை சுழிபுரம் திருவடி நிலை தீர்த்தக்கரையில் நடைபெறும். (க-28)

★ ★ ★

நல்லூர் மூத்த விநாயகர் தேவஸ்தானத்தின்வருடாந்தமஹோற்சவம் இடம்பெற்று வருகின்றது.
இன்று புதன் கிழமை சப்பரத்திருவிழாவும், நாளை வியாழக்கிழமை இரதோற்சவமும், நாளை மறு தினம் வெள்ளிக்கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (க)

# மகா கும்பாபிஷேகம்

சாவகச்சேரி, ஜூலை 2
சாவகச்சேரி, மட்டுவில் வடக்கு அத்தாய் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் மஹாகும்பாபிஷேகப் பெருவிழா நாளை மறுதினம் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மு.ப. 10.30 மணிவரை இடம்பெறவுள்ளது. பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு நாளை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை இடம்பெறவுள்ளது. பிரதம குருவான கிரியாதத்துவநிதி சிவஸ்ரீ சிவகுகநாதக் குருக்கள் கும்பாபிஷேகக் கிரியைகளை நடத்தி வைப்பார். (க)

◆ ◆ ◆

குடாநாட்டில் பிரசித்திபெற்ற சைவ ஆலயங்களில் ஒன்றான வரணி அருள்மிகு சிட்டிவேரம் (சுட்டிபுரம்) அம்மன் தேவஸ்தான சம்புரோஹண அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 09 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.37-9.57 வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது.
கர்ம ஆரம்பம் 04 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும். எண்ணெய்க் காப்புச் சாத்துதல் 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி பி.ப. 3 மணி வரை இடம்பெறும்.
கும்பாபிஷேக பிரதம குருவாக ஸ்ரீசத்தி கிரியா குருமணி சிவஸ்ரீ இ.குமாரசாமிக் குருக்கள் (ஆலய பிரதம குரு) கிரியைகளை நடத்துவார். சர்வ போதனாசிரியராக, செயலாளர் அகில இலங்கை சைவக் குருமார் அர்ச்சகர் சபை சிவஸ்ரீ சதா-மகாலிங்கசிவக்குருக்களும் நிகழ்வின் ஆசியுரையை நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிகர் ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் நிகழ்த்துவார். (122)

◆ ◆ ◆

வட்டு மேற்கு செந்தில் முருகையா திருக்கோயிலின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 9 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.38 முதல் மு.ப. 10.38 வரையான சுப வேளையில் நடைபெறவுள்ளது.
இந்த ஆலயத்தில் கந்தபுராணம் படிக்கப்பட்டு பயன்கூறப்பட்டு வருவது வருடந்தோறும் நடைபெற்றுவரும் சிறப்பு நிகழ்வாகும். (க-28)


## கணக்காளர் தேவை

மேற்படி பதவிக்கு ஆங்கிலம், தமிழில் தேர்ச்சியும் கணக்கியலில் திறமையும் அனுபவமும் உள்ளவர்கள் தேவைப்படுகின்றார்கள். கணினி அறிவு விரும்பத்தக்கதும் முக்கியமானதும் ஆகும். உங்கள் விண்ணப்பங்களை 15.07.2014இற்கு முன் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

ESS JEY Electrical
9,Stanley Road, Jaffna.
TP:021 222 2564

(50942) (12.3.6)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



161 பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், 8 B 1/1 பெரேரா வீதியை வதிவிடமாகவும் கொண்டிருந்த

## வைத்திலிங்கம் கணேசலிங்கம்

மலர்வு: 03.04.1938 ★ உதிர்வு: 26.06.2009
திதி: 02.07.2014

ஆண்டு ஐந்து கழிந்தாலும்
ஆறாது எம் துயரம்

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### மாரிமுத்து இராசையா

கோண்டாவில் கிழக்கு, மிஷன் பாடசாலை வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாரிமுத்து இராசையா 25.06.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றர்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பவானி சலூன்,
சம்பியன் லேன், கொக்குவில். (50945)(5.6.3)

தகவல்:
மகன்-இராசையா கந்தசாமி

யாழ்.வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்.மின்சாரநிலைய வீதியை வசிப்பிடமாகவும்,
லண்டன் Llfordஐ வதிவிடமாகவும் கொண்ட

## திருமதி மகாலஷ்மி சண்முகநாதன் அவர்களின்


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

எங்கள் குல தெய்வமே!
முப்பத்தொரு நாள்கள் நகர்ந்தனவா?
முற்பகலும் தெரியவில்லை எங்களுக்கு
பிற்பகலும் தெரியவில்லை
எங்கள் அம்மா முகம் மட்டுமே
தெரிகிறது எங்களுக்கு

பண்பின் உயர்விடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
அன்பிற்கு இலக்கணமாய்
ஆறுதலுக்கு நன்மருந்தாய்

எங்கள் வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து
எம்மை நல்வழிப்பாதையில் வழிநடத்திய
எங்கள் அன்புத் தெய்வமே!

எத்தனை நாள்கள் நகர்ந்தாலும்
உங்கள் நினைவு எமை விட்டு அகலாது
நாங்கள் உங்களை மறந்தால்தானே
நினைப்பதற்கு
நினைவே என்றும் நீங்கள் தானே



எங்கள் இதயங்களின் வலியையும்
இழப்பின் வேதனைகளையும்
சொல்லமுடியாது வார்த்தைகளில்

உங்கள் பிரிவால் நாங்கள்
பலவீனப்பட்டுவிட்டோம் என்பது உண்மை
ஆனாலும் அப்பாவைப் பிரிந்தும் எங்களை
ஆளாக்கிய உங்கள் மனவலிமை
இன்றும் எங்களை
நம்பிக்கைப்படுத்துகின்றது

அன்பான உங்கள் புன்சிரிப்பு
மலர்ந்த உங்களின் அன்புமுகம்
என்றும் எங்கள் வீட்டுப் பூந்தோட்டத்தில்
உலாவிக்கொண்டே இருக்கின்றது.

ஆயிரம் உறவுகள் எம் அருகில் இருந்தாலும்
எம் உள்ளக்கிடக்கையில் ஒளிரும்
எங்கள் அம்மாவின் திருமுகம்
எம்மைவிட்டு மறையுமா? மறைக்குமா?
மனதை விட்டு அகலுமா?

**என்றும் உங்கள் பிரிவால்
தவிக்கும் செல்வங்கள்**

எங்கள் அம்மாவின் துயரச் செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி ஊடாகவும், பலவழிகளிலும் எமக்கு ஆறுதல் சொல்லி உதவிகள் புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(50945)(12.5.6)

ரமேஸ் (பிரான்ஸ்) - +33614551411, உமேஸ் (பிரித்தானியா) - +447870219155,
சதீஸ் (பிரித்தானியா) - +447967994541, சுரேஸ் (பிரித்தானியா) - +447971214764,
சுதாகர் (பிரித்தானியா) - +447816649185

**குடும்பத்தினர்**

## பொதுச்சேவை ஆணைக்குழு நியமனம்

கொழும்பு, ஜூலை 2
பொதுச் சேவை ஆணைக் குழுவுக்கான ஒன்பது உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று நியமனம் வழங்கினார்.
முன்னாள் உயர்நீதிமன்ற நீதியரசர் சத்யா ஹெற்றிகே தலைமையிலான இந்த ஆணைக் குழு உறுப்பினர்கள் அடுத்த மூன்று வருடங்களுக்குப் பதவியில் இருப் பர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

# சர்வதேச விசாரணைகளில் வெளிப்படைத்தன்மை தேவை

## வலியுறுத்துகின்றது சீனா

கொழும்பு, ஜூலை 2
ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம், தமது உள்ளக முகாமைத்துவ நிதிகளின் பயன்பாடு குறித்து வெளிப்படைத் தன்மையை கடைப்பிடிக்க வேண்டும் என்று சீனா கோரிக்கை விடுத்துள்ளது.
இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணையை நடத்



தும் போதும் இந்த வெளிப்படைத்தன்மை கடைப்பிடிக்கப் பட வேண்டும் என்றும் சீனா மேலும் வலியுறுத்தியுள்ளது.
கொழும்பில் உள்ள சீன தூதரக அதிகாரி ஒருவர் இது தொடர்பில் கருத்துரைக்கையில், தமது சிரேஷ்ட இராஜதந்திரிகள் இதனை ஏற்கனவே ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளனர் என்று குறிப்பிட்டார். மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் ஆணைக் குழு இரட்டைக் கொள்கைகளை கடைப்பிடிக்கின்றது என்றும் அந்தச் சீன அதிகாரி குற்றம் சுமத்தியுள்ளார். (ற)

# விபத்தில் ஆளும்கட்சி உறுப்பினர் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 2
பேருவளை, ஹெட்டிமுல்ல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் பேருவளை நகர சபையின் ஆளும்கட்சி உறுப்பினர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. .
விபத்தின்போது மோட்டார் சைக்கிளில் சென்ற நகரசபை உறுப்பினர் மற்றும் அவரது மகன் படுகாயமடைந்த நிலையில் வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.
எனினும், 42 வயதான காமினி அல்விஸ் என்ற ஆளும் கட்சி நகரசபை உறுப்பினர் உயிரிழந்துள்ளார்.
விபத்தில் படுகாயமடைந்த நகரசபை உறுப்பினரின் மகன் நாகொடை வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.
விபத்துடன் தொடர்புடைய பஸ் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-சி)

# கிராண்ட்பாஸ் துப்பாக்கிச் சூடு; ஓட்டோ சிக்கியது

கொழும்பு, ஜூலை 2
கொழும்பு கிராண்ட்பாஸ் அன்ரூ தோட்டத்தில் இருவரை சுட்டுக் கொன்ற துப்பாக்கிதாரிகள் தப்பிச் செல்வதற்கு பயன்படுத்திய முச்சக்கரவண்டி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
களனியில் நிறுத்தப்பட்டிருந்த இந்த சந்தேகத்திற்கிடமான முச்சக்கரவண்டி நேற்றுக் காலை கண்டுபிடிக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
துப்பாக்கிதாரிகள் மோட்டார் சைக்கிள் ஒன்றிலேயே கிராண்ட்பாஸ் அன்ரூ தோட்டத்திற்கு சென்றிருந்தனர். துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதன் பின்னர் அவர்கள் மோட்டார் சைக்கிளை சம்பவ இடத்தில் கைவிட்டுத் தப்பிச்சென்றனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அன்ரூ தோட்டத்திற்கு வந்திருந்த முச்சக்கரவண்டியொன்றின் சாரதியை வெளியே தள்ளிவிட்டு துப்பாக்கிதாரிகள் முச்சக்கரவண்டியில் தப்பிச் சென்றிருந்தனர். தற்போது இதுகுறித்த விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ற)

# பிரிட்டன் பிரஜையிடம் மோசடி; ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 2
பிரிட்டன் பிரஜை ஒருவரின் பணத்தை முறைகேடு செய்த குற்றச்சாட்டின் பேரில் விடுதி உரிமையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த நபரை காலி நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தியபோது, ஜூலை 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.
தென்மாகாண ஹிக்கடுவ பகுதியைச் சேர்ந்த விடுதி உரிமையாளரே கைது செய்யப்பட்டுள்ளார். பிரிட்டன் பிரஜை யான ரிச்சட் கார்செல் என்பவர். தாம் 2004 ஆம் ஆண்டு குறித்த நபரின் விடுதியில் தங்கியிருந்த போது நட்பு ஏற்பட்டதாக தெரிவித்துள்ளார். ஹல்டுமுல்ல என்ற இடத்தில் 114 ஏக்கர் காணியை விவசாய நோக்கத்துக்காக கொள்வனவு செய்ததாக குறிப்பிட்டார். அதில் தம்மை சந்தேகநபர் 48 மில்லியன் ரூபாய்கள் வரையில் ஏமாற்றி விட்டார் என்று பிரித்தானியர் குற்றம்சாட்டியுள்ளார். (ற)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பொதுபல

விவகாரத்தை சர்வதேசமயப்படுத்தியுள்ளதை வரவேற்றுள்ள அவர், ஊடகவியலாளர் எதிர்நோக்கும் அச் சுறுத்தல்கள் குறித்து சர்வதேச அமைப்புகளுக்கு எடுத்துரைக்கவுள்ளேன் என்றும் தெரிவித்தார்.
ஊடக சுதந்திரத்துக்கான செயற்பாட்டாளர்கள் உட்பட 11 ஊடக அமைப்பு களின் பிரதிநிதிகளை நேற்றுச் சந்தித்து கலந்துரையாடியதன் பின் னர் இடம்பெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,
"அளுத்கம - பேருவளை சம்பவங்களின் பின்னர், ஊடகத் தணிக்கை என்ற வகையில் ஊடகங்களுக்கு அரசு கடிதமனுப்பியுள்ளது. அந்தக் கடிதத்துக்கமைய செயற்படாவிட்டால் வழக்குத் தொடர்வதாகவும், அதனால் அரசு தொடர்பான செய்திகளைப் பிரசுரிக்க வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.
அளுத்கம சம்பவத்தை ஊடகங்கள் பெரிதுபடுத்தவில்லை. அளுத்கம தேரர் ஒருவர் தாக்கப்பட்டதன் விளைவாகவே கலவரம் ஏற்பட்டது என்று அரசு எடுத்துக்காட்டியது. ஆனால், உண்மையில் அங்கு அவ்வாறு நடக்கவில்லை. தேரரைத் தாக்கியதால் கோபமடைந்த சிங்கள மக்கள், முஸ்லிம்களைத் தாக்கினர் எனக் காட்ட அரசு முயற்சித்தது. தர்கா நகருக்குச் சென்றது அந்தப் பிரதேசத்தைச் சார்ந்த மக்களோ, தேரரோ அல்ல. அரசின் ஆதரவுக் குழுக்கள் பொது பல சேனாவை அந்த இடத்திற்கு அனுப்பியுள்ளன.
அங்கு நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் பௌத்த சமயம் பற்றி பேசவில்லை. கெட்ட வார்த்தைகள்தான் பேசப்பட்டது. கூட்டம் முடிவடைந்ததன் பின்னரே மோதல் ஏற்பட்டது. அதுவும், தர்கா நகர் பகுதியிலுள்ள சிங்கள மக்கள் மோதலில் ஈடுபடவில்லை.
வெளிப் பிரதேசத்திலிருந்து வந்தவர்களே மோதலில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவத்தையடுத்து, 24 மணிநேரத்துக்கு ஊடகத் தணிக்கை செய்யப்பட்டது.
அரசால் இவ்வாறு விதிக்கப்படும் உத்தியோகப்பற்றற்ற ஊடகத் தணிக்கைகளால் நாட்டுக்குப் பெரும் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. இதனால் உண்மை வெளிப்படுத்தப்படுவதில்லை. சர்வதேச ரீதியில் சிங்கள, பௌத்தர்களின் நற்பெயருக்கு அபகீர்த்தி ஏற்பட்டது. உத்தியோகபற்றற்ற ஊடகத் தணிக்கைகள் நாட்டின் ஜனநாயகத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது.
இந்தத் தணிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்துப் போராட எதிர்க் கட்சிகளுக்கும், ஊடக அமைப்புகளுக்கும் பெரும் பொறுப் புள்ளது.
உள்ளூர் ஊடகவியலாளர் கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றது. இதைத் தடுப்பதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. ஊடகத் தணிக்கையால் அளுத்கம சம்பவம் தொடர்பில் இலங்கையின் சுயரூபம் சர்வதேசத்திற்கு வேறுவடிவில் சென்றுள்ளது.
பொது பல சேனாவைப் பாதுகாப்பதற்கு அரசு எப்போதும் செயற்படுகின்றது. அத்துடன் இலங்கையின் அடையாளத்தை இல்லாதுசெய்ய ஊடகத் தணிக்கையை மேற்கொள்கின்றது. இந்த ஊடக அடக்கு முறையை எதிர்த்து நாம் போராடுவோம். அத்துடன், உள்ளூர் ஊடகவியலாளர்களுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் குறித்து, சர்வதேச அமைப்புகளுக்கு விளக்கமளிப்போம்.
மேலும், இலங்கை தொடர் பில் அறிக்கை சமர்ப்பித் துள்ள ஐ.நா. மனித உரிமை கள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை, இலங்கையில் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் அச்சுறுத்தல்கள் தொடர்பில் குறிப்பிட்டு, இந்த விடயத்தை சர்வதேசத்தின் கவனத்துக்குக் கொண்டுசென்றுள்ளார். இது எமக்கு நன்மையான விடயமாகும்."- என்று தெரிவித்துள்ளார். (ற-சி)

### புதிய

தளபதியின் எதிர்கால நடவடிக்கைகளுக்காக மகா சங்கத்தினர் ஆசீர்வாதம் வழங்கினர். அதனைத் தொடர்ந்து சர்வ மத நிகழ்வுகள் இடம்பெற்றன.
பின்னர், முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஜயனாத் கொலம்பகேவிடம் இருந்து பொறுப்புக்களைப் பெற்றுக்கொண்ட புதிய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ஜயந்த பெரேரா, அவரிடம் இருந்து கடமை வாளையும் பெற்றுக்கொண்டார். (ற)

### வடமாகாண

ஜூலை மாதம் 15 ஆம் திகதி பதவியேற்றார். அவரது பதவிக் காலம் எதிர்வரும் 15 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது.
அதேவேளை கடந்த வருடம் முதன்முறையாக இடம்பெற்ற வடக்கு மாகாணசபைத் தேர்தலில் வெற்றியீட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, வடக்கு மாகாண ஆளுநரை மாற்றுமாறு கோரிக்கை விடுத்திருந்தது. அது தொடர்பில் வடக்கு மாகாண அமர்விலும் பிரேரணை நிறைவேற்றியிருந்தது.
இந்த ஆண்டு. ஜனவரி மாதம் 2 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையே சந்திப்பு ஒன்று நடைபெற்றது. அதில் வடக்கு மாகாண ஆளுநரை மாற்றுமாறு முதலமைச்சர் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார். எதிர்வரும் ஜூலை மாதத்துடன் அவரது பதவிக் காலம் முடிவடைகின்றது என்றும், அதன் அவர் பதவி நீடிப்புச் செய்யப்படமாட்டார் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முதலமைச்சரிடம் தெரிவித்திருந்தார்.
ஆனால் வழங்கப்பட்ட வாக்குறுதிக்கு மாறாக, தற்போது பதவியிலுள்ள ஆளுநரையே தொடர்ந்தும் நீடிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் என்று நம்பகரமாகத் தெரியவருகின்றது. (ற-5)

### பன்றி

சம்பவம் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு எதுவும் செய்யப்படவில்லை என்றும், பள்ளிவாசல் நிர்வாகம் இந்தச் சம்பவம் தொடர்பில் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளது என்றும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

### கூட்டமைப்பின்

"இனப்பிரச்சினையைத் தீர்க்க தெரிவுக்குழுவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அரசு அழைத்திருந்த போதிலும், கூட்டமைப்போ அதைத் தொடர்ந்தும் நிராகரித்தே வருகின்றது.
ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலையிலிருந்து பார்த்தால் அவர்களின் திட்டம் சரியானதே. ஏனெனில், அவர்கள் இனப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டுமென்ற நோக்கத்துடன் நடத்திய எந்தவொரு பேச்சும் சாதகமான முறையில் அமைந்ததில்லை.
அதனால், தெரிவுக்குழுவுக்கு வராது, அரசுடனேயே நேரடியாக பேச்சில் ஈடுபட்டு ஒரு முடிவொன்று எடுக்கவேண்டும் என அவர்கள் கூறியுள்ளமையை நாம் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.
அதேநேரத்தில், அரசு என்ற ரீதியில் அவர்களின் எண் ணம் பிழையானதே என்பதை யும் குறிப்பிட வேண்டும். காரணம், தெரிவுக்குழுவில் எவ்வாறான முடிவுகள் எட்டப்படினும், அவர்கள் அதில் கலந்து கொண்டு பிரச்சினைகள் குறித்து கலந்தாலோசிக்க வேண்டும்.
ஒருவேளை, அது தமிழருக்குச் சாதகமாக அமையவும் வாய்ப்புள்ளது. ஆகவே, அவர்கள் தெரிவுக் குழுவுக்கு சமுகமளிப்பதே சிறந்த செயற்பாடாகும்.
அத்தோடு, இனப் பிரச்சினைகள் குறித்து அரசுடன் நேரடியாகப் பேச்சு நடத்தி பிரச்சினைகளை ஒருபடி உயர்த்த முடியுமே தவிர, அதன்மூலம் ஒருபோதும் தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியாது என்பதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புரிந்து கொள்ள வேண்டும்.
ஜனாதிபதியுடன் நேரடியாகப் பேச முடியுமெனில், ஏன் தெரிவுக்குழுவிற்கு வரமுடியாது? ஆகவே, இவற்றைக் கவனத்திற்கொண்டு கூட்டமைப்பினர் தெரிவுக்குழுவிற்கு வரவேண்டும்." - என்று மேலும் தெரிவித்துள்ளார் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார. (ற-சி)

### நிபுணர்

றும் பாகிஸ்தான் உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் அஸ்மா ஜெஹாங்கீர் ஆகியோரே அந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.
இதற்கு வரவேற்புத் தெரிவித்து ஐரோப்பிய ஒன்றியம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,
"இலங்கையில் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பொறுப்புக் கூறல் முக்கியமானது. எனவே ஐ.நா விசாரணைக்கு இலங்கை முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று நாம் வலியுறுத்துகின்றோம். மேலும் சாட்சியாளர்கள் எதுவித பயமுமின்றி விசாரணைக் குழு முன்பாக சாட்சியமளிப் பதற்குரிய ஏற்பாடுகளையும் இலங்கை அரசு செய்து கொடுக்க வேண்டும்.
இலங்கையில் நிரந்தர சமாதானத்துக்கு நிலையான அரசியல் தீர்வு முக்கியமானது. அதனை இலங்கை இன்னமும் நடைமுறைப்படுத்தவில்லை. அத்துடன் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை யும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை"- என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ற-5)

### புலிகள்

றார்.
நியூஸிலாந்துக்கான தூதுவர் கிரகம் மோட்டன், மாலைதீவுக்கான தூதுவர் சகியா சறீர், ஜோர்தான் தூதுவர் ஹசன் மஹ்மூட் முகமட் அல் ஹவாமா, பூட்டான் தூதுவர் பேமா சோடன், பொஸ் னியாவுக் கான தூதுவர் சபிக் சுபாஸிக் ஆகியோரே நேற்று தமது பொறுப்புக்களை ஜனா திபதி முன்னிலையில் ஏற்றுக் கொண்டனர்.
நாடு முழுவதும் பயணம் செய்து உண்மையான நிலைவரத்தை அவர்களாகவே அறிந்துகொள்ள வேண்டும் என்றும் தூதுவர்களிடம் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.
30 ஆண்டுகள் தொடர்ந்த போரின் பின்னர் தற்பொழுது அமைதியும் உறுதிப்பாடும் நிலவுவதாக அவர் அங்கு தெரிவித்தார். (உ-ஐ)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை (வெள்ளையப்பா) மார்க்கண்டு



குமாரவளவு, வியாபாரிமூலை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை (வெள்ளையப்பா) மார்க்கண்டு நேற்று (01.07.2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை -தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை (பலாப்பத்தை) - கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், நடராசா ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கந்தையாவின் மைத்துனரும் சிவபாதம், ஈஸ்வரபாதம், கணேசபாதம், கமலாதேவி, இந்திரா, சந்திரா, ஜெயலக்சுமி (சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வியியற்றுறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் தந்தையும் விஜயலக்சுமி, ரூபி, ராசலட்சுமி, காலஞ்சென்ற சரவணமுத்து மற்றும் இராசரத்தினம், பாலகிருஸ்ணன், இராசநாயகம் (பணிப்பாளர், மாகாண கணக்காய்வு திணைக்களம், வடக்கு மாகாணம்) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2014) புதன்கிழமை மாலை 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

குமார வளவு,
வியாபாரிமூலை, பருத்தித்துறை.
தொ.பே.: 0779233168

# குருக்கள்மடம் புதைகுழியை தோண்டும் நடவடிக்கை அடுத்தமாதம் ஒத்திவைப்பு

மட்டக்களப்பு.ஜூலை 2

மட்டக்களப்பு. குருக்கள் மடம் புதைகுழி தோண்டும் நடவடிக்கை அடுத்த மாதம் 18 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது என்று களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

1990 ஆம் ஆண்டு காத்தான்குடியைச் சேர்ந்த சிலர் குருக்கள் மடம் பிரதேசத்தில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளதாக கூறப்படும் இடத்தை நேற்று செவ்வாய்க்கிழமை தோண்டுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.றியாழ் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

எனினும், நேற்று தோண்டுவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையாலும், தோண்டுவற்குரிய உபகரணங்கள் மற்றும் ஆள்கள் ஏற்பாடு செய்ய வேண்டியுள்ளதாலும் அதற்குக் கால அவகாசம் தருமாறு கோரி களுவாஞ்சிக்குடி பொலிஸார் நீதிமன்றத்தில் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தனர்.

அந்த அறிக்கையை ஆராய்ந்த நீதிபதி ஏ.எம்.றியாழ் அடுத்த மாதம் 18 ஆம் திகதி உரிய புதைகுழியைத் தோண்டுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதன்போது களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் புதைகுழியைத் தோண்டுமாறு முறைப்பாடு செய்த முறைப்பாட்டாளரான காத்தான்குடி நகரசபை உறுப்பினர் றவூப் ஏ.மஜீத் ஆகியோர் நீதிமன்றில் சமுகமளித்திருந்தனர்.

1990 ஆம் ஆண்டு காத்தான்குடியைச் சேர்ந்த 165 பேர் கல்முனையிலிருந்து காத்தான்குடி நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது மட்டக்களப்பு குருக்கள்மடம் பகுதியில் வைத்துக் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்டு குருக்கள் மடம் பகுதியில் புதைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


புதைகுழி உள்ளதாகக் கூறப்படும் இடம்.

அவர்களின் புதைகுழியைத் தோண்டி இஸ்லாமிய முறைப்படி நல்லடக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாறூக், காணாமற் போனோரை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு மனு மூலம் கோரிக்கை விடுத்திருந்தார்.


இந்த நிலையில் தனது உறவினர் ஒருவர் குருக்கள்மடம் பிரதேசத்தில் புதைக்கப்பட்டுள்ளதாகவும் அந்தப் புதைகுழியைத் தோண்டுமாறும் கூறி காத்தான்குடி நகரசபை உறுப்பினர் றவூப் ஏ மஜீத் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தார்.

அந்த முறைப்பாடு தொடர்பில் பொலிஸார், நீதிமன்றுக்கு அறிவித்ததையடுத்தே புதைகுழியை தோண்டுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மரண அறிவித்தல்

### பாலசிங்கம் ரவிச்சந்திரன்

(புங்குடுதீவு தனியார் சிற்றூர்தி சங்க நடத்துநர்)



புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 1ஆம் வட்டாரத்தை வதிவிடமாகவும் கொண்ட பாலசிங்கம் ரவிச்சந்திரன் நேற்று முன்தினம் (30.06.2014) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் அங்கயற்கண்ணி தம்பதியரின் அன்பு மருமகனும், சுகிர்தமலரின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும், கஜந்தன் (பிரான்ஸ்), கஜந்தினி (பிரான்ஸ்), துளசி (பிரான்ஸ்), றஜிதா (பிரான்ஸ்), திசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வசீகரனின் (பிரான்ஸ்) மாமனும், செல்வன் (லண்டன்), செந்தூரன் (கனடா), இதயமலர் ஆகியோரின் மைத்துனரும், நளாயினி (லண்டன்), சண்முக வடிவேல் சுபாசினி (கனடா) ஆகியோரின் சகலனும், சங்கரி (லண் டன்), சாகரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், கபிலன் (பிரான்ஸ்), சசிதன் (பிரான்ஸ்), சுபாசினி, சரிதா, கீர்த்தனா ஆகியோரின் பெரிய தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2014) புதன்கிழமை அவரது பாமியார் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 3 மணிக்கு மணற்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முதலாம் வட்டாரம்,
புங்குடுதீவு.

(49458)(10)

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமகன்.

## ஏறாவூரில் 141 டெங்கு நோயாளர்கள்

ஏறாவூர்,ஜூலை 2

ஏறாவூரில் கடந்த ஜனவரியிலிருந்து ஜூன் மாதம் வரை அடையாளம் காணப்பட்ட டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 141 ஆக அதிகரித்துள்ளது என்று சிரேஷ்ட மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எம்.எச்.எம்.பழீல் தெரிவித்தார்.

கட்டம், கட்டமாக டெங்கு ஒழிப்பை மேற்கொள்ளும் கூட்டிணைந்த துப்புரவாக்கும் பணியில் தாம் ஈடுபட்டிருப்பதாக ஏறாவூர் சுகாதார வைத்திய அதிகாரி கலையரசி துரைராஜசிங்கம் தெரிவித்தார். (ச)

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 567 11 11

## உளங்கனிந்து உவகையுடன் வாழ்த்துகின்றோம்






யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபரும், தற்போதைய சாவகச்சேரிக் கோட்டக் கல்வி அதிகாரியுமான

திரு. கு. சிவானந்தம்
(BA, Dip.in. Ed, SLPS-1, SLEAS-III)

அவர்கள் கல்வி நிர்வாக சேவையின் தரம் III இல் நியமிக்கப்பட்டதையிட்டு பேருவகை அடைகின்றோம். அவரது சேவை மேலும் சிறப்புடன் அமைய எல்லாம் வல்ல வேம்படி விநாயகனை வேண்டுவதோடு, உளங்கனிந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulation

பாடசாலை சமூகம்
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

(43675)(10)

## மாவை கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் பொதுக்கூட்டம்

காலம் : 13.07.2014 நேரம் : முற்பகல் 10 மணி
இடம் : கொல்லங்கலட்டி பிள்ளையார் கோவில் முன்றல்
தலைவர் : திரு. வ. இரத்தினம் அவர்கள் (புனருத்தாரண சபை)

இந் நிகழ்வில் ஆலய நிர்வாகம் பூஜை பற்றிய தீர்மானங்களும் ஆலோசனைகளும், புனருத்தாரண நிர்வாக சபை தெரிவும் இடம் பெறும். அடியார்கள் அனைவரும் வருகை தந்து தங்கள் ஆலோசனைகளை வழங்கி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செயலாளர்
திருமதி அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன்
(புனருத்தாரண சபை)

(49454)(10)

## தேவை

* சமையல்காரர் * உதவியாளர்

Golden Star Restaurant
66/2, Point Pedro Road, Jaffna.
(ஆரியகுளம் சந்திக்கு அருகாமையில்)
தொடர்பு T.P: 077 8890 888

(49456) (10)

## உடன் தேவை

நல்லூர் கோயில் வீதி/செட்டித்தெரு/பருத்தித்துறை வீதி/ கட்டப்பிராய்/ ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி / GPS வீதி, கல்வியங்காடு/ கந்தர்மடம் ஆகிய இடங்களில் வீடு வாடகைக்கும், வீட்டுடன் காணி, வெற்றுக் காணி விலைக்கும் தேவை.


077 026 7619

(49455) (10)

## உங்கள் மின் கட்டணத்தை Zero (0) ஆக்க வேண்டுமா?

* நெற் மீற்றர் தொழில்நுட்பத்தில்

உங்கள் மின்சாரப் பாவனையை எமக்கு அறிவியுங்கள்.




25வருட உத்தரவாதம்

உடன் பதிவு செய்யுங்கள்

| எதிர்பார்க்கும் அலகு (மாதாந்த பாவனை) | சூரிய மின்கலத்தின் எண்ணிக்கை | Invertor கொள்ளளவு |
|---|---|---|
| 123 - 149 | 04 | 1.1 |
| 168 - 203 | 06 | 1.5 |
| 224 - 270 | 08 | 2.0 |
| 280 - 338 | 10 | 2.5 |
| 336 - 405 | 12 | 3.0 |
| மற்றும் 4,5,6,7,8,10 - 100 KW வரையான தீர்வு | | |

★ உங்கள் வீட்டிற்கு "சூரிய மின்கலம்" பூட்டித் தருகின்றோம்
★ முதல் 50 வாடிக்கையாளருக்கு 25% விலைக் கழிவுடன்

புதிதாக தொழில் செய்ய ஆர்வமுள்ளவர்கள் எம்முடன் இணைந்து செயற்படலாம்.

வங்கிக்கடன் வசதி செய்து கொடுக்கப்படும்

மேலதிக தொடர்புகளுக்கு:

MICRO PC SYSTEMS
Head Office
No.115C,WA Silva Mw , Colombo - 00600, Sri Lanka.
Tel:077 307 6409, 0114 000 686
E-mail: mail@micropcsystems.com

(10.6.3)

Branches:- Jaffna, Nelliyady, Kilinochchi, Vavuniya, Trincomale.

**தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா**
**கொழும்பு பல்கலைக்கழகம்**
க.பொ.த சா/த சித்தியடைந்தோர் யாவரும் விண்ணப்பிக்கமுடியும்.
உ/த 2014 தோற்றுவோரும் விண்ணப்பிக்கலாம். வேலை தேடுவோர்
பதவி உயர்வுக்கு விணைப்பிப்போர் அனைவர்க்கும் ஏற்றது.
விரிவுரைகள் வார, வாரஇறுதி ஞாயிறு மட்டும் என் மூன்று
பிரிவுகளாக நடைபெறும். புலமைப்பரிசில் மேலதிக விபரங்களிற்கு
Type DIT<Name> & send to 772395895
**MCS** யாழ் பல்கலைக்கழகம் அருகில்
Winner of Best Performances Award

**கடைகள் வாடகைக்கு**
இல.31, வளாக வீதி, திருநெல்வேலி மேற்கில் புதிதாக அமைக்கப்பட்ட களஞ்சியங்களாக பயன்படுத்தக்கூடிய மூன்று கடைகள் வாடகைக்குண்டு. இவை தொழில்நுட்பக்கல்லூரி, யாழ்.பல்கலைக் கழகம், பலாலிவீதி என்பவற்றுக்கு மத்தியில் அமைந்துள்ளது.
தொடர்பு: 077 586 8591/ 077 603 7485/ 077 356 8725 ananths43@hotmail.com
(50838) (12.3.9)

**NALIN Information Technologies(Pvt)Ltd.**
**NALIN INFORMATION TECHNOLOGIES (PVT) LTD.**
**Lap Tops**
hp Dual core 15-d016Tu Rs.49,500/=
D.Core 2020m(2.4GHz) / 2Gb Ram / 500Gb HDD/ 15.6" LED/ DVD Rw/Dos.
hp Pavilion 15-n236Tu Rs.64,500/=
i3-4010u 4th Gen/ 4Gb Ram / 500Gb HDD/ 15.6" LED/ DVD Rw/Dos.
Dell Inspirion Rs.61,500/=
i3 / 2Gb Ram / 500Gb HDD/ 14" LED/ DVD Rw/Dos.
1year Parts Warranty
2 years Service Warranty
**hp Branded PC**
3 years warranty Rs.69,500/=
hp Prodesk 400G1 M
i3-4130 4th Gen/2Gb Ram/500Gb HDD/ 18.5" Hp LED/ hp Keyboard&Mouse .
**hp Original Toners**
85A - Rs.7,650/=
35A - Rs.7,450/=
12A - Rs.8,600/=
"Without TAX"
Printer hp Laserjet 1102 - Rs.12,250/=
Printer hp Deskjet 1000 - Rs.3,950/=
Printer hp All in one 1515 - Rs.10,100/=
*Condition Apply
hp Geniune Warranty hp Authorised Business Partner
No 195/4, Parameswara Junction,Palaly Road, Jaffna.
021 222 1121 077 766 7975 021 222 4994 facebook/nalin_it
Branch; No. 116 G, K.K.S Road, Chunnakam. 021 224 2222 077 714 0431


# மடு அன்னை ஆலயத்தில் ஜூலை மாத திருவிழா



மன்னார், ஜூலை 2
மன்னார் மடு அன் னையின் ஜூலை மாதத் திருவிழா இன்று புதன் கிழமை கொண்டாடப் படவுள்ளது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை தலைமையில் சிலாபம் மறை மாவட்ட ஆயர் வலன்ஸ் மென்டிஸ், மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசேப்பு ஆகியோர் இணைந்து கூட்டுத் திருப்பலியாக இன்று காலை 6.15 மணிக்கு மடுத் திருநாள் திருப்பலியை ஒப்புக்கொடுப்பார்கள்.

தற்போது மடுத்திருத்தலத்துக்கு நாட்டின் சகல பாகங்களில் இருந்தும் சுமார் 2 இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் வருகை தந்துள்ளனர்.

பக்தர்களின் நலன் கருதி விசேட போக்குவரத்துச் சேவை கள், பாதுகாப்பு, சுகாதாரம், குடிதண்ணீர் வசதி போன்றவை மேற்கொள்ளப் பட்டுள்ளதாக மடுத்திருத்தல பரிபாலகர் அருட்தந்தை எஸ்.எமிலியான்ஸ்பிள்ளை தெரிவித்தார்.

இதேவேளை அநுராதபுரம் மற்றும் கொழும்பில் இருந்து மடுத்திருத்தலத்துக்கு விசே[illegible] புகையிரத சேவைகளும் இடம்பெற்று வ[illegible]கின்றன.

மடுத் திருத்தலத்தின் ஆடி மாத திருவிழா கடந்த மாதம் 23ஆம் திகதிகொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நவநாள் திருப் பலிகள் இடம்பெற்று வந்தது.நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 6.15 மணிக்கு நற் கருணை ஆராதனை நடைபெற்றது. இன்று புதன்கிழமை காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (க-56)

## விலங்குகளால் கடிபடுவோர் அதிகரிப்பு

விலங்குகளால் கடியுண்டு சாவகச்சேரி மருத்துவமனையில் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்ற வருவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அண்மையில் நிலவும் வெப்பம் காரணமாக நாய் மற்றும் பூனைகளால் கடிபட்டு சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள் ளதாக மருத்துவமனைப் புள்ளிவிவரங்க[illegible] மூலம் தெரியவருகிறது.

கடந்த மே,ஜூன் ஆகிய மாதங் களில் தலா 100 பேர் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றிக் கொண்டுள்ளதாகவும் கடந்த ஆறுமாத காலத்தில் 842 பேர் வி ல ங் கு க ளா ல் கடியுண்ட நிலையில், மருத்துவமனை யில் சிகிச்சை பெற்றுள் ளதாகத் தெரிவிக் கப்படுகிறது. (வ-9)


ECONOMICS HALL 364 Stanly Rd.Jaffna
GAQ / BA Part-I ENGLISH
R. MAHESWARAN BA. (Dip-in-Eng)
Sat/Sun- 8-9
BA- 2014 /15 பேராதனை
தமிழ்
K. தர்மராஜா
Every Friday 8- 10


## மரண அறிவித்தல்

**செல்வி மாகிறீத்தா வேதநாயகம்** (B.A, M.A,PGDE)
(ஆசிரியை கொழும்பு இந்துக் கல்லூரி,பம்பலப்பிட்டி. முன்னாள் ஆசிரியை, விவேகானந்தா கல்லூரி, கொழும்பு)



குருநகர் யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மாகிறீத்தா வேதநாயகம் கடந்த (28.06.2014) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசை வேதநாயகம்-அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், லூத்துநாயகி (தங்கராணி-இந்தியா), மரியநாயகம் (இராசகுமார்/ றாஜா-சுவிஸ்), ஜெயராயேஸ்வரி (சின்னராணி- இந்தியா), றோஸ்மேரி (திரவியராணி-சுவிஸ்), ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சிங்கராசா மற்றும் யேசுதாசன் (இந்தியா), செல்வக்குமார் (சுவிஸ்), ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.07.2014) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

24/8,மத்திய கிழக்கு வீதி,
குருநகர்,யாழ்ப்பாணம்.
தகவல்: குடும்பத்தினர்.
தொலைபேசி:-0774527280, 0776233279, 0766610481.

## மரண அறிவித்தல்

**சின்னத்துரை துரைசிங்கம்**



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் தாவடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை துரைசிங்கம் நேற்று (01.07.2014) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - பாக்கியம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ் சென்றவர்களான தம்பித்துரை- இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும்,காலஞ்சென்ற பரமேஸ்வரியின் ஆருயிர் கணவனும், காலஞ்சென்ற தயாநிதி (ஜேர்மனி) மற்றும் கமலராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,சந்திரகுமார் (ஜேர்மனி), இந்திரகலா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கீர்த்தனா (ஜேர்மனி), துவாரகா (ஜேர்மனி), தாரணா (ஜேர்மனி),கிஷானா,தஷ்வன் ஆகியோரின் பேரனும், தானுஜன்,பானுஜன் ஆகியோரின் பூட்டனும், காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் ஜெகஜோதிமலர், இரத்தினசிங்கம் (ஜேர்மனி), சிவராசா (லண்டன்),சண்முகலிங்கம், அன்னலிங்கம் (லண்டன்), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் ஜெயலட்சுமி (நோர்வே) ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2014) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்த மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேம்படி முருகமூர்த்தி கோயிலடி
தாவடி தெற்கு,கொக்குவில்
தகவல்: து. கமலராஜன் (மகன்)

## மரண அறிவித்தல்

**கணபதிப்பிள்ளை அருணாசலம்**
(சிறாப்பர்- ஓய்வு பெற்ற மாநகர சபை காசாளர், யாழ். - நீர்கொழும்பு)



நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி மாசிவன் சந்தி,நீர்கொழும்பு கடற்கரை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை அருணாசலம் (சிறாப்பர்- ஓய்வு பெற்ற மாநகர சபை காசாளர், யாழ்.- நீர்கொழும்பு) கடந்த (28.06.2014) சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமார் கணபதிப்பிள்ளை - அயிராமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் பாசமிகு அன்புக் கணவரும் அருந்ததி, அம்பிகை,ஆனந்தராஜா, அனுசியா, அகிலேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும் அரியராஜா, சூரியகுமார், குமுதினி, ராஜயோகன், சிவானந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிரா, தனுஷன், கிரிசன், சங்கர், சந்தியா, சரண்யா, அக்ஷயா,அஞ்சனா, அபர்ணியா, செல்வி, அஸ்வினி, ஆரணி,சரண் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு, நாகலிங்கம், சிவநாகம்மா மற்றும் சரவணமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அருளம்பலம் மற்றும் இராமநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.07.2014) புதன்கிழமை மாசிவன் சந்தி நீர்வேலியில் அவரது இல்லத்தில் காலை 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
077 3547046
075 2274208
தகவல்: பிள்ளைகள், உறவினர்கள்


**SLAS , SLACS வகுப்புக்கள் நடைபெறுகின்றன**
சனி, ஞாயிற்றுக்கிழமைகளில்
12 மணி முதல் 5 மணி வரை
துறைசார் விரிவுரையாளர்களின்
வழிகாட்டலில்
புதிய உயர் கல்லூரி
T.P. 021 222 8148 ஆரியகுளம் சந்தி,யாழ்ப்பாணம்.

**FLC FRENCH LANGUAGE CENTRE**
FRENCH CLASSES - பிரெஞ்சு வகுப்புகள்..
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diplomas in French..
818 க்கும் மேற்பட்ட மாணவர்கள் French கற்றுச் சென்றுள்ளனர்..
ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)
கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100 % சித்தியடைந்துள்ளனர்......
ஆரம்பம்:05.07.14 Sat 10.30am. No. 40, Palaly Road, Jaffna.(ஆரியகுளம்)
ஆரம்பம்: 04.07 Fri 3.30pm. No.181, 1st Floor, Main Street, நெல்லியடி
021 320 2973
0779 789 456

**- ALLIANCE FRANÇAISE DE JAFFNA -**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna
கற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 1883 PARIS இல் நிறுவப்பட்டது, யாழில் 1976 முதல். 136+ நாடுகளில் 1040+ கிளைகள், உயர் தகுதியுடைய ஆசிரியர்கள், STANDARD PRONUNCIATION, அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS. பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள், AUDIO-VISUAL AIDS, பிரமாண்டமான நூலகம்
பிரான்ஸ் செல்வோர் அனுமதிகளுக்கு முந்துங்கள்
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்
கச்சேரி → ஆலயம் ✝ → AF அல்லது ஆரியகுளம் → றக்கா றோட் → AF

**German Institute**
German Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் Germany யிலிருந்து வந்த ஆசிரியரால் நடைபெறுகிறது. Certificate Goethe Institute ரினால் வழங்கப்படுகிறது.
10, Palaly Road, Jaffna.
Mrs. Kajenthini
T.P 0771604823

மாதம் ஒரு லட்சத்துக்கு மேல் வருமானம் ஈட்டக் கூடிய
**பயிற்சி நெறி**
**HND in PHARMACY**
வயதெல்லை கிடையாது.
பகுதிநேரமாகப் படிக்கலாம்.
வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பு.
LAVA HOSPITALS (48910) (7.6.3)
120, Temple Road, Jaffna.
(Tel : 077 316 4617/021 222 4333)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

02 JUL 2014

எல்லா மனிதர்களையும் நம்பிவிடுவது ஆபத்து: ஒருவரையும் நம்பாமல் இருப்பது பேராபத்து.
- ஆபிரகாம் லிங்கன்

# புதன் பொய்கை

A

உதயன் | ஜூலை 02 2014 | புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு



# வாழ்க்கையில் முன்னேற சவால்களை முறியடிப்போம்

மனிதர்களின் வாழ்க்கை சவால்கள் நிறைந்தது. சவால்கள் இல்லாத வாழ்க்கை உப்பில்லாத உணவுக்குச் சமனானது என்று கூறுவோரும் இல்லாமலில்லை. இவர்கள் சவால்களை எதிர்கொள்ளும் மனவுறுதி படைத்தவர்கள். இன்பம், துன்பம், வேதனை, சோதனை, சவால்கள் ஆகியவற்றின் கூட்டுக் கலவையால் ஆனதே எமது வாழ்க்கை.

இன்று வாழ்க்கையின் உச்சத்தைத் தொட்டு நிற்பவர்கள் ஒரே நாளில் அந்த நிலைக்கு உயர்ந்துவிடவில்லை. சவால்களுக்கு மத்தியில் எதிர் நீச்சலடித்து அவர்களால் இந்த உயர் நிலையை எட்ட முடிந்துள்ளது. வர்த்தகம், கலை, பொதுவாழ்வு ஆகிய துறைகளில் மட்டுமல்ல அரசியல் துறையிலும் இவ்வாறு முன்னேறிய பலரைக் காண முடிகின்றது. உலகின் தலையாய நாடாகக் கருதப்படும் அமெரிக்காவின் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் பராக் ஒபாமா அந்த நாட்டின் முதலாவது கறுப்பினத்தைச் சேர்ந்த ஜனாதிபதி என்ற பெருமையைப் பெறுகின்றார். கென்யாவில் பிறந்த கறுப்பினத் தந்தைக்கும், அமெரிக்காவின் வெள்ளையினத் தாய்க்கும் பிறந்த ஒபாமா ஒரு கறுப்பின்த்தவர் என்ற வரையறைக்குள் வைத்தே கணிக்கப்படுகின்றார். அரசியலில் படிப்படியாக முன்னேறிய இவர், ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பான வேட்பாளராகத் தெரிவு செய்யப்படுவதற்குக் கடுமையான சவால்களை எதிர்கொண்டார். இவருடன் போட்டியிட்டவர் ஒரு சாதாரண பெண்மணியல்ல. முன்னாள் ஜனாதிபதியின் மனைவி, புகழ்பெற்ற அரசியல்வாதி என்ற நற்பெயர்களைத் தன்னகத்தே கொண்ட ஹிலாரி கிளின்ரனே அந்தப் பெண்மணியாவார். ஆனால் ஒரு காலத்தில் கறுப்பின மக்களை அடிமைகளாகவும், மிருகங்களை விடவும் கேவலமாக நடத்திய அந்த அமெரிக்க நாட்டின் புகழ்வாய்ந்த ஒரு வெள்ளை இனப் பெண்மணியைத் தோற்கடித்து வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டுப் பின்னர் நடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் வெற்றி பெற்றுச் சாதனை படைத்தார் ஒபாமா. அவரது வாழ்க்கைச் சரித்திரத்தைப் புரட்டிப் பார்க்கும் போது சிறு வயது தொடக்கம் அவர் எதிர்கொண்ட சவால்கள் எமக்குத் தெரியவரும்.

இதைப்போன்று உலகின் மிகப்பெரிய ஜனநாயகநாடான இந்திய நாட்டின் புதிய பிரதம மந்திரியாகப் பதவி யேற்றுள்ள நரேந்திரமோடியும் வாழ்க்கையின் அடிமட்டத்திலிருந்து இந்த உயர் நிலையை அடைந்துள்ளார். சாதிக்கத் துடிப்பவர்களுக்குச் சவால்கள் ஒரு தடையல்ல என்பது இந்த இருவரின் வாழ்க்கை மூலமாகவும் எமக்குத் தெளிவாகத் தெரிகின்றது.

வாழ்க்கை என்பது எப்போதுமே தென்றல் வீசிக் கொண்டிருக்கும் ஒரு பூந்தோட்டம் அல்ல. கற்களும் முட்களும் நிறைந்த கடினமான பகுதிகளும் அங்கு காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் துணிச்சலுடனும், பொறுமையுடனும் தாண்டிச் செல்லும்போதுதான் நாம் எதிர்பார்க்கும் தென்றல் வீசும் பூந்தோட்டத்தை அடைந்துவிடமுடியும்.

எம்மில் பலரும் தோல்வியை எதிர்கொள்வதற்கான மனோதிடத்தைக் கொண்டிருப்பதில்லை. ஒருமுறை தோல்வியைச் சந்தித்துவிட்டாலே போதும் சோர்ந்து துவண்டுபோய் ஒரு மூலையில் அமர்ந்து விடுவார்கள். அந்த நிலையிலிருந்து விடுபடுவதற்கு அவர்களால் முடிவதில்லை. அதற்கான முயற்சிகளையும் இவர்கள் மேற்கொள்வதில்லை. தோல்விதான் வெற்றியின் முதற்படி என்பதை ஏனோ இவர்கள் புரிந்து கொள்வதில்லை.

எதிரி நாட்டு மன்னனிடம் தனது நாட்டை இழந்த மன்னனொருவன் அதனை மீட்பதற்கு ஏழு தடவைகள் போர் தொடுக்கின்றான். ஆனால் அந்த ஏழு தடவைகளும் தோல்வியே அவனுக்குக் கிடைக்கின்றது. எதிரி நாட்டுப் படைகள் அவனைப் பிடிப்பதற்கு சகல இடங்களிலும் சல்லடை போட்டுத் தேடிக் கொண்டிருக்கின்றன. அவனைச் சார்ந்த போர் வீரர்களில் போரில் இறந்தவர்கள் போக எஞ்சியவர்கள் வெவ்வேறு இடங்களில் சிதறிக் காணப்படுகின்றனர். எதிரிகளுக்கு அஞ்சிய அந்த மன்னன் மலைக்குகை ஒன்றில் ஒளிந்து வாழ்கின்றான். ஒருநாள் அவன் தற்செயலாகப் பார்த்த போது சிலந்திப் பூச்சியொன்று வலையொன்றைப் பின்னும் முயற்சியில் ஈடுபட்டிருப்பது தெரிகின்றது. அந்தச் சிலந்தி குகையின் ஒரு மூலையிலிருந்து மறுமுனையில் வலையைப் பின்னும் பொருட்டுப் பாய்ந்த போது பல தடவைகள் தோல்வி கிடைக்கின்றது. ஆனால் தனது முயற்சியில் சிறிதும் சளைக்காத அந்தச் சிறிய பூச்சி இறுதியில் தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்கின்றது. இதனைக் கண்டதும் சோர்ந்துபோய்க் கிடந்த அந்த மன்னன் துள்ளி எழுந்தான். அவனது உடலில் சக்தியொன்று உருவானதை அவன் கண்டு கொண்டான்.

உடனடியாகவே செயலில் இறங்கிய அவன் தனது படை வீரர்களையெல்லாம் ஒன்று சேர்த்து தனது நாட்டை ஆக்கிரமித்து வைத்திருந்த எதிரி மீது படையெடுத்துக் கடுமையாகப் போரிட்டான். அதில் வெற்றியும் பெற்று தனது நாட்டை மீட்டுக் கொண்டான். துணிவும், வெல்ல வேண்டுமென்ற வைராக்கியமும் இருந்துவிட்டால் எம்மால் எந்தச் சவாலையும் முறியடித்து வெற்றி பெற முடியும்.

இலங்கையில் இடம்பெற்ற போரினால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் தமிழ் மக்கள்தான். அரசினால் மேற்கொள்ளப்பட்ட பொருளாதாரத் தடை காரணமாக அவர்கள் எதிர்கொண்ட அவலங்கள் மிகக் கொடுமையானவை. உணவுத் தட்டுப்பாடு மட்டுமல்லாது தமது அத்தியாவசிய தேவைகளைச் சமாளிப்பதிலும் அவர்கள் இன்னல்களை எதிர்கொண்டனர். பயங்கரமான போர்ச் சூழல் மற்றும் கற்றலுக்கான வசதிகள் இல்லாமை ஆகியவற்றுக்கு மத்தியிலும் மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்ந்தனர். மண்ணெண்ணெயில் எரியும் விளக்குகளின் வெளிச்சத்துக்குக்கூட வழியில்லாத நிலையில் அவர்கள் சிரமங்களை எதிர்கொண்டனர். ஆனால் கல்வியில் அவர்கள் சோடை போகவில்லை. இந்த மனப் பக்குவம் தான் தமிழர்களின் கல்வியை இன்னமும் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றது.


எமது வாழ்க்கை எப்போதுமே ஒரே மாதிரியாக இருப்பதில்லை. அதில் காலத்துக்குக் காலம் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதனால் நாமும் மாற்றங்களை எதிர்கொள்கின்றோம்.

ஆண்டவன் எமக்கு ஆறாவது அறிவான பகுத்தறிவை வழங்கியுள்ளான். ஆனால் ஏனைய உயிர்களிடம் அது இல்லை. மனிதன் தனது அறிவைப் பயன்படுத்தித் தனது வசதிகளைப் பெருக்கிக் கொள்கின்றான். வேறு கிரகங்களில் வாழப்போகும் நாள்களை அவன் எண்ணிக் கொண்டிருக்கின்றான். ஆனால் கோடிக் கணக்கான ஆண்டுகள் கடந்தாலும் மிருகங்கள், பறவைகள் உட்பட ஏனைய உயிரினங்கள் தமது வாழ்க்கையில் மாறுதல்களை ஏற்படுத்தும் சாத்தியங்கள் இல்லை. அதற்கான ஆற்றலும் அவைகளிடத்தில் இல்லை. ஆனால் மனிதர்களைப் போன்று சவால்களைப் புறமொதுக்கும் வழக்கம் அவற்றிடம் இல்லை. உயிர் பிரிந்தாலும் தமது உரிமைகளை நிலைநாட்டுவதற்காக இவை இயன்றளவு போராடுகின்றன. மனிதர்களான நாம் எத்தகைய சவால்கள் எமக்கு எதிராகக் கிளம்பினாலும் அவற்றைத் துச்சமென மதித்து எதிர்கொள்ளத் தயாராக வேண்டும். எமது வாழ்க்கையை நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் மனவுறுதியும், செயற்பட வேண்டுமென்ற வேட்கையும் எம்முள் உருவாக வேண்டும். சவால்களை நாம் துரத்திவிட வேண்டுமேயொழிய அவை எம்மைத் துரத்துவதற்கு இடமளிக்கவே கூடாது. அப்போதுதான் எமது வாழ்க்கை இன்பமாக அமையும்.



■ ராஜராஜன்

# கணினியை நெடுநேரம் கையாள்வதால் வயதான தோற்றம்



தகவல் தொழில்நுட்பத்துறையின் வளர்ச்சியால் இன்று அனைத்துத் துறைகளிலுமே கணினியின் பயன்பாடு இன்றியமையாததாகி விட்டது.

அதில் தகவல் தொழில்நுட்பத் துறை போன்ற குறிப்பிட்ட சில துறைகளில் பணியாற்றுபவர்கள், அதிக நேரம் கணினிக்கு முன்னால் அமர்ந்து வேலை பார்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால் அவர்களை விரைவில் முதுமை ஆட்கொள்வதாக ஆய்வு முடிவு ஒன்று எச்சரிக்கின்றது. கணினியில் தொடர்ந்து பணி புரிவதால் பெண்களுக்கு முதுமை சீக்கிரம் ஏற்படுவதாகவும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரிட்டனைச் சேர்ந்த அழகியல் அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் மைக்கேல் ப்ரகர், கணினியில் பணியாற்றும் பெண்களிடம் ஆய்வொன்றை மேற்கொண்டார்.


அப்போது கணினியின் முன்னால் ஒருவர் நீண்ட நேரம் அமர்ந்திருந்தால் அவரது கீழ்த் தாடை தொங்கி போய்விடும். அதற்குக் காரணம் ஒரே நிலையில் நீண்ட நேரம் அமர்ந்திருப்பதுதான் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பெண்கள் நீண்ட நேரம் கணினியின் முன்னால் அமர்ந்து மிக அதிகமாகக் கவனம் செலுத்தி வேலை செய்வதால் நெற்றியில் விரைவிலேயே சுருக்கம் மற்றும் கண்களைச் சுற்றித் தோல் சுருக்கம் போன்றவை ஏற்படுகின்றன.

எனவே கணினியின் முன்னால் அமர்ந்து வேலை செய்தாலும் சிறிது நேரம் எழுந்து நடப்பது, மனதுக்குப் பிடித்தவருடன் உரையாடுவது போன்றவற்றால் மனதில் ஏற்படும் அழுத்தத்தைத் தவிர்க்கலாம் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# உடல் உறுப்புக்களை பாதுகாக்க புதிய தொழில்நுட்பம்

> தற்போது உள்ள தொழில்நுட்பத்தில் அதிக பட்சமாக 24 மணித்தியாலங்கள்வரை மட்டுமே உடல் உறுப்புக்களை பழுதடையாது பாதுகாக்க முடியும்.



உடல் உறுப்புக்களை மாற்றம் செய்யும் போது அவை பழுதடையாமல் இருப்பதற்கு புதிய தொழில்நுட்பம் ஒன்றை அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் அறிமுகம் செய்துள்ளனர்.

இந்தத் தொழில்நுட்பம் உடல் உறுப்புக்களை குளிரூட்டிய நிலையில் வைத்திருப்பதுடன், ஊட்டச்சத்துக்களையும், ஒக்ஸிசன் வாயுவையும் குருதிக் கலன்களூடாகச் செலுத்தும் திறனைக் கொண்டுள்ளது.

இந்தத் தொழில்நுட்பத்தின் ஊடாக எலியின் ஈரலைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்போது அது 3 நாள்கள் வரை பழுதடையமால் இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தற்போது உள்ள தொழில்நுட்பத்தில் அதிக பட்சமாக 24 மணித்தியாலங்கள்வரை மட்டுமே உடல் உறுப்புக்களை பழுதடையாது பாதுகாக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# உடல் பருமன் குறைக்கும் தண்ணீர்

அதிக தண்ணீர் குடித்தால் உடற்பருமனைத் தடுக்கலாம் என்று புதிய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

உடற்பருமன் நோய் சர்வதேச மக்களிடம் மிகப்பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. உடற்பருமனால் உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு, மாரடைப்பு உள்ளிட்ட பல நோய்கள் ஏற்படும் வாய்ப்பு உருவாகிறது.

எனவே, உடல் எடையைக் குறைக்க பல முயற்சிகள் மேற்கொள்கின்றனர். உடற்பயிற்சி, பட்டினி போன்றவை மூலம் உடலை வருத்திக் கொள்கின்றனர்.

ஆனால் உடற்பருமனைத் தடுக்க இதுபோன்று கஷ்டப்படத் தேவையில்லை என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

பெற்றோர் தங்களது குழந்தைகளுக்கு குடிதண்ணீரை அருந்தப் பழக்க வேண்டும். இதன் மூலம் குழந்தைகளதும் பெரியவர்களதும் உடல் பருமன் ஆவதைத் தடுக்க முடியும். அதுவே உடற்பருமன், உயர் ரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய் ஏற்படக் காரண மாகிறது. சீனியின் அளவைக் குறைப்பதன் மூலம் அது போன்ற நோய்கள் ஏற்படுவது தடுக்கப்படுகிறது என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

> பெற்றோர் தங்களது குழந்தைகளுக்கு குடி தண்ணீரை அருந்தப் பழக்க வேண்டும்.






# மனிதன் கைவிட வேண்டிய தீய குணங்கள்

மனிதன் வாழ்வில் தீய குணங்களைக் கண்டிப்பாக கை விட்டு விட வேண்டும் .

அவையாவன:-

* தற்பெருமை கொள்ளுதல்.
* பிறரைக் கொடுமை செய்தல் கோபப்படுதல்.
* பிறரைப் போலவே வாழ ஆசைப்பட்டு, அதற்கேற்றபடி பாவனை செய்தல்.
* பிறர் துன்பத்தைக் கண்டு மகிழ்ச்சியடைதல்.
* பொய் பேசுதல்.
* தீய சொற்களைப் பேசுதல்.
* நல்லவர் போல் நடிக்கும் இரட்டை வேட மனப்பான்மை.
* புறம்பேசுதல்.
* தகாதவர்களுடன் சேருதலும், ஆதரவு கொடுத்தலும்.
* பாரபட்சமாக நடத்தல்.
* பொருத்தமற்றவர்களைப் புகழ்ந்து பேசுதல்.
* பொய்ச்சாட்சி கூறுதல்.
* எளியோரையும், வலிமை குறைந்தோரையும் கேலி செய்தல்.
* வாக்குறுதியை மீறுதல்
* சண்டை, சச்சரவு, வாக்குவாதம் செய்தல்.
* குறை கூறுதல்.
* வதந்தி பரப்புதல்.
* கோள் சொல்லுதல்.
* பொறாமைப்படுதல்.
* பெண்களைத் தீய நோக்குடன் பார்த்தல்.



புதன்பொய்கை

## நோவாவின் கப்பலில் எவ்வாறு சென்றது டைனோஸர்?

உலகமே வெள்ளத்தில் மூழ்கியபோது நோவாவின் கப்பலில் உயிரினங்கள் பாதுகாக்கப்பட்டதாக கிறிஸ்தவம், யூதம் மற்றும் இஸ்லாம் உள்ளிட்ட மதங்கள் நம்புகின்றன. இக்கப்பல் பற்றி தற்போதும் ஆய்வுகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் டைனோஸர் எவ்வாறு நோவாவின் கப்பலில் பயணித்திருக்கும் என்ற கேள்விக்கு சந்தேகத்துக்கிடமான, ஏற்றுக்கொள்ளத்தக்க கருத்தொன்றை அமெரிக்க நூதனசாலை வெளியிட்டுள்ளது.


அமெரிக்காவின் இடஹோவிலுள்ள நோர்வெஸ்ட் என்ற அறிவியல் நூதனசாலையின் கட்புல பிரிவு கடந்த 14ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது. அங்கு பைபிளின் பிரகாரம் 6 நாள்களில் 6 ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் கடவுள் பூமியில் உயிர்களைப் படைத்தமை தொடர்பில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.

இதன்போது சிறுவர்களுக்கு விளக்கமளிக்க உருவாக்கப்பட்ட காணொலியிலேயே டைனோஸர் எவ்வாறு பயணித்திருக்கும் என்று தன்னார்வத் தொண்டர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். நோவா அறிவாளியாக இருந்திருக்கிறார். வயதான பெரிய டைனோஸர்கள் பொருத்தமற்றவை. அவற்றின் வாழ்க்கைக் காலம் குறுகியது. எனவே சிறிய அல்லது இளம் டைனோஸர்களைக் கொண்டு சென்றிருப்பார். அவை இனப் பெருக்கம் செய்யக்கூடியவை' என விளக்கியுள்ளார். 27 அங்குல நீளமான டிப்லொடுகஸ் என்ற சிறிய டைனோஸர் இருந்ததாக நம்பப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.






# சுவாரசியமான ரயில் பயணம்



உலகெங்கிலும் பொதுப்போக்குவரத்தில் முக் கிய பங்கு வகிப்பது ரயில். புவியியல் அமைப்பின் காரணமாக சிறப்புமிக்க ரயில் வழித்தடத்தைக் கொண்டுள்ள நாடு பெரு.

தென் அமெரிக்க நாடான பெருவில் மிகக் குறைந்த அளவிலேயே ரயில் சேவைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்குக் காரணம் அந்த நாட்டின் புவி யியல் அமைப்பு. மலைப்பாங்கான பகுதிகள் அதி கம் உள்ள இந்த நாட்டின் சிறப்பு மிக்க ரயில் சேவை யாகக் கருதப்படுவது, நாட்டின் தலைநகரான லிமா முதல் மத்தியப்பகுதியில் அமைந்துள்ள ஹுயன் சாயோ வரையிலான ரயில் சேவை.


அன்டீஸ் மலைத் தொடர்வழியாகச் செல்லும் இந்த ரயில் மொத்தம் 58 பாலங்கள் மற்றும் 69 மலைக் குகைகள் வழியாகச் செல்கிறது. 6 இற்கும் மேற்பட்ட ஆபத்தான வளைவுகளையும் கடந்து செல்லும். குறிப்பிட்ட பகுதிகளில் கடல்மட்டத்தில் இருந்து 15,689 அடி உயரத்தில் செல்கிறது. இதனால் கடல் மட்டத்தில் இருந்து அதிக உயரத்தில் பயணிக்கும் ரயில்கள் பட்டியலில் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளது. வித விதமான புறச் சூழல்களைக் கடந்து செல்லும் இந்த ரயிலில் லிமா வில் இருந்து ஹுயன் சாயோ செல்ல 12 மணித் தியாலங்கள் ஆகும்.

பெரு ரயில் சேவைகளில் முக்கிய சுற்றுலாத் தல மான மச்சு பிச்சுவுக்கான சேவை முக்கிய இடத் தைப் பிடித்துள்ளது. நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்து மச்சு பிச்சுவுக்கு ரயில் சேவை வழங் கப்பட்டு வரும் நிலையில் கியூஸ்கோவில் இருந்து இயக்கப்படும் ரயில் சேவையே அவற்றில் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

மிகக் குறுகிய ரயில் பாதை வழியாக இயக் கப்படும் இந்த ரயில் கியூஸ்கோவை விட்டு வெளியேறும் போது மலையில் ஏறி பின்னர் சமவெளிப்பகுதியை நோக்கி கீழிறங்கிப் பய ணிப்பது சுற்றுலாப் பயணிகளுக்கு வித்தியாச மான அனுபவத்தைத் தருவதாக அமைந் துள்ளது.

மச்சு பிச்சுவுக்கான ரயில்களில் ஹிரம் பிங்கம் ரயில் மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. மச்சு பிச்சுவை முதன் முதலில் கண்ட றிந்தவரான அமெரிக்காவைச் சேர்ந்த ஹிரம் பிங்கம் பெயரில் இயக்கப் படும் இந்த ரயில் மிக ஆடம்பரமான வசதிகளை உள்ளடக்கி உள்ளது.

இயற்கை எழில் கொஞ்சும் வெளிப்புறக் காட்சிகளைக் கண்டு ரசிப்பதற்குத் தனிப் பகுதி, உணவு விடுதி, மதுபான விடுதி போன்ற வற்றைக் கொண்டு ஒரு குட்டி நகரமே நகர்வது போன்ற அனுபவத் தைத் தரும் வகையிலானது இந்த ரயில் பயணம். இன்கா இன மக்களின் கலாசாரத்தை அறிந்து கொள்ளும் வகையிலான இடங்களைக் கடந்து செல்லும் இந்த ரயில்ப் பயணம் கடந்த கால வரலாற்றை நினைவு கூரவும் வழிசெய்கிறது.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை ஏற்பாட்டில் நடைபெற்ற 'திரையும் அரங்கும் கலைவெளியில் ஒரு பயணம்', 'ஸ்ரீதரன் கதைகள்' ஆகிய இரு நூல்களின் அறிமுக நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன.




# தாயின் கருவில் ஆரம்பமான நாயின் நட்பு



அமெரிக்காவில் குழந்தை ஒன்று சிறு வயதி லிருந்தே நாயொன்றுடன் நட்புறவு கொண்டு வாழ்ந்து வருவது அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

அமெரிக்காவின் இந்தியானா மாநிலத்தை சேர்ந்த கார்டர் என்ற சிறுவன் தனது வீட்டு நாயான டோபியுடன் இணைபிரியாமல் வாழ்ந்து வருகிறான். இவன், தனது தாய் வயிற்றில் இருக்கும் போதே நாய் டோபி அவனது தாயைச் சுற்றி வந்து பார்த்துக் கொண்டுள்ளது.

இவர்கள் இருவரும் ஒன்றாகச் செய்யும் அட்ட காசத்தை சிறுவனின் பெற்றோர் இணையத் தளத்தில் பதிவு செய்துள்ளனர்.

இதுவரை அவர்களுக்கு 5000 இற்கும் மேற்பட்ட ரசிகர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து அவரது தாயார் டெவின் கூறுகையில், கார்டர் பிறந்ததிலிருந்து நாய் அவரைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்வதாகவும், தற்போது கார்டருடன் இணைந்து சுற்றித் திரிவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் இவர்கள் இருவரும் இணைபிரியாமல் இவ்வாறு நட்புடன் இருப்பார்கள் என ஆரம்பத் திலேயே தெரிந்ததாகவும், இதனால் தான் கார்டன் பிறந்தவுடன் ஒளிப்படம் எடுத்து இணயத்தளத்தில் வெளியிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



# சுறா



சுறா என்றழைக்கப்படும் சுறா மீன் வேகமாக நீந்த வல்ல பெரிய மீன் வகைகளில் ஒன்றாகும். இவை கூர்மையான பல பற்களைக் கொண்டுள்ளன. 22 சென்ரி மீற்றர் நீளம் உள்ள பிக்மி சுறா முதல் 12 மீற்றர் நீளம் உள்ள திமிங்கிலச் சுறா வரை சுறாக்களில் பல இனங்கள் உள்ளன. சுறா மீனின் உடல் எலும்பு வளையக் கூடிய குருத்தெலும்பால் (கசியிழைய என்பு) ஆனது.

சுறாக்கள் மிகச் சிறந்த மோப்பத் திறனைக் கொண்டுள்ளன. பத்து லட்சம் துளிகளில் ஒரு துளி இரத்தம் இருந்தாலும் இவற்றால் கால் மைல் தொலைவில் இருந்துகூட முகர்ந்து விட முடியும். சுறாக்களின் கேள் திறனும் அதிகம். நுண்ஒலிகளைக் கேட்கும் திறன் பெற்றவை. சுறாக்களுக்குக் குறைந்தது நான்கு வரிசைப் பற்கள் இருக்கும். இரையைக் குத்திக் கிழிப்பது எல்லாமே முதல் வரிசைப் பற்கள்தான். இதில் ஒரு பல் உடைந்து விழுந்தால், பின் வரிசையிலிருந்து ஒரு பல் அந்த விழுந்த இடத்துக்கு நகர்ந்து வந்துவிடும். அல்லது இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை சுறாக்களுக்குப் புதிய பல் முளைத்துவிடுகிறது. புலிச் சுறாக்களுக்கு பத்தாண்டுகளில் 24,000 பற்கள் முளைக்கின்றன. சுறாக்களால் வண்ணங்களைப் பிரித்து அறிய முடியாது. பார்வையும் கூர்மை கிடையாது. மந்தமான வெளிச்சத்தில்தான் இதற்குப் பார்வை தெளிவாகத் தெரியும். சுறாவின் உடல் எலும்புகள் எல்லாம் குருத்தெலும்பால் (கசியிழைய என்பு) ஆனவை.

சுறாக்களில் சுமார் 440 வகைகள் உள்ளன. இவற்றுள் 30 வகைகளே மனிதர்களைத் தாக்குபவை. சுறாக்குட்டிகளுக்குப் பிறக்கும் போதே பற்கள் இருக்கும். இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இவை இரண்டு குட்டிகள் போடும். சில வகை சுறாக்கள் நூறு குட்டிகள் கூடப் போடும். குட்டிகளை தாய்ச் சுறா விட்டுவிட்டுப் போய்விடும்.

இவை தாமே இரை தேடிப் பிழைத்துக் கொள்ளும். பெரிய சுறாக்கள், குட்டிச் சுறாக்களைத் தமது இரையாகக் கொண்டுவிடும். ஆனால், தாய் தனது குட்டிகளை ஒருபோதும் இரையாக்கிக் கொள்ளாது. மாதக்கணக்கில் இவை பட்டினி கிடக்கும். உடம்பு இளைக்காது. ஈரலில் சேமித்து வைக்கப்பட்டுள்ள கொழுப்பும் எண்ணெயும் இவைகளைப் பாதுகாக்கும்.வேல் சுறா 15 மீற்றர் நீளம் வரை வளரும், ட்வாப் சுறாவின் நீளம் 5 அங்குலமே.



# விடாமுயற்சி வெற்றி தரும்



உண்மையான ஞானம் பெற வேண்டும் என்ற முயற்சியில் ஈடுபட்டார் புத்தர். பல துறவிகளிடம் சீடராகச் சேர்ந்தார். பல இடங்களில் அலைந்தார். ஆண்டுகள் சென்றனவே அன்றி அவருக்கு ஞானம் கிடைக்கவில்லை. சலிப்பு அடைந்த அவர் ஞானத்தைத் தேடும் முயற்சியை விட்டுவிட்டு, நாடு திரும்பி விடலாமா என்று நினைத்தார்.

அவர் சென்று கொண்டிருந்த வழியில் குளம் ஒன்று இருந்தது. அதன் கரையில் இருந்த அணில் ஒன்று, தனது வாலைக் குளத்தின் தண்ணீரில் தோய்ப்பதும், பிறகு அந்த வாலை இழுத்து அதில் ஒட்டிக் கொண்டிருக்கும் தண்ணீரைத் தரையில் உதிர்ப்பதுமாக செயற்பட்டுக் கொண்டிருந்தது.

இதைப் பார்த்து வியப்படைந்த புத்தர், அணிலே! என்ன செய்கிறாய்? உன் வாலைக் குளத்துக்குள் விடுகிறாய். வாலில் ஒட்டி இருக்கும் தண்ணீரை வாலை ஆட்டித் தரையில் வீசுகிறாய். நீ செய்வது எனக்கு விளங்கவில்லையே! என்றார்.

அதற்கு அணில், நான் இந்தக் குளத்தை வற்ற வைக்க வேண்டும் என்று முடிவு செய்து விட்டேன். அதனால்தான் இப்படிச் செய்து கொண்டிருக்கிறேன்! என்றது.

சிரித்த அவர், அணிலே! நீ அல்ல, உன்னைப் போன்ற அணில்கள் கூட்டமே கோடி தடவை முயன்றாலும், இந்தக் குளத்தை வற்றச் செய்ய முடியுமா? என்று கேட்டார்.

முடியுமா, முடியாதா என்பதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. எனது விடாமுயற்சி என்றேனும் ஒருநாள் எனக்கு வெற்றியைத் தேடித் தரும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. இந்தக் குளம் வற்றும்வரை நான் இந்த முயற்சியை விடமாட்டேன்! என்றது.

இதைக் கேட்ட அவர், ஞானம் பெற இன்னும் முயற்சி செய்வோம். ஞானம் பெறும் வரை ஓய்வது இல்லை என்ற முடிவுக்கு வந்தார்.



# அமெரிக்க ஜனாதிபதி ஜோன் எஃப் கென்னடி

ஜோன் பிட்ஜரால்ட் கென்னடி அமெரிக்காவில் மசாசூட்ஸ் மாநிலத்தில் புரூக்ளின் என்ற நகரில் பிறந்தவர். இவர் 1961 ஆம் ஆண்டு ஜனவரி 20 ஆம் நாள் முதல் 1963 ஆம் ஆண்டு நவம்பர் 22 ஆம் நாள்வரை அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக இருந்தார். இவர் 1963 நவம்பர் 22 ஆம் திகதியன்று டெக்சாஸ் மாநிலத்திலுள்ள டல்லாஸ் நகரில் சுட்டுக் கொல்லப்பட்டார். கென்னடியின் வாழ்க்கை பற்றிய மற்ற விவரங்களைப் பொதுவாக எல்லோரும் நன்கறிவர்.

இரண்டாம் உலகப் போரின்போது தென்மேற்கு பசுபிக் பகுதியில் கடற்படைக் கப்பலில் லெப்டினண்டாகப் பணி புரிந்தார். போரின் முடிவில் அவர் தீவிர அரசியலுக்குத் திரும்பினார்.

1960 இல் நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலில் முன்னாள் உதவி ஜனாதிபதியும் குடியரசுக் கட்சி வேட்பாளருமான ரிச்சார்ட் நிக்சனைத் தோற்கடித்தார். புலிட்சர் விருது பெற்ற ஒரேயொரு அமெரிக்கத் தலைவர் இவரே ஆவார். இவரது தலைமையிலான அரசு கியூபாவின் ஏவுகணை விவகாரம், பேர்லின் சுவர் கட்டப்பட்டமை, விண்வெளி ஆய்வுப் போட்டி, அமெரிக்க குடியுரிமை விவகாரம், வியட்நாம் போரின் ஆரம்பம் போன்ற நிகழ்வுகளைச் சந்திக்க வேண்டி இருந்தது.

ம.கிங்ஸ்ரன் சுமண்றாஜ்,
புனித பத்திரிசியார் கல்லூரி

# பொது அறிவு

- கலாநிதிப்பட்டம் பெற்ற அமெரிக்க ஜனாதிபதியின் பெயர் என்ன?
  வுட்ரோ வில்சன்
- ஒலிம்பிக் தீபத்தை ஏற்றிய முதல் பெண்மணி யார்?
  என்ரிக்கெட் பாசில்லியோ
- உலகப் புகழ் பெற்ற ஈவி(f)ள் கோபுரத்தில் எத்தனை படிக்கற்கள் உள்ளன?
  729 படிக்கற்கள்
- உலகின் முதலாவது அணுகுண்டு எப்போது வீசப்பட்டது?
  1945 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி
- இலங்கையில் முதலாவது தபால் சேவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
  1858 ஆம் ஆண்டு
- மனிதர்களைப் போன்று இசையை ரசிக்கும் கடல் வாழ் உயிரினம் எது?
  டொல்பின்
- மனிதனுக்கு அடுத்தபடியாக அறிவுத் திறன் மிக்க விலங்கு எது?
  சிம்பன்ஸி
- இஸ்ரவேலின் முதல் பெண் பிரதமர் யார்?
  கோல்டா மேயர்

தா.தமிழினி, தரம்-10 ஏ
பெத்தானியா சிறுவர் இல்லம்

# புதினம் தெரியுமா?

- இடிமின்னல் நாடு என்றழைக்கப்படும் நாடு எது? பூட்டான்
- கப்பல்களின் சுடுகாடு என்றழைக்கப்படும் இடம் எது?
  சாகாஸோ கடல்
- அசாமின் துயரம் என அழைக்கப்படும் நதி எது? பிரம்ம புத்திரா
- அரபிக் கடல் ராணி என்றழைக்கப்படும் இடம் எது? கொச்சின்
- திரவத் தங்கம் எனறழைக்கப்படுவது எது? பெற்றோல்
- கனிம வாயுக் கிடங்கு என்றழைக்கப்படும் கடல் எது? கருங்கடல்
- முந்திரி, புகையிலையின் பூர்வீகம் என்றழைக்கப்படும் இடம் எது?
  தென் அமெரிக்கா
- பறவைகளின் கண்டம் என்றழைக்கப்படும் இடம் எது? தென் அமெரிக்கா
- தென் கிழக்கு ஆசியாவின் நுழைவாயில் என்று அழைக்கப்படுவது எது?
  சிங்கப்பூர்

எஸ்.தர்சனா, உரும்பிராய்
சைவத்தமிழ் வித்தியாலயம்



# உணர்ச்சிகள் உங்கள் உள் உறுப்புக்களை பாதிக்கின்றன

அதிக நேரம் பெற்றோருடன் இல்லாத மழலைகள், பெற்றோரின் அன்பான அரவணைப்பை போதுமானமுறையில் பெறாத குழந்தைகள் ஆகியோருக்கு மூளையின் பிட்யூட்டரி சுரப்பியிலிருந்து வெளிவரும் ஓமோன்களில் குறைபாடு ஏற்படுகிறது. இதனால் அவர்களின் வளர்ச்சி, ஆரோக்கியம், மனநிலை ஆகியவை பாதிக்கப் படுகின்றன என்று ஆய்வுகள் கூறுகின்றன.

சதா சர்வகாலமும் யோசனை, யோசனை என ஆழ்ந்த சிந்தனையில் மூழ்குபவர்களுக்கு மண்ணீரல் பாதிக்கப்படுகின்றது. இதன் காரணமாக அதிக சோர்வும், கவனக் குறைவும் அவர்களுக்கு ஏற்படுகின்றது.

அதிக படபடப்பு ஏற்படுவோருக்கு மூச்சுத் திணறல் பெருங்குடல் வீக்கம் போன்றவை ஏற்படுகின்றன.

மகிழ்ச்சியில் கூட தலைகால் புரியாமல் குதிப்பவர்களுக்கு தூக்கமின்மை, பரபரப்பு, நெஞ்சு படபடப்பு ஏற்படும்.


எதற்கெடுத்தாலும் பயம், பயம் என அஞ்சி நடுங்குபவருக்கு சிறுநீர் அடிக்கடி வெளியேறும். கட்டுப்பாடில்லாமல் வெளியேறும்.

கோபத்தின் விளைவாக கல்லீரல், பித்தப்பை என்பன பாதிக்கப்படும். இரத்தக் கொதிப்பு, மயக்கம், வெடிக்கும் தலைவலி என்பன ஏற்படும்.

அதிக துக்கம் உடலை சக்தி இழக்கச் செய்யும். நுரையீரல் பாதிப்பு ஏற்படும். உழைப்பில்லாமல் சதா உட்கார்ந்தே காலம் தள்ளினால் தசைத் தேய்வு ஏற்படும். நீங்கள் 30 வயதுக்கு மேற்பட்டவராக இருந்து தொடர்ந்து ஒரு மணி நேரம் நீங்கள் தொலைக்காட்சிப்பெட்டி முன் அமர்ந்திருந்தால் உங்கள் வாழ்வில் 20 நிமிடங்களாவது குறைகின்றது என்பதை உணருங்கள்.

நாள் ஒன்றுக்கு சுமார் 15 மணி நேரத்தில் 50 சதவீதம் முதல் 70 சதவீதம் வரை அதிக உடல் உழைப்பின்றியே செல்கின்றது. இதுவே அதிக நோய்களுக்கு காரணம் ஆகின்றது.

காலையில் 6 மணிக்காவது எழும் வழக்கத்தைப் பழக்கப்படுத்துங்கள். மன பலம் இல்லாதவரே மன்னிக்கத் தெரி



யாதவர். எனவே நீங்கள் பலம் மிகுந்தவராக மறக்கவும், மன்னிக்கவும் செய்யுங்கள். உடல் நலமும், உள நலமும் சிறப்பாக அமையும்.

# செ ம்புக் குடத்தில் த ணீர் எடுப்பதால் ஏ படும் நன்மை

அந்தக் காலங்களில் எமது முன்னோர்கள், செம்புக் குடங்களில் தான் தண்ணீரை பிடித்து வைப்பார்கள். ஆனால் இன்றோ, நாடே நவீன மயமாகிவிட்டதால், கான் தண்ணீர், போத்தல் தண்ணீர் என்று பல வழிமுறைகள் முந்திக்கொண்டு வர செம்புக் குடங்கள் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டன.

ஆனால், வீட்டுக்கு ஒரு செம்புத் தகடு இருந்தாலே போதும், அருமையான போத்தல் தண்ணீர் கிடைத்துவிடும். மாதம் நூற்றுக்கணக்கான ரூபாய் மிச்சமாகும். தண்ணீர் செம்பு குடங்களில் எடுத்து வைப்பார்கள் ஏன் தெரியுமா?

'மைசூரில் இருக்கிற அஜய் நினைவு குடிதண்ணீர் நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள், செம்புப் பாத்திரத்தில் தண்ணீரை வைத்து ஓர் ஆராய்ச்சி நடத்தினார்கள்.

அதன் முடிவில், செம்புப் பாத்திரத்தில் 24-மணி நேரம் குடிதண்ணீரை வைத்திருந்து பரிசோதித்துப் பார்த்ததில், மனிதர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் நுண்ணுயிரிகள் எதுவும் அந்த நீரில் இல்லை என்று அந்த நிறுவனம் அறிவித்தது.

இந்தத்தகவல் தெரிந்ததிலிருந்து செம்புக் குடத்தில் வைத்திருந்துதான் தண்ணீரைக் குடிக்கின்றார்கள். கிணற்றில் கிடைக்கின்ற தண்ணீர், செம்புக் குடத்துக்குப் போனதும் போத்தல் தண்ணீர் மாதிரி அருமையாக மாறிவிடுகிறதாம்.



செம்புக்குடம் இல்லாவிட்டால் பரவாயில்லை. ஒரு கையளவு செப்புத் தகட்டை குடத்துக்குள்ள போட்டு வைத்தால்கூட உங்கள் வீட்டுத் தண்ணீர் தரமானதாக மாறிவிடும்.


3 நாளைக்கு ஒரு தரம் செம்புத் தகட்டை எடுத்துப் பார்த்தால் பாசி படிந்த மாதிரி இருக்கும். அதெல்லாம் பக்ரீரியாக்கள்தான். தகட்டைச் சுத்தமாக கழுவிவிட்டு திரும்பவும் குடத்துக்குள் போட்டு வைக்கலாம். அந்தக் காலத்தில் பல வீடுகளில் செம்புக் குடம்தான். இன்றைக்கும் சில கிராமங்களில் செம்புப் குடத்தில்தான் தண்ணீர் எடுத்துவைத்து அருந்துகின்றனர்.

# எள்ளி நகையாடப்பட்ட மேதைகள்

ஒவ்வொரு துறையிலும் உச்சாணிக் கொப்பை எட்டிய மேதைகளை பொதுவாக நாம் அதிசயப் பிறவிகள் என்று நினைக்கிறோம். எல்லா அம்சங்களும் சரிவர அமையப்பெற்று அதிர்ஷ்டமும் ஒத்துழைத்ததால் தான் அவர்கள் அந்தந்தத்துறையில் சிகரங்களைத் தொட முடிந்ததென்றும் எண்ணுகிறோம். ஆனால் அவர்களும் அந்த இடத்தை அடையும் முன்னர் எப்படியெல்லாம் தோற்றிருக்கிறார்கள். எள்ளி நகையாடப்பட்டு இருக்கிறார்கள் என்பதற்கு இதோ சில தகவல்கள்-



லியோ டால்ஸ்டாய்




தோமஸ் அல்வா எடிசன்

இசை மேதை என்று ஒருமனதாக உலகம் இன்றும் பாராட்டும் பிதோவன் தனது இள வயதில் வயலினைச் சரியாகக் கையாள முடியாதவராக இருந்தார்.

சொல்லிக் கொடுத்தவற்றைச் சரியாக வாசிப்பதை விட்டு தனது சொந்தப் பாணியில் வாசிப்பதை வாடிக்கையாகக் கொண்டு இருந்த அவரை அவருடைய ஆசிரியர் 'உருப்படாத கேஸ்' என்று கணித்திருந்தார்.

உலகில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புக்களைச் செய்த ஒரே விஞ்ஞானியான தோமஸ் அல்வா எடிசனுடைய ஆசிரியர்கள் எதையும் கற்றுக்கொள்ள இயலாத முட்டாள் என்று எடிசனுக்குப் பட்டம் சூட்டி இருந்தனர்.


**“ 20 ஆம் நூற்றாண்டின் இணையற்ற விஞ்ஞானியும், உலக விஞ்ஞானம் செல்லும் பாதையை முழுவதுமாக மாற்றி விட்டவருமான ஐன்ஸ்டீன் 4 வயது வரை பேசவில்லை. ஏழு வயதுவரை படிக்கவில்லை. அவருடைய பாடசாலை ஆசிரியர், அவரை மிக மந்தமானவன். மற்றவர்களுடன் நன்றாகக் கலந்து பழகாதவன். எப்போதும் முட்டாள்தனமான கற்பனை உலகில் இருப்பவன் என்று கூறினார்.**



ஐன்ஸ்டீன்



வால்ட் டிஸ்னி



வின்ஸ்டன் சர்ச்சில்

தனது கற்பனைத் திறத்தால் 'டிஸ்னி லேண்ட்'டை உருவாக்கி கோடிஸ்வரராகி இன்றளவும் பேசப்படும் வால்ட் டிஸ்னி ஆரம்பத்தில் ஒரு பத்திரிகையில் வேலை செய்து கொண்டிருந்தார். புதுமையாக எதையும் செய்யத் தெரியாதவர் என்று அவரை அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் வேலையை விட்டு நீக்கி விட்டார். அதன்பின்னர் வால்ட் டிஸ்னி பல வியாபாரங்கள் செய்து அவற்றிலும் பெரிய நட்டத்தை அடைந்தார்.

உலகப் புகழ்பெற்ற ரஷ்ய எழுத்தாளரான லியோ டால்ஸ்டாய் கல்லூரிப் படிப்பில் தோல்வி அடைந்தவர். படிக்க முடியாத, படிக்க விரும்பாத மாணவன் என்று பெயரெடுத்தவர்.

20 ஆம் நூற்றாண்டின் இணையற்ற விஞ்ஞானியும், உலக விஞ்ஞானம் செல்லும் பாதையை முழுவதுமாக மாற்றிவிட்டவருமான ஐன்ஸ்டீன் 4 வயது வாய்பேச இயலாதவராக இருந்தார். ஏழு வயதுவரை படிக்கவில்லை. அவருடைய பாடசாலை ஆசிரியர், அவரை மிக மந்தமானவன். மற்றவர்களுடன் கலந்து பழகாதவன். எப்போதும் முட்டாள்தனமான கற்பனை உலகில் இருப்பவன் என்றுகூறினார். ஜூரிச் பொலிடெக்னிக் பாடசாலையில் படிக்க ஐன்ஸ் டீனுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

பிரிட்டனின் பிரதமராகவும், இரண்டாம் உலகப் போரில் உலக சரித்திரத்தில் முக்கிய பங்கு வகித்தவருமான வின்ஸ்டன் சர்ச்சில் தலைசிறந்த பேச்சாளரும்கூட. அவர் ஆறாம் வகுப்புடன் கல்வியை நிறுத்தியவர். தொடர்ந்து அரசியலில் இருந்தாலும் தன் 62 வயதாகும் வரை அவரால் பிரதமராக முடியவில்லை. ரிச்சர்ட் பாக் என்ற பிரபல நாவலாசிரியர் ஜோனாதன் லிவிங்ஸ்டோன் என்ற 10 ஆயிரம் சொற்கள் கொண்ட நாவல் ஒன்று எழுதினார். 18 பிரபல பிரசுரங்கள் அவரது நாவலைப் பிரசுரிக்க மறுத்து நிராகரித்தன. கடைசியாக மேக்மில்லன் நிறுவனம் 1970 இல் பிரசுரம் செய்தது.

1975 இற்குள் அமெரிக்காவில் மட்டும் 7 மில்லியன் பிரதிகள் விற்றுத் தீர்ந்த அந்தப் புத்தகம் இன்றும் மிகப்பிரபலமாக உள்ளது. 'இவனை ஏதாவது ஒரு வழியில் உருப்பட வைக்க முடியுமா என்று பாருங்கள்' என்று பயனில்லாமல் சுற்றித் திரிந்த மகனை அழைத்து வந்து கிழக்கிந்திய நிறுவன அதிகாரிகளிடம் ஒரு தாய் கூறினார். அவனை அப்படியே இந்தியாவுக்கு அவர்களும் அனுப்பிவைத்தனர். அவன் தான் இந்தியாவில் ஆங்கில சாம்ராஜ்ஜியத்துக்கு அடி கோலிய ராபர்ட் க்ளைவ்.

இப்படி எல்லாத்துறைகளிலும் பெரும் சாதனை படைத்தவர்கள் தோல்விகளையும், கேவலமான விமர்சனங்களையும் சந்தித்திருக்கிறார்கள். வெற்றியின் பாதை பூக்களால் நிரப்பப்பட்டதல்ல. படிப்படியாக தோல்விகளையும், தளர்வடைய வைக்கும் விமர்சனங்களையும் சந்திக்கும்போது அவர்களை நினைவுபடுத்திக் கொண்டு உற்சாகமாகத் தொடருங்கள். நீங்களும் சரித்திரத்தில் இடம்பெறக்கூடும்.





# உயிரினங்களின் நடத்தைகளை கணிக்க விதிகள் இல்லை

சூரியனை வலம் வரும் கோள்கள், துப்பாக்கியிலிருந்து பாயும் குண்டு, ஊடகங்களுக்குள் பயணிக்கும் ஒளி போன்றவற்றின் இயற்பியல் நடத்தைகளைக் கணித முறைகளின் மூலம் துல்லியமாகக் கணித்து விடலாம். ஆனால் உயிரினங்களின் நடத்தைகளை அவ்வாறு கணிக்க விதிகள் இல்லை. தெருவில் நடக்கிற ஒரு பசு தரையில் கிடக்கிற ஓர் எச்சிலிலையை உண்ணுமா? உண்ணாதா? என்று உறுதியாகச் சொல்ல முடியாது.

அதேபோல ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் ஒரு மனிதன் எப்படி நடந்து கொள்வான் என்பதைப் பொதுவான இயற்கை விதிகளின் மூலம் ஊகிக்க முடியாது. அவனது நடத்தைக்குக் காரணமும் கண்டுபிடிக்க முடியாது. ஆனால் உயிரினங்களின் நடத்தைகளும் இயற்கை விதிகளுக்குக் கட்டுப்பட்டவைதான். அவற்றை நிர்ணயிக்கின்ற எல்லாக் காரணிகளையும் கண்டுபிடிப்பதுதான் நடவாத காரியம். அவற்றின் எண்ணிக்கை மிக அதிகம். அவற்றுள் பல மற்றைய காரணிகளுடன் இசைந்தோ எதிரிடையாகவோ செயற்படக்கூடியவை.

1879ஆம் ஆண்டில் வில்ஹெம் உண்ட் என்ற ஜேர்மனிய உடற்செயலியல் ஆய்வர், மனித நடத்தைகளை அறிவியல் அடிப்படையில் ஆராயும் முதல் ஆய்வகத்தை நிறுவினார். அவர் மனிதனின் முக்கியமான உணர்வுகளையும் அவன் தன்னைச் சுற்றியிருக்கிற விடயங்களைப் பார்க்கிற பாங்குகளையும் பற்றி ஆய்வு செய்தார்.

1881ஆம் ஆண்டில் மனிதன் 'உலகம் என்ற மாபெரும் இயந்திரத்தில் ஒரு பல் சக்கரத்தைப் போன்றவன்' என்ற கருத்தை பிரடரிக் வின்ஸ்லோ டெய்லர் என்ற அமெரிக்கப் பொறியியலாளர் வெளியிட்டார். அவர் ஒவ்வொரு பணியையும் மனிதர் செய்து முடிக்க செலவாகும் நேரத்தை அளவிட்டு அதைக் குறைப்பதற்கான உத்திகளை வகுத்தார். மனிதரின் செயலுறுதிறனை மேம்படுத்த முனைந்த முதலாவது நிபுணர் அவர்தான். அதன் காரணமாகவே தொழிலாளர்களுக்கு அவரைப் பிடிக்காமல் போயிற்று.

கட்டுப்பாடான சூழ்நிலையில் ஆய்வகத்தில் சோதனை விலங்காக வைக்கப்படும் ஒரு மனிதனின் நடத்தைகளையும், கட்டுப்பாடற்ற ஒரு தொழிற்சாலையில் பணியாற்றுகின்றவனின் நடத்தைகளையும் ஒப்பிட்டுச் சோதிக்க உதவும் வழிமுறைகள் உருவாக்கப்படவில்லை. எளிய உயிரினங்களில் நாட்டம் என்கிற பண்பு உள்ளது.

தாவரங்கள் வெயில் வரும் திசையில் வளரும். அவற்றின் வேர்கள் நீர் உள்ள திசையில் நீளும். பூச்சிகள் குறிப்பிட்ட மணம் வீசும் பொருள்களை நாடி வரும். இவ்வாறான அனிச்சைப் பண்புகள் மனிதர்களிலும் காணப்படும்.

ஒரு மனிதச் சிசு தாயின் வயிற்றிலிருந்து வெளிப்பட்டவுடன் அதன் உள்ளங்கையைத் தொட்டால் அதன் விரல்கள் மடங்கி, தொடும் விரலை இறுகப் பிடித்துக் கொள்ளும். அதன் தாய் பாலூட்டினால் உதடுகளைக் குவித்து உறிஞ்சத் தொடங்கும். இச்செயல்களுக்கு 'உள்ளுணர்வு' என்ற பண்பைக் காரணமாகச் சொல்கிறார்கள்.

குழந்தைகளின் மனதில் அவை பிறந்த கணத்திலிருந்தே பதிவுகள் தொடங்குகின்றன. வெறும் ஒலிகளாக அறிமுகமாயிருந்த தாயை அவை ஐம்புலன்களாலும் அறிய முற்படும். அந்தக் கட்டத்தில் தாய்மார்கள் 'ஜீ ஜீ'... ச்சூச்சூ' என்றெல்லாம் அர்த்தமற்ற ஒலிகளை வெளியிட்டுக் கொஞ்சுவது தவறு என உளவியலாளர்கள் கூறுவர். தெளிவான சொற்களால் கொஞ்சப்படாத குழந்தைகள் பிற்காலத்தில் தெளிவாகப்பேசும் திறன் அற்றவர்களாக அல்லது முழு வாக்கியங்களாகப் பேச முடியாதவர்களாக ஆகிவிடும் ஆபத்து உள்ளது.

வளர் நிலையில் சிறுவர் சிறுமியருக்கு தம்மை யொத்த வயதுள்ளவர்களின் சகவாசமும் தேவை. அவ்வாறான மனக் கிளர்வுகள் கிடைக்கப் பெறாதவர்கள் பிற்காலத்தில் வக்கிர குணங்களை அடைகிறார்கள்.

அனிச்சை விளைவுகளும் மனப் பதிவுகளும் சிசுப் பருவத்தில் மட்டுமே முக்கியமானவை என்று விட்டுவிட முடியாது. வயது அதிகமாகும்போது பட்டறிவும் பகுத்தறிவும் அதிகரித்து விடும்; அனிச்சைச்செயற்பாடுகள் குறையும் என்பது சந்தேகத்துக்குரியது. சுயவிருப்பம், சுயபுத்தி போன்றவையும் உறுதியாக நிரூபிக்கப்படாதவை. பல அம்சங்களில் மனித நடத்தை முழுக்க முழுக்க அக்கணத்துத் தூண்டல்களாலேயே தீர்மானிக்கப்படுகின்றன.

எல்லாவிதமான பயில்தல்களும் கட்டுப்படுத்தப்பட்ட மறுவினைகளே. தட்டச்சுக் கருவியைப் பயன்படுத்தப் பயிலும்போது ஒவ்வொரு எழுத்துச் சாவியையும் கண்ணால் பார்த்தே அழுத்த வேண்டியிருக்கும். பயிற்சி அதிகரிக்க கண்ணை மூடிக் கொண்டே தட்டச்சு செய்ய விரல்களுக்குப் பழக்கம் ஏற்பட்டு விடும்.

நீண்டகால அனுபவம் உள்ள தட்டச்சரிடம், சாவிப் பலகையில் ஒரு குறிப்பிட்ட எழுத்து எங்கேயிருக்கும் என்று கேட்டால் அவர் உடனடியாகப் பதிலளிக்க மாட்டார். காற்றில் தட்டச்சு செய்வதைப் போல விரல்களை அலைய விட்டு அந்த எழுத்தைத் தட்டும் விரல் எங்கே போகிறது என்று பார்த்தே அந்த எழுத்தின் இடத்தை அவர் கூறுவார்.

மனதுக்கு சாவிப் பலகையின் அமைப்பு மறந்தாலும் விரல்களுக்கு மறப்பதில்லை. வீணை, வயலின் போன்ற இசைக் கலைஞர்களின் விரல்களும் இவ்விதமான அறிவுள்ளவையே.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ஜான் பிராடஸ் வாட்சன் என்ற அமெரிக்க உளவியலாளர் மனிதரின் நடத்தையைக் கட்டுப்பாடு செய்ய முடியும் என்று வாதித்து அதனடிப்படையில் நடத்தையியல் என்ற கோட்பாட்டை உருவாக்கினார். மனிதன் தனது நடத்தைகளை தனது விருப்பப்படி அமைத்துக் கொள்ள முடியாது எனவும் அவன் உட்படும் கட்டுப்பாடுகளுக்கு ஏற்பவே அவை அமையும் என்றும் அவர் வாதித்தார்.

ஆனால் ஆக்க ரீதியான மதியூகம், கவின் கலைத் திறமைகள், நாணயம் மற்றும் நியாய உணர்வு போன்ற நடத்தைகளின் தன்மையை அவரால் விளக்க முடியவில்லை. ஆயினும் இராணுவம், பொலிஸ்துறை போன்ற அமைப்புகளில் அவருடைய கருத்துகள் செயற்படுத்தப்படுகின்றன.

மனிதனுக்கு நினைவாற்றல் அதிகம். ஒரு சாவி தொலைந்து போனால் அது வழக்கமாக எங்கே வைக்கப்படும், யார் யார் அதைப் பயன்படுத்துவார்கள். கடைசியாக யார் அதைப் பயன்படுத்தினார்கள் எனப் பல கேள்விகளுக்கு விடை கண்டு அதைத் தேடிக் கண்டுபிடிக்கிறோம்.

மனிதன் தனது நீண்டகால அனுபவத்தைப் பயன்படுத்தி முயற்சி மற்றும் தோல்விகளைக் குறைத்துக் கொள்ள முடிகிறது. மனதுக்குள்ளேயே கேள்வி கேட்டு விடை கண்டு தீர்வு காண மனிதரால் முடியும். இதுவே பகுத்தறிவு எனப்படும்.

இதயத் துடிப்பு, இரத்த அழுத்தம், குடல் அலைவியக்கம் போன்றவை உடலின் சுயாதிக்க நரம்பு மண்டலத்தின் ஆளுகையிலிருப்பவை எனவும் மனமறிந்து அவற்றை மாற்ற முடியாது எனவும் நீண்டகாலமாக நம்பப்பட்டு வந்தது. யோக முறையில் தேர்ச்சி பெற்றவர்கள் இதயத் துடிப்பு, ரத்த அழுத்தம் போன்றவற்றைத் தமது விருப்பப்படி மாற்ற முடியும் என்று நிரூபித்திருக்கிறார்கள்.

உல்ப்காங் கோஹ்லர் என்ற ஜேர்மனிய உளவியலாளர் பயில்தல் என்பது ஒரு செயலின் எல்லாக் கூறுகளும் சம்பந்தப்பட்டது என்றும் அதன் தனித்தனிக் கூறுகள் மட்டும் பயில்தலை நிறைவு செய்யமாட்டா என்றும் நிரூபித்தார்.

ஓர் ஆய்வின்போது சிம்பன்சி, கிப்பன், கொரில்லா, உராங் உட்டான் ஆகிய குரங்கினங்களின் குட்டிகளை மனிதக் குழந்தைகளுடன் சேர்த்து வளர்த்து ஆராயப்பட்டது. ஆரம்பத்தில் குரங்குக் குட்டிகள் மனிதக் குழந்தைகளை விட வேகமாக அறிவு வளர்ச்சியடைந்தன. ஆனால் குழந்தைகள் பேசப் பழகிய பின் குட்டிகளின் அறிவு வளர்ச்சி பின்தங்கி விட்டது. குட்டிகளின் மூளையில் ப்ரோக்கா மடிப்பு என்ற பகுதியில்லாமல் போனதே அதற்குக் காரணம்.

நீல் எல்கார் மில்லர் என்ற அமெரிக்க ஆய்வாளர் குழுவினர், எலிகளை வைத்துச் செய்த ஒரு சோதனையில் அவற்றின் இரத்த அழுத்தம் அல்லது இதயத் துடிப்பு வேகம் அதிகரித்த போதெல்லாம் அவற்றுக்கு உண்பொருள்களை அளித்தார்கள். சில வாரங்களுக்குப் பின்னர் எலிகள் உண்பொருளைப் பெறுவதற்காகத் தமது இரத்த அழுத்தம், இதயத் துடிப்பு ஆகியவற்றை விரும்பியபடி அதிகரித்துக் கொள்ளப் பழகிவிட்டன.

இதையொத்த ஓர் ஆய்வில் ஆண்களின் இரத்த அழுத்தம் உயர்ந்தபோது அல்லது இறங்கியபோது அவர்களுக்கு எதிரிலிருந்த ஒரு திரையில் ஒரு நிர்வாண அழகியின் பிம்பம் தோன்றுமாறு செய்யப்பட்டது. நேரம் செல்லச்செல்ல அந்தக் காட்சி திரையில் அடிக்கடி வரத்தொடங்கியது. அவர்களுடைய மனதில் அந்தக் காட்சியைப் பார்க்க வேண்டும் என்ற வேட்கை ஏற்பட்டு, அவர்களையுமறியாமல் இரத்த அழுத்தம் அடிக்கடி ஏறியிறங்கியதே அதற்குக் காரணம்.

அண்மைக் காலத்தில் சிறப்பான, செம்மையான முறைகளில் செய்யப்பட்ட ஆய்வுகள் மனிதன் தனது இரத்த அழுத்தம், இதயத் துடிப்பு, உடல் வெப்பநிலை ஆகியவற்றில் ஏற்படுகிற மாற்றங்களைச் சதா உணர்ந்து கொண்டேயிருக்கப் பழகிவிட்டால், அதன் பிறகு தன் விருப்பப்படி அவற்றில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும் என்று காட்டுகின்றன. இந்தச் செயல்முறை உயிரியல் பின்னூட்டம் எனப்படுகிறது.

கட்டுப்பாடான சூழ்நிலை
ஆய்வகத்தில் சோதனை
விலங்காக வைக்கப்படும்
மனிதனின் நடத்தைகை
கட்டுப்பாடற்ற ஒரு
தொழிற்சாலையில் பணி
யாற்றுகின்றவனின் நடத்
களையும் ஒப்பிட்டுச் சோ
உதவும் வழிமுறைகள்
உருவாக்கப்படவில்லை.
உயிரினங்களில் நாட்டம்
பண்பு உள்ளது.
தாவரங்கள் வெயில் வரு
திசையில் வளரும். அவ
வேர்கள் நீர் உள்ள திசை
நீளும். பூச்சிகள் குறிப்பிட
மணம் வீசும் பொருள்கள
நாடி வரும். இவ்வாறான
அனிச்சைப் பண்புகள்
மனிதர்களிலும் காணப



# வேற்று கிரகவாசிகளை நெருங்கிய ஆய்வாளர்கள்



அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஒருவர் இன்னும் 20 ஆண்டுகளில் வேற்றுக் கிரகவாசிகளை விஞ்ஞானிகள் கண்டறிந்து விடக்கூடும் என்று கூறியுள்ளார்.

கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள எஸ்.ஈ.டி.ஐ. எனப்படும் வேற்று கிரகவாசிகளைக் கண்டறியும் அமைப்பைச் சேர்ந்த சேத் சொஸ்தக், நாடாளுமன்றத்தில் இதனைத் தெரிவித்துள்ளார்.

சொஸ்தக் இத்தகைய கணிப்பைத் தெரிவிப்பதற்கு ஏற்ப எஸ்.ஈ.டி.ஐ. அமைப்பில் புதிய ஆச்சரியமூட்டும் கருவிகள் உள்ளன. அவை ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கி மற்றும் கெப்ளர் விண்வெளி ஆய்வு செயற்கைக் கோள் ஆகியவை ஆகும்.

நாசாவால் விண்வெளிக்குச் செலுத்தப்பட்டு உள்ள கெப்ளர் இதுவரை 72 நட்சத்திரக் கூட்டங்களில் உள்ள 962 வேற்று கிரகங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் கெப்ளர்-10சி ஒன்றாகும், இது பூமியைப் போன்று 17 மடங்கு எடை கொண்டது. கெப்ளர் தொலைநோக்கி 2,900 கண்டு பிடிப்புகளைக் கண்டறிய சாத்தியம் உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இது கடந்த 2009 ஆம் ஆண்டில் இருந்துதான் செயற்படத் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. எனவே, பூமியைப் போன்ற கிரகங்கள் ஏராளமாக உள்ளன என்பதை இது காட்டுகிறது. கெப்ளர் கண்டுபிடிப்புகளால் பூமியைத் தவிர்த்து 40 பில்லியன் கிரகங்கள் பால்வழி மண்டலத்தில் இருக்கக் கூடும். எனவே, அவற்றில் வேற்று கிரகவாசிகள் வாழும் சூழலுக்கான வாய்ப்பும் உள்ளது.

பூமியின் வரலாற்றில் உயிர் என்றால் பக்ரீரியா, அமீபா மற்றும் ஆல்கா ஆகியவற்றையும் குறிக்கும். இவை வேற்றுக் கிரகங்களிலும் இருக்கக்கூடும். எனவே, இந்த அமைப்பானது, வேற்றுக் கிரக வாசிகளின் வாழ்க்கை குறித்த தேடலுடன், அவர்களின் வாழ்க்கை முறையின் தேடலிலும் ஈடுபட்டு உள்ளது. இதனால் அவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ள முடியும். பூமியைப் போன்ற கிரகங்களை குறித்த தேட லில், ரேடியோ அலைகள் குறித்தும் கவனத்தில் கொண் டுள்ளது.

இதுபோன்று எம்.ஈ.டி.ஐ. எனப்படும் வேற்று கிரக வாசிகளுடன் தகவல் பரிமாறி கொள்ளும் திட்டமும் உருவாக்கப்பட்டுள்ளது.

இது கவனித்தலுடன் அதிக சத்தத்துடன் கத்துதல், எம்மைக் குறித்து அறிவித்தல், எங்கு உள்ளோம் என்று தெரிவித்தல் ஆகியவற்றையும் குறிக்கும். எனினும், இந்த வேற்றுக் கிரகவாசிகள் எம்மை எப்படி பார்ப்பார்கள் என்று ஆய்வாளர்கள் ஆச்சரியத்தில் உள்ளனர்.

நாசாவால் விண்வெளிக்கு செலுத்தப்பட்டு உள்ள கெப்ளர் இதுவரை 72 நட்சத்திர கூட்டங்களில் உள்ள 962 வேற்று கிரகங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவற்றில் கெப்ளர்-10சி ஒன்றாகும். இது பூமியைப் போன்று 17 மடங்கு எடை கொண்டது. கெப்ளர் தொலைநோக்கி 2,900 கண்டு பிடிப்புகளைக் கண்டறிய சாத்தியம் உள்ளதாகவும் கூறப்படுகிறது.









# டொல்பின்களூடாக வேற்றுக்கிரக வாசிகளை உணர முயற்சி

சமீபத்தில் அந்தத்திட்டம் பற்றிய ஆவணப்படம் பி பி.சியில் ஒளி-ஒலிபரப்பப்பட்டது. அதைத் தொடர்ந்து மீண்டும் டொல்பின்களுடனான தொடர்பாடல் திட்டத்தை நாஸா ஆரம்பிக்க உள்ளது. பூமியில் மனிதனுக்கு அடுத்தபடியாக வாழும் புத்திசாலி உயிரினமாக டொல்பின்கள் கணிக்கப்படுகின்றன.

1965 ஆம் ஆண்டு நாஸாவின் மேல்பார்வையின் கீழ் மார்கரீட்டா என்ற பெண், சில அடி உயரமான நீர்த்தடாகமுள்ள ஒரு அறையில் பீட்டர் என பெயர் சூட்டப்பட்ட டொல்பினுடன் சுமார் 6 மாதங்கள் பொழுதைக் கழித்தார். அதாவது டொல்பினுடன் பேசுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சி இது. அப்படிப் பெண்ணின் கட்டளைகளை பீட்டர் ஏற்றுக்கொள்ள ஆரம்பித்தபோதும், பீட்டரின் பாலியல் நடத்தையில் ஏற்பட்ட தடங்கல்களால் முயற்சி கைவிடப்பட்டது.

தற்போது சமீபத்தில் அந்தத் திட்டம் பற்றிய ஆவணப்படம் பி.பி.சியில் ஒளி-ஒலிபரப்பப்பட்டது. அதைத் தொடர்ந்து மீண்டும் டொல்பின்களுடனான தொடர்பாடல் திட்டத்தை நாஸா ஆரம்பிக்க உள்ளது. பூமியில் மனிதனுக்குத் அடுத்தபடியாக வாழும் புத்திசாலி உயிரினமாக டொல்பின்கள் கணிக்கப்படுகின்றன. டொல்பின்கள் ஏலியன்ஸ் எனப்படும் வேற்றுக்கிரக வாசிகளின் சமிக்ஞைகளையும் உணரும் தன்மை உடையன என்றும், மனித ஆழ்மன சக்திகளை வெளிக்கொண்டுவர உதவுவன என்றும் நம்பப்படுவது குறிப்பிடத்தக்கது.

# மூவருக்கு பிறக்கப்போகும் குழந்தை விரைவில்

பலரின் பரம்பரை இயல்புகள் மூலக்கூறுகளில் இருந்து திறமையான பரம்பரை இயல்பு மூலக்கூறுகளை பிரித்தெடுத்து ஒரு திறமையான மனிதக்குழந்தையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணக்கரு விஞ்ஞானிகளிடையே நீண்டகாலமாக உள்ளது. விலங்குகளிடையே மட்டும் அனுமதிக்கப்பட்ட இந்தத் தொழில் நுட்பம் முதன் முதலாக மனிதர்களிடையே பரீட்சித்துப் பார்க்க அனுமதிக்கப்பட உள்ளது. கடந்தவாரம் இந்தத்திட்டத்தின் பாதுகாப்பு, நம்பகத்தன்மை, பயனைக்கருத்திற் கொண்டு பிரிட்டன் இதனை அனுமதிக்க முடிவெடுத்துள்ளது. மூன்று நபர்களின் மரபணுக்களைக் கொண்டு உருவாக உள்ள குழந்தையை டிசைனர் பேபி (Designer baby) என்று வர்ணிக்கின்றார் கள். மிற்றோசொன்டிறியா (mitochon-dria ) என்ற மரபணு நோயுள்ள பெண்ணுக்கு அந்த மரபணு நீக்கப்பட்டு குழந்தை பிறப்பிக்கப் பட்டது. மிற்றோ சொன்டிறியா நோய் என்பது பார்வைக் கோளாறு, இதய செயல் இழப்பு எனப் பல நோய்கள் ஏற்பட காரணமான ஒரு நோயாகும். திடீரென இரத்தத்தில் இருக்கும் குறித்த சில செல்களின் செயல் இழப்பே இதற்கான காரணம். பெண்களின் பரம்பரை இயல்புகள் மட்டுமே இவ் நோயை கடத்தும். அமெரிக்காவில் மட்டும் வருடாந்தம் 4000 குழந்தைகள் இந்த மரபணுவுடன் பிறப்பதாக அறியப் பட்டுள்ளது. designer baby, mitochondria என்ற கூகுளில் தேடுவதன் மூலம் இது குறித்து மேலும் அறியலாம்.

